மாநகர சபை, யாழ்ப்பாணம்.

ஜூலை. 13- ஜூலை. 19, 2008 July 13 - July 19, 2008 பக்கங்கள் - 28 25.00

# சுடர் ஒளி

THE SUDAROLI
வார மலர்
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA









## பொட்டம்மானை 'பணயம்' கேட்கும் புதுடில்லி!

## கிழக்குத் தலைமையில் மீண்டுமிருக்க கோட்டபாய வகுத்த திட்டம்:

கருணா-பிள்ளையான் குழப்பம்!

வடக்கு மீது கண் வைத்துத் தமது நடவடிக்கைகளை அரசு படைகள் முன்னெடுக்க - கிழக்கு அல்லது யாழ்ப்பாணம் மீது 'கண்' வைத்து நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் முன்னெடுக்க -

இந்த இரு அணிகளின்

தொடங்கியுள்ளன.

பொலீஸாரை, படையினரை இலக்கு வைத்துக் கிளைமோர் தாக்குதல்கள், துப்பாக்கிச்சூடுகள், ஷெல்தாக்குதல்கள் எனப் பரவலாகத் தாக்குதல்கள் ஆரம்பமாகிவிட்டன.

கிழக்கில் மீண்டும் உயிர்ப்பித்துள்ள

200 விடுதலைப்புலிகள் இருக்கின்றனர் என்று ஒரு தகவலும் வெளியாகியுள்ளது.

கிழக்கில் எமது படையணிகள் இன்னும் உள்ளன. அவை தங்கள் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. காலம் வரும்போது கிழக்கு மீட்கப்படும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் கூறியுள்ளார்.

கிழக்கை மீட்கும்

# 'சார்க்' மாநாடும் விடுதலைப் புலிகளும்

செயற்பாடுகளையும் பார்த்துக்கொண்டு தனது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளக்கூடிய செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது அரசுத்தலைமை.

நாடு எக்கேடு கெட்டுப்போனாலும் பரவாயில்லை. மக்கள் பட்டினியால் செத்தால் என்ன, நாங்கள் ஆட்சியை நடத்தினால் போதும் என்ற நிலைப் பாட்டுடன் செயற்படுகின்றது அரசுத் தலைமை.

வடக்கைப் பயங்கரவாதிகளிடம் இருந்து மீட்கப் பெரும் யுத்தம் ஒன்றைச் செய்வதாக மாயை ஒன்றைச் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கி தனது ஆட்சிக் கதிரையைக் காப்பாற்ற அரசுத் தலைமை முனைந்து நிற்கிறது.

போர்முனைகளில் உயிரிழக்கும் படையினரின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைப்பதாலும் காயம் அடையும் படையினரை வைத்தியசாலைகளில் சேர்ப்பதாலும் சிங்கள மக்கள் மத்தியில் சலசலப்பு ஒன்று தற்சமயம் உருவாகியுள்ளது.

பொருளாதாரச் சுமையைத் தாங்க முடியாது கஷ்டமுறும் சிங்கள மக்கள் யுத்த முனையில் அரசு எதிர்கொள்ளும்

விடுதலைப் புலிகளை நசுக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயவேண்டிய கட்டத்துக்கு அரசு

நடவடிக்கையை விரைவாக ஆரம்பித்துப் படையினரை விரட்டி அடிப்போம் என்று இராணுவப்பேச்சாளர்

சமகாலத்தில் கிழக்கு மீதும் யாழ்ப்பாணம் மீதும் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தும் ஏது நிலையே காணப்படுகின்றது.

வன்னி மீது 'கண்' வைத்து படையினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை - வலிந்த தாக்குதல்களை - முறியடித்து வருவதாக அறிவிக்கும் விடுதலைப்புலிகள், விரைவில் ஆரம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படும் கிழக்கு, யாழ்ப்பாணம் மீதான தாக்குதல்கள் 4ஆம் கட்ட ஈழப் போரைத் தீவிரப்படுத்துமா என்பதே சகலர் மட்டத்திலும் எழும் கேள்வியாகும்.

இந்நிலையில் -

கொழும்பில் நடக்கவிருக்கும் 'சார்க்' மாநாட்டுக்கு வரும் தலைவர்களை விடுதலைப்புலிகள் இலக்கு வைக்கலாம் என்று கருதி பாதுகாப்பைப் பலப்படுத்துவதாக அரசு அறிவிக்கின்றது.

அவர்களுக்கு விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் இருப்பதாகவும் கூறி, விடுதலைப் புலிகள் பயங்கரவாத







வந்து விட்டது என ஆஸ்திரேலிய செய்தியாளர் மைக்கல் ஹீத் என்பவர் கோடி காட்டியுள்ளார்.

இந்தத் திட்டம் குறித்து ஆராய்வதற்காக மின்னேரியாவில் உள்ள கிழக்குப் படைத்தலைமையகத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று கடந்த 3 ஆம் திகதி நடந்துள்ளது.

இளந்திரையன் சூளுரைத்துள்ளார்.

கிழக்கில் உருவாகி, கிழக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ஜெயந் தன் படையணியின் தளபதி கேணல் கீர்த்தியும் இப்படிச் சூளுரைத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இவர்கள் இருவரும் விடுக்கும் சூளுரைகள், தமது மண்ணை மீட்க

அமைப்பு என்று சர்வதேசத்துக்குக் காட்ட முனைந்து நிற்கின்றது அரசு.

அரசின் இந்த நிலைப்பாடு தவறானது. நாங்கள் விடுதலையை நோக்கிய போராட்டத்தையே முன்னெடுக்கின்றோம். இந்தியா உள்ளிட்ட தென்னாசிய நாடுகளுடன் நட்புறவுடன் செயற்படவே விரும்பு கிறோம் - என்று விடுதலைப் புலிகள் கூறுகின்றனர்.

அரசின் பொய்ப் பரப்புரைகளை சர்வதேசம் மட்டுமல்ல தென்னாசிய நாடுகளும் நம்பக்கூடாது என்பதே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக இருக்கின்றது.

'சார்க்' மாநாட்டுக் காலத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் தவிர்ப்பைக் கூடக் கடைப்பிடிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளைக் காட்டி பூச்சாண்டி காட்டும் அரசின் முகத்திரையை, தமது செயற்பாடுகள் மூலம் விடுதலைப்புலிகள் கிழிக்கலாம் என்று சொல்லப்படுகின்றது.

'சார்க்' மாநாடு மூலம் விடுக்கப்படப் போகும் செய்தி என்ன? இலங்கை அரசின் பயங்கரவாதப் போருக்கு அந்த நாடுகள் ஒத்துழைப்பு வழங்குமா என்றும் கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

'சார்க்' மாநாட்டுக்கு முன்பாக, அந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கலந்துகொள்ள எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேச வந்த உயர்மட்டக்குழு சில விடயங்களை அரசிடம் முன்வைத்துள்ளது.

தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண திட்டம் ஒன்றை சார்க் மாநாட்டுக்கு முன் முன்வைக்க வேண்டும் என்பது அவற்றில் ஒன்று.

இந்தியாவின் இந்த வேண்டுகோளை ஏற்று 'சார்க்' மாநாட்டுக்கு முன் தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைக்குமா என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.







தோல்விகளால் அரசு மீது வெறுப்பைக் காட்டத் தொடங்கியுள்ளனர்.

யுத்த முனையின் உண்மை நிலையை எழுதும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதன் தாற்பரியம், யுத்தமுனைத் தோல்வியை மூடி மறைக்கவே என்ற உண்மை சிங்கள மக்களுக்குப் புலப்பட ஆரம்பித்துள்ளது.

கிழக்கை அரசு மீட்ட போது குதூகலித்த சிங்கள மக்கள், இப்போது யுத்தம் என்ற போர்வையில் பொருளாதாரச் சுமையைத் தங்கள் மீது அரசு சுமத்துகின்றது என்ற யதார்த் தத்தை உணரத் தொடங்கியுள்ளனர்.

தமிழர்களைக் கைது செய்யும்போது, தமிழர்களைக் கடத்தித் துன்புறுத்தும்போது, தமிழ் ஊடகவியலாளர்களைக் கடத்தும்போது, கொலை செய்யும்போது, வாளாவிருந்த சிங்கள மக்கள், இன்று சிங்கள மக்கள் அந்த நிலைக்கு ஆளாகும்போது வெறுப்படைந்துள்ளார்கள்.

சோதனை என்ற பெயரில் நடக்கும் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் இப்போது தமிழர்களுக்கு என்று மட்டுப்படுத்தப் படாமல், சகலருக்கும் என விரிவுபடுத் தப்பட்டுள்ளதால் தமிழர் அல்லாதோரும் பாதிக்கப்படுகின்றனர்.

வெள்ளைவான் பீதி தமிழர்களை மட்டுமல்லாது சிங்கள மக்களையும் அச்சத்துக்குள்ளாக்கத் தொடங்கியுள்ளது.

சிங்கள ஊடகவியலாளர் தாக்கப்படும் போது வீதிக்கு இறங்கும் நிலைக்கு இன்று சிங்கள மக்கள் வந்துவிட்டனர்.

கிழக்கை மீட்டுக் கொண்டாடிய குதூகலம் அடங்குவதற்கு முன்பே கிழக்கில் ஆங்காங்கே விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும் இடம்பெறத்

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ தலைமையில் நடந்துள்ள இந்த மாநாட்டில், விடுதலைப் புலிகளின் தாக்குதல்களை, வன்செயல் களை எப்படித் தடுக்கலாம் என விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கிழக்கின் பாதுகாப்புக் குறித்து தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கும் பாதுகாப்புத் தரப்புக்கு சவாலாக

அவர்கள் துடித்துக்கொண்டிருக்கின்ற மையை எடுத்துக் காட்டுகின்றது.

கிழக்கில் ஆங்காங்கே இடம் பெறும் தாக்குதல்கள் அவர்களின் சூளுரைகளுக்கு முன்னோடியாகத் தெரிகின்றன.

கிழக்கு மீது விடுதலைப்புலிகள் வைத்துள்ள 'கண்' கிழக்கில் பெரும் போராக வெடிக்கப் போகின்றது.



மின்னேரியாவில் மந்திராலோசனையில் பாதுகாப்புத் தரப்பினர்

ஜனாதிபதியின் பயணத்துக்குப் பயன்படுத்தப்படும் ஹெலிக்கொப்டர் அணிக்கு கிழக்கில் சூடு விழுந்துள்ளது.

கிழக்கின் அம்பாறை உல்லைக் காட்டில் இருக்கும் விடுதலைப்புலிகளின் அணி இந்த அடியைக் கொடுத்துள்ளது.

கிழக்கில் கேணல் ராம் தலைமையில்

அப்போதுதான் புலிகளின் கரந்தடி சண்டையை இலங்கை அரசு உணரும் என்கின்றனர் விடுதலைப்புலிகள்.

கிழக்கில் 'கண்' வைத்திருப்பது போன்று யாழ்ப்பாணம் மீதும் புலிகள் 'கண்' வைத்திருக்கிறார்கள் என்று இராணுவ ஆய்வாளர்கள் எதிர்வு கூறுகிறார்கள்.

**யாழவன்**

இராணுவ நடவடிக்கை மூலமான தீர்வை விட்டு பேச்சு மூலமான தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் அந்த உயர்மட்டக்குழு இலங்கையைக் கோரியிருந்தது.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை புரிந்து இலங்கை அரசு யுத்தத்தை நிறுத்தி, பேச்சுக்கான சூழலை உருவாக் குமா என்றும் கேள்வி எழுப்பப்படுகிறது.

'சார்க்' மாநாடு மூலம் அரசின் கை ஓங்குமா? விடுதலைப்புலிகளின் கை ஓங்குமா? போகப் போகத்தான் தெரியும்.

# பொட்டம்மானை 'பணயம்' கேட்கும் இந்தியா!



இலங்கை விவகாரத்தில் இராணுவ ரீதியாகத் தலையிடும் தனது குதர்க்கப்போக்குத் தோல்வி கண்டதை அடுத்து- தொண்ணூறுகளின் முற்பகுதியிலிருந்து - இலங்கை விடயத்தில் தலையிடாத, பட்டும் படாமலும் செயற்படுகின்ற போக்கைக் கடைப்பிடித்து, அனுசரித்து வந்த இந்தியா, இப்போது திரும்பவும் இந்நாட்டு விவகாரத்துக்குள் அதிகம் மூக்கை நுழைக்கத் தொடங்கியிருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு உதவுகின்ற பாணியில் இவ்விவகாரத்துக்குள் தலையிட்டு, தன்னுடைய பூகோள - அரசியல் நலன்களை மட்டுமே உறுதிப்படுத்திக்கொள்வதில் இந்தியா எப்போதும் குறியாக இருந்து வந்திருக்கின்றது.



எண்பதுகளின் கடைசியில் இலங்கை விடயத்துக்குள் அளவுக்கு மீறி மூக்கை நுழைத்துக்கொண்ட சமயமும் சரி, இப்போதும் சரி, இந்திய இராஜதந்திரத்தின் முதல் இலக்கு இலங்கைத் தீவிலோ, இந்தியப் பிராந்தியத்திலோ அமைதியையும் சமாதானத்தையும் நிலைநிறுத்துவது என்பதாக இருக்க வில்லை. மாறாக, தனது நலன் சார்ந்த விடயங்களை எட்டுவது, மட்டுமே அதன் ஒரே குறியாக இருந்து வருகின்றது.

இப்போது, இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்ற சாக்கில் கொழும்புக்கு வந்த மூன்று உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட இந்தியக் குழு, மன்னாரில் கடலுக்கு அடியிலான எண்ணெய் அகழ்வுப் பணிக்கான ஒப்பந்தத்தைச் சீனாவுக்கு இலங்கை வழங்காமல் இருப்பதை உறுதிசெய்து, அதைத் தனது நாட்டுக்குப் பிடுங்கிச் செல்வதில் வெற்றியும் கண்டிருக்கின்றது. தனது கொழும்பு விஜயத்தின் உடனடிப் பெறுபேறாக அந்தப் பரிசை விரைந்தும் அது பெற்றிருக்கின்றது.

அந்த உயர்மட்டக் குழுவினர் கடந்த மாதம் மூன்றாம் வாரம் திடுதிப்பெனக் கொழும்புக்கு வந்திருந்த சமயம், தமிழர் தரப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனை சுமார் ஒன்றேகால் மணி நேரம் சந்தித்துப் பேசியிருந்தது.

அந்தச் சந்திப்பின்போது இடம்பெற்றதை பேச்சு என்பதிலும் பார்க்க சூடான வாய்த் தர்க்கம் என்று கூறினால் அது மிகையாகாது.

நமது இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் பாரதம் மேற்கொண்ட குயுக்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஈழத் தமிழர்களுக்கு இருக்கும் விசனத்தையும் ஆதங்கத்தையும், எரிச்சலையும் அங்கு தாம் ஒருவராகத் தனித்துநின்று வார்த்தைகளில் வெளிப்படையாக - அப்பட்டமாக - அள்ளிக் கொட்டி, இந்திய உயரதிகாரிகள் தரப்பின் கடுஞ்சீற்றத்துக்கு ஆளானார் சம்பந்தர்.

இந்தியத் தரப்பில் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன்தான் சம்பந்தரோடு வாய்த்தர்க்கத்தில் அதிகம் ஈடுபட்டார்.

ஒருகட்டத்தில் சம்பந்தரின் சரமாரியான குற்றச்சாட்டுகளினால் ஈடாடிப்போன நாராயணன், "எங்கள் நாட்டின் மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு தலைவரை (ராஜீவ்காந்தியை) நீங்கள் படுகொலை செய்துவிட்டு, அவ்விவகாரத்தை வெகு 'ஸிம்பிளாக' ஒதுக்கிவைத்துவிட்டு ஈழத் தமிழர்களுக்காக நியாயம் செய்யுங்கள் என்று நீங்கள் கேட்பதில் அர்த்தமில்லை. ராஜீவ்காந்தி படுகொலைக்காக உரியவர் யாரேனும் தண்டிக்கப்படுவதுதான் சரி. அந்தப் பிராயச்சித்தத்தை நீங்கள் செய்தால்தான் இந்தியா உங்களுக்காகத் தலையிட்டு எதையும் செய்யமுடியும்" - என்று குறிப்பிட்டு சம்பந்தரின் வாயை அடக்க முயற்சித்தார். தொடர்ந்து அவர் ஒரு குண்டையும் தூக்கிப்போட்டார்.

"சரி. உங்கள் விடுதலைப் போராட்ட அணியின் தலைவர் பிரபாகரனை விட்டு விடுங்கள். அந்தப் படுகொலைக்கு வியூகம் வகுத்து, கட்டளைகள் வழங்கிய பொட்டம்மானாவது தண்டிக்கப்பட்டாக வேண்டும். அதற்காக குறைந்தபட்சம் அவரையாவது இந்தியாவிடம் கையளிக்க உங்கள் பக்கத்தினர் தயாரா?" - என்று அதிரடிக் கேள்வியைத் தூக்கிப் போட்டார் நாராயணன்.

**வி.சிவராம்**

திடுக்கிட்டுப் போனதில் கூறமுடியாத சம்பந்தர் நேரடியாக இக்கேள்விக்குப் பதிலேதும் கொடுக்காமல் சமாளித்தார்.

இந்திய உயரதிகாரிகள் தரப்பைப் பொறுத்தவரை இக்கேள்விக்குச் சம்பந்தர் உடனடியாகத் தம்பாட்டில் விடை ஏதும் தரக்கூடிய நிலையில் இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இந்தத் தகவலைச் சம்பந்தர் விடுதலைப் புலிகளின் தலைமைக்கு எடுத்துச்சென்று, புலிகளின் தலைமையின் பிரதிபலிப்பை தமக்குத் தெரியப்படுத்துவாரா என்ற எதிர்பார்ப்பே அவர்களிடம் அதிகம் இருந்தது.

ஆனால், இந்தக்கேள்வியை அந்த இடத்தில் காதில் வாங்கியதோடு இவ்விடயத்தில் வேறு எதையுமே சம்பந்தர் மேற்கொண்டு செய்யவில்லை என்று தெரிகின்றது. இதை ஒரு முக்கிய விவகாரமாக அவர் புலிகளின் தலைமைக்கு எடுத்துச்சென்று தெரிவித்தார் என்ற தகவல் இல்லை.

அப்படி எடுத்துச்சென்று மேற் கொண்டு நடவடிக்கை எடுப்பதில் பயன் ஏதுமில்லை என்று கருதி அதனை அப்படியே அவர் விட்டுவிட்டிருக்கலாம்.

ஆனால், புலிகளுடன் இந்தியா எதிர் காலத்தில் இணங்கிப் போவதற்குக் குறைந்த பட்சம் ராஜீவ்காந்தி படுகொலை விவகாரத்தில் இந்தியத் தரப்பினால் குற்றவாளியாகக் கருதப்படும் பொட்டம்மானையாவது புலிகள் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே இந்தியாவின் தற்போதைய அதிகாரவர்க்கத்தின் எதிர்பார்ப்பு - நிபந்தனை - என்ற தகவலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தினாரா? அவர்களின் பிரதிபலிப்பு என்ன? - போன்ற Follow-up விடயங்களை அறிந்துகொள்வதில் இந்தியத் தரப்பு இன்னும் வெகு எதிர்பார்ப்போடு இருப்பதை உறுதி செய்ய முடிகின்றது.

மேற்படி இந்திய உயர்மட்டக் குழு சம்பந்தரோடு கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சுமார் ஒன்றேகால் மணிநேரம் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் - ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பொறுப்பேற்று பொட்டம்மானையாவது புலிகள் இந்தியாவிடம் ஒப்படைக்கவேண்டும் என்ற இந்தியத்தரப்பின் நிபந்தனையை இந்திய உயரதிகாரிகள் சம்பந்தருக்குத் தெரிவித்த விடயம் - (விவாதம்) - உச்சமாகச் சூடுபிடித்த நேரத்தில் -

இந்திய உயர்மட்டக் குழுவுடன் அடுத்துப் பேச்சு நடத்துவதற்கு, ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த புளொட் தலைவர் சித்தார்த்தன் அங்கு வந்து சேர்ந்தார். சற்றுத்தொலைவில் இருந்த சோபாவில் அவர் வந்து அமர்ந்ததைக் கண்ட சம்பந்தர் எம்.பி., இந்தியக் குழுவினருடனான தமது உரையாடலை முடிவுக்குக் கொண்டுவரும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்து எழுந்தார்.

தாங்கள் கூற வேண்டிய - புலிகளுக்கு அனுப்பவேண்டிய - தகவலை சம்பந்தருக்குத் தெரியப்படுத்திய இந்திய உயரதிகாரிகள் குழுவும், "மிகுதியை புதுடில்லியில் பேசுவோம்; அங்கு வாருங்கள்!" - என்று குறிப்பிட்டு அன்றைய அந்தச் சந்திப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்.

இதுவே, 'புதுடில்லிக்கு வருமாறு சம்பந்தருக்கு இந்திய உயர்மட்டக் குழுவினர் அழைப்பு' என்ற சாரப்பட அடுத்த நாள் முக்கிய செய்தியாக வெளியானது. உண்மையில் தாங்கள் முன்வைத்துள்ள செய்திக்குப் புலிகளின் பதில் என்னவென்பதை புலிகளிடம் அறிந்துகொண்டு வந்து புதுடில்லியில் தங்களிடம் தெரிவியுங்கள் என்ற எதிர்பார்ப்பையும் அந்தப் புதுடில்லி வருகைக்கான அழைப்பு மூலம் இந்திய உயரதிகாரிகள் சம்பந்தரிடம் விட்டுச் சென்றுள்ளனர் என்றே இந்தியத் தரப்பில் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

பொட்டம்மானை ஒப்படைக்கச் சொல்லும் இந்தியத் தரப்பின் கருத்து நிலைப்பாடு அன்றைய சந்திப்பின்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் பேச்சுவாக்கில் எழுந்த விடயம் அல்ல. அதனை ஒரு நிபந்தனையாக முன்வைத்து, புலிகள் தரப்பின் பதிலை அறிந்துகொள்வதில் இந்திய உயர்பீடம் விசேட கவனம் கொண்டிருக்கின்றது என்பது உறுதி. இந்தத் தகவலைப் புலிகளுக்குத் தெரியப்படுத்துவது இந்திய உயர்மட்ட குழுவின் கொழும்பு வருகைக்கான நோக்கங்களில் ஒன்று.

***

புலிகளின் தலைவர் பிரபாகரனை புதுடில்லி அசோக் ஹோட்டலுக்கு அழைத்து, அங்கு அவரையும் மதியுரைஞர் பாலசிங்கத்தையும், புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபனையும் 'சிறை' வைத்தபடியே, கொழும்புக்கு வந்து இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார் ராஜீவ்காந்தி.

1987 ஜூலையில் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்ற தினத்திற்கு முதல்நாள் நள்ளிரவு முதல் அன்று அதிகாலை 2மணி வரை - அதாவது, காலையில் புதுடில்லியிலிருந்து கொழும்புக்குப் புறப்படுவதற்கு சற்று முன்வரை - விடிய விடிய, புதுடில்லியில் உள்ள தமது பிரதமர் இல்லத்தில் பிரபாகரனுடனும் பாலசிங்கத்துடனும் நேரடியாக மந்திராலோசனை நடத்தியிருந்தார் பிரதமர் ராஜீவ் காந்தி. அச்சமயம் அவர்களுடன் இரண்டுபேர் உடனிருந்தனர். ஒருவர் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன். மற்றையவர் - அப்போது இந்திய உளவுப் பிரிவுத் தலைவராக இருந்தவரும், இப்போது இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருப்பவரும், மூன்று வாரங்களுக்கு முன்னர் சம்பந்தரோடு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு, பொட்டம்மானை 'பணயம்' தருமாறு கேட்டவருமான எம்.கே.நாராயணன்தான்.

அந்த விடிகாலைச் சந்திப்பில், ராஜீவ் - பிரபாகரன் இடையில் எழுதப்படாத ஒரு கனவான் ஒப்பந்தம் - உடன்பாடு - உருவானமை இந்த நாராயணனுக்கு நன்கு தெரியும்.

அப்போது தாம் கொடுத்த வாக்குறுதிகளை - உறுதிமொழிகளை - அடுத்த சில நாட்களிலேயே பிரதமர் ராஜீவ்காந்தி காற்றில் பறக்கவிட்டார் என்பதும் -

அதனாலேயே, அந்த வாக்குறுதிகளை நிலைநாட்டக் கோரியே, திலீபன் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்தான் என்பதும் -

அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத பின்னணியிலேயே இந்திய அமைதிப் படைகள் - புலிகள் யுத்தம் வெடித்து, ராஜீவ்காந்தி படுகொலை வரை விடயங்கள் விரிந்தன என்பதும் -

எம்.கே.நாராயணனுக்கு நன்கு தெரிந்த - பரிச்சயமான - சங்கதிகள்தாம்.

இந்தப் பின்புலத்தினையெல்லாம் அறிந்துகொண்டுதான் பொட்டம்மானை ஒப்படைக்கக்கோரும் கதையை எடுத்து அவிழ்த்து விட்டிருக்கின்றார் நாராயணன்.

ஆனால், அவர் எந்த அதிகார வர்க்கத்தின் - அரசியல் தலைமையின் - காடுபிடியாக இருந்து, புதுடில்லியில் காய்நகர்த்துகின்றாரோ, அந்த அரசியல் தலைமையோ புதுடில்லி அரசில் தன்னுடைய பிடியைக் கோட்டைவிடும் அரசியல் நெருக்கடியில் சிக்கித் தடுமாறுகின்ற இந்தச்

(23ஆம் பக்கம் பார்க்க.)

# ஈழத்தில் கண்ணதாசனின் கனவு நனவாகின்றது



ஈழத்தமிழர்கள் தமது விடுதலைக்காக ஆயுதம் தூக்க வேண்டும் என்று அறுபதுகளிலேயே கனவுகண்டார் கவிஞர் கண்ணதாசன் எனக் கூறுகின்றார் பழ.நெடுமாறன். தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவரான நெடுமாறன், 'கனவு நனவாகிறது' என்ற தலைப்பில் கண்ணதாசன் பற்றி வரைந்த கட்டுரை இங்கு மறுபிரசுரமாகின்றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், கவிஞர் கண்ணதாசன் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அவ்வப்பொழுது அப் பிரச்சினை குறித்து தனதுபத்திரிகைகளில் தொடர்ந்து எழுதிவந்தார். இலங்கையில் அமைச்சராக இருந்தவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான எஸ்.இராசதுரை அவருக்கு மிக நெருக்கமான நண்பராகத் திகழ்ந்தார். 1955ஆம் ஆண்டில் இராசதுரையின் அழைப்பினை ஏற்று இலங்கைத் தமிழர் பகுதிகளில் கவிஞர் கண்ணதாசன் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு கூட்டங்களில் பேசினார். ஈழ நாட்டுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமையை அறிந்து வந்த பிறகு அப்பிரச்சினையில் கவிஞரின் ஈடுபாடு மேலும் அதிகமாயிற்று.

ஜவஹர்லால் நேரு, இந்தியாவின் பிரதமராக இருந்தபொழுது 'இலங்கைத் தமிழர் பிரச்சினை அன்னியநாட்டின் உள்நாட்டுப் பிரச்சினை, அதில் இந்தியா தலையிட இயலாது' எனக் கூறியதற்குக் கவிஞர் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார். அப்பொழுது 'தென்றல்' இதழில் அவர் எழுதிய கனல் பறக்கும் கவிதையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

''கொதிக்கின்ற நெஞ்சத்தைத்
தேற்றுவார் யார்?
குமுறி எழும் கண்ணீரை நீக்குவார்
யார்?
வதைக்கின்ற முள்வேலி மாற்றுவார்
யார்?
வாடிவிழும் நிலைமாற்றி வழங்குவார்
யார்?
கதியின்றித் திகைக்கின்ற தாயும்
சேயும்
கால்பார்த்து நடக்கின்ற மாத ராரும்
சதிக்கூட்டம்
மத்தியிலே புறாக்கூட்டம் போல்
தடுமாறும் நிலைமாற்ற வல்லார்
யார்? யார்?
நம்பியதோர் பண்டிதரும் காலை வாரி
நட்டாற்றில் விட்டாரோ! தமிழா!
உன்றன்
கும்பியிலே தீயள்ளிப் போட்டா ரேடா!
கும்பிடு நீ வடதிசையை நோக்கி
நோக்கி!
தம்பிகளே! காங்கிரஸ்ச் சாம்பிராணித்
தமிழர்களே! புளியமரம் அருகில்
உண்டா!
கயிறொன்று நான்தரவா? முடிவு
கொள்வீர்!
வடநாடா, தென்னாடா? யாரி
னினத்தார்
வாழ்கின்ற மாந்தரெலாம் ஓரினத்தார்!
நடவாது, நடவாது பிரிவினைத்தீ
நம்நாட்டைப் பாழாக்கும் விடவே
மாட்டோம்!
படிதாண்டாப் பத்தினிகள்
முழங்கினார்கள்
பண்டிதரோ அவர் வாயைத் திறக்கக்
கூறிப்
பிடிமண்ணைத் திணிக்கின்றார்!
மெல்கின்றார்கள்
பிறதொன்றைப் போட்டாலும்
விழுங்குவார்கள்
அருங்குலத்தீர் நம்மவரை நாமே
காப்போம்!
அவதியுறச் சேயீன்ற அன்னை
அல்லால்
பெருமலடி அறிவாளோ பிள்ளைப்
பாசம்!
பேடிகளை நம்புவதால் தேற்ற
முண்டோ?
வருவதெல்லாம் நமக்கேதான் மாற்றி
வைக்க
வல்லவரும் நாமேதான்!
வடக்கிலிருந்து
வருவோரை
உதைத்தோட்டி,
இலங்கை விட்டு
வருவோரை அங்கங்கே வாழ
வைப்போம்!



இலங்கைத் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் பல்வேறு இன்னல்களுக்கு நமது முன்னோர்களின் முன்யோசனையற்ற செயலே காரணம் என்று கவிஞர் கருதினார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைத் தீவை வென்று அங்கு தங்கள் கொடியை பறக்கவிட்ட பாண்டியரும் சோழரும் அந்நாட்டை நிரந்தரமாக ஆண்டு வந்திருந்தால் இன்று இந்த இழிநிலை வந்திருக்காதே என்றும் அவர் அங்கலாய்த்தார். இதைப்பற்றி தென்றல் இதழில் 'இலங்கையில் வாழும் என் தமிழ்த் தோழி' என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள கவிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

படைகொண்டு மோதி வென்ற
பாண்டியர் ஈழநாட்டில்
விடைகொண்டு திரும்பிடாமல்
வேரூன்றி நின்றிருந்தால்
கடைதாவிக் குதிக்கு மிந்தக்
காடையர் வாழ்க்கை நின்று
நடை தேய்ந்து போயிருக்கும்
நம்மவர் செய்தாரில்லை!
இலங்கையை வென்ற பின்னர்
இராசரா சனுமதி கும்பி
இலங்கிடும் சோழநாட்டிற்(கு)
ஏன் வந்தான்? ஈழமண்ணில்
துலங்கிடும் கொடி எந் நாளும்
சோழரின் கொடியே யாக
விளங்கிடச் செய்திடாமல்
விட்டவன்! தவறே செய்தான்!
பிடித்ததை விட்டார் நம்மைப்
பிடித்தவர்க் கடிமை யானார்!
கெடுத்தனர் முன்னோர்! அந்தக்
கீழ்மையால் புவியெலாமும்
படுத்தனன் தமிழன்! அந்தப்
பாவிகள் செய்த 'பாவம்'
அடுத்த நம் தலைமுறைக்கும்
அவதியைத் தந்த தன்றோ?

இந்திரா காங்கிரஸில் அவர் அங்கம் வகித்த காலத்திலும்கூட ஈழத் தமிழர் பிரச்சினையில் பிரதமர் இந்திரா செய்த தவறைச் சுட்டிக்காட்ட அவர் கொஞ்சமும் தயங்கவில்லை. பிரதமர் இந்திராவை தனது இணையற்ற தலைவியாக ஏற்றுக் கொண்டிருந்த கவிஞர், ஈழத் தமிழர் பிரச்சினையில் அவர் காட்டிய அலட்சியத்தைக் கண்டு மனம் கொதித்தார். 73ஆம் ஆண்டில் இலங்கைத் தீவுக்குச் சென்ற பிரதமர் இந்திரா, தமிழர் தலைவர் எஸ்.ஜெ.வி.செல்வநாயகத்தைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியிருந்தார். ஆனால், எந்தக் காரணமும் கூறாமலேயே அந்தச் சந்திப்பை இரத்து செய்துவிட்டார். இதைக் கண்டு கவிஞர் சினந்து எழுந்தார். 'கண்ணதாசன்' மாத இதழில் பின்வரும் தலையங்கத்தை அவர் தீட்டினார்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையை இந்திய அரசு அலட்சியப்படுத்தி விட்டதாகத் தோன்றுகிறது.
இலங்கைக்குச் சென்ற இந்தியப் பிரதமர் தமிழர் தந்தை செல்வநாயகத்தைச் சந்திப்பதற்கு ஒருநேரம் ஒதுக்கியிருந்தார். ஆனால் காரணம் கூறாமலேயே அதை அவர் இரத்துச் செய்தார். எப்படிப் பேசினால் திருமதி பண்டார நாயக்காவுக்குப் பிடிக்குமோ அப்படிப் பேசிவிட்டுத் திரும்பியிருக்கிறார்.
இலங்கையில் தமிழர்களைத் தூக்கிவிடுவதற்குச் சமமாகத் தயாரிக்கப்பட்ட இலால்பகதூர்-சிறிமாவோ ஒப்பந்தத்தை அவர் அங்கீகரித்து தமிழர்களைத் துரிதமாகத் திருப்பி அழைத்துக் கொள்வதற்கு வாக்குறுதியும் அளித்திருக்கிறார்.
இலங்கைத் தமிழர்களின் வேதனையைத் தீர்ப்பதற்கு ஒரு சமிக்ஞையைக் கூடக் காணோம். இந்த அலட்சியப் போக்கை நாம் சகிக்க முடியாது.
இலங்கைக் குடியரசு தினத்தை, இலங்கைத் தமிழர்கள் துக்க நாளாகக் கொண்டாடியதுபோல, இந்தியச் சுதந்திர தினத்தை நாமும் துக்க நாளாகக் கொண்டாடினால் என்ன?
இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தாயகத் தமிழர்கள் ஏதேனும் முயற்சி எடுக்காவிட்டால் கொடிய நரகத்தில் உழலும் நமது சகோதரர்களுக்கு வேறு விமோசனமே கிடையாது.
தாயகத் தமிழர்கள் கட்சி வேறுபாடில்லாமல் இதில் ஒன்றுபட வேண்டும்.
நம்முடைய கடும் எதிர்ப்பை பண்டார நாயக்காவுக்கும், இலங்கைத் தமிழர்களிடம் நமக்குள்ள அக்கறையையும் பாரதப் பிரதமரிடம் தெரிவிப்பதற்கும் நமக்குள்ள ஒரே வழி, வரும் சுதந்திரத் திருநாளைத் துக்க நாளாகக் கொண்டாடுவதுதான் என்று நான் நினைக்கிறேன். வேறு வழிகள் இருந்தால் சொல்லுங்கள்.''

அமைதியான வழிகளில் எவ்வளவோ போராடிப் பார்த்தும் ஈழத் தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெறமுடியாது தவிப்பது கண்டு கவிஞர் மனம் குமைந்தார். தந்தை செல்வாவின் தலைமையில் ஈழத்தமிழர்கள் நடத்தி வந்த அறப் போராட் டங்கள் அனைத்திற்கும் ஆதரவு அளித்துப் பேசினார், எழுதினார். ஆயுதப் போராட்டம் பற்றி ஈழத் தமிழர்கள் நடுவில் சிந்தனையே இல்லாத வேளையில் அவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆயுதம் தூக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று கவிஞர் எழுதினார். எவ்வளவு தொலைநோக்குப் பார்வையுடன் அவர் இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்திருக்கிறார் என்பதை இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும் வியப்பாக இருக்கிறது.

தென்றல் இதழில் இதுகுறித்து பின்வருமாறு எழுதினார்.

குன்றத்தில் உச்சியேறிக்
கொடும்புலி பாம்பு
கொன்று
அன்றந்த இலங்கை
நாட்டை
ஆக்கினான் உனது
பாட்டன்
இன்றந்த நாட்டில் நீயும்
என் தமிழ்த் தோழர் தாமும்
நன்றிகொல் நாடாளவோ
ராலே
நலிவுற நேர்ந்த
தென்றால்
என்னயான்
சொல்வேன்?
வாழும்
இருபது இலட்சம்
பேரும்
என்னவர்! எனது
மூச்சு!
இழைபிரித்
தெடுத்த பாகம்!
அன்னமே
வருந்த
வேண்டாம்
அழிவது
தமிழே என்று
சொன்னவர் அழியுமாறு
துவக்குக போரை! வெல்வோம்!
குருதியே ஓடி னாலும்
உடல்நிலம் சிதைந்தபோதும்
பரிதியில் மாலை வண்ணம்
படைத்தது மண்ணென் றாலும்
வருதுயர் தமிழர்க் கென்றே
'வாழிய' பாடல் பாடி
உறுதியில் இறங்கு! வெற்றி
உனக்கிது! இயற்கை வேதம்!
மொழியின்றி விழிகளில்லை
மூச்சில்லை பேச்சு மில்லை!
கழிசடை உடைமையாளர்
கருவிலே கயமை தோய்ந்தோர்
இழிமொழி வீசினாலும்
எடுபிடி வேலை செய்து
அழிவுனக் கீந்த போதும்
அஞ்சிடேல் பண்பு குன்றேல்!
நாமெல்லாம் தமிழ் மக்கள்
நமக்குநாம் பாதுகாப்பு!
நாமெல்லாம் அழிவதால் ஓர்
நாட்டினர் வாழ்வாரென்றால்
நாமெல்லாம் வாழ்வதற்கந்
நாட்டினர் அழிதல் நீதி!
நாமெல்லாம் அழிந்து எந்த
நாடிங்கு வாழும்! பார்ப்போம்!
தமிழர்கள் கெடுவ தொன்றே
தரணியில் முறையா? தூய
அமிழ்தொழித் தாக்கர் கூட்டம்
ஆள்வது சரியா? இல்லை!
தமிழுக்கும் தமிழருக்கும்
தடைபோடும் வெறியர் தம்மை
இமைவேறு கண்கள் வேறாய்
இருநூறு துண்டங் காண்போம்!

ஈழத் தமிழரைப் புறநானூற்றுத் தமிழராக மாறும்படி எழுதிய கவிஞர் அந்தக் கவிதையில் தனது எதிர்காலத் திட்டத்தை வெளியிடுகிறார். தமிழீழத் திற்கான விடுதலைப் போராட்டம் துவக் கப்பட்டு வெற்றிபெற்ற பிறகு தமிழ் நாட்டின் விடுதலைக்காகவும் அடுத்த கட்டப் போராட்டம் தொடங்கப்பட வேண்டும் என்று தனது திட்டத்தினை அவர் வெளியிட்டார். இதைப் பற்றி அவர் எழுதும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்.

அங்கு நீ போர்துவக்கு!
அடுத்தபோர் தமிழர் நாட்டில்!
இங்கு நம் மொழியைத் தாக்கும்
இந்திக்குப் பாடை கட்டி
சங்கொடும் பறைமுழக்கி
சட்டியில் கொள்ளி தூக்கி
அங்குல எலும்பு கூட
அகப்படா தழிப்போம்! உண்மை!

தமிழீழத்தில் பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடங்குவதற்கு நெடுநாட்களுக்கு முன்னேயே ஈழத் தமிழரின் விடுதலைக்கு ஆயுதம் தாங்குவதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டறிந்த கவிஞர் அதைத் தெளிவாக எழுதியது அவரது மன ஓட்டத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# பனையால் விழுந்த படைகளும் சார்க் மாநாடும்

இலங்கை அரசினது தற்போதைய திரிசங்கு சொர்க்க நிலைமை ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்கு ஒப்பானது.

யுத்தத்தீயை அணையவிடாது அதனை உயிர்ப்பூட்டுவதன் மூலம் அரசியல் அதிகார நாற்காலிகளைக் காலகாலத்திற்கும் குத்தகை எடுத்துக் கொள்ளும் மனோபாவமே ஆட்சியாளர்களிடம் தற்போது ஓங்கிக் காணப்படுகின்றது. இதற்காகத் தொடர்ச்சியான - தோல்வியுறா - யுத்தத்தை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம். நிர்ப்பந்தத்தை நிறைவு செய்வதற்காக - தமக்குச் 'சாதகமான முனைகள்' என்று



அரசும், படைகளும் நம்பிய எல்லா களங்களிலிருந்தும் மூர்க்கத்தோடு, மூக்கணாங்கயிறு அறுக்கப்பட்ட நிலையில் - யுத்தக்காளை அவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

புலிகளைப் பொறுத்தவரையில் ஆளணி வளம் குன்றியவர்களாகவும் மேலதிகமாகப் பயிற்சிப் பெறுவதற்குரிய ஆளணியினரைத் திரட்ட முடியாதவர்களாகவும் தற்போது இருக்கிறார்கள் எனப் படைத்தரப்பால் உறுதியாக நம்பப்பட்டது.

'பல முனைகளினூடாக யுத்தம் வெளிக்கிளம்பும்போது புலிகளின் எதிர்த் தாக்குதல் அவர்களின் ஆளணி மட்டுப்பாடு காரணமாக வீச்சுக் குறைந்ததாகவே காணப்படும். எல்லா முனைகளிலும் மட்டுப்படுத்தப்பட்ட தற்காப்புத் தாக்குதல்களை நிகழ்த்தியபடி பின் வாங்குதல் அல்லது முக்கியமான போர்வாசல்களை மட்டும் பலமாக வைத்துக்கொண்டு ஏனையவற்றைக் கைவிடல் என்னும் நிலைக்கு புலிகள் தரப்பு தள்ளப்படும்.' - என்ற கணக்கிடல்களும், அவசரமான போருக்கு காரணியாக அமைந்தன.

எனினும், படைத்தரப்பு எதிர்பார்த்ததை விடவும் எல்லா முனைகளிலும் புலிகளின் எதிர்ச்சமராடும் திறன் வலுவானதாகவே வெளிப்பட்டது. இருந்தாலும், கூட தன்னுடைய நவீன படைக்கலங்களின் உச்சமான பங்களிப்போடு மன்னாரிலும், வன்னியின் பிற பகுதிகளிலும் பல பகுதிகளை புலிகளிடமிருந்து பறிக்கவும் படையினரால் முடிந்தேயிருக்கின்றது.

திட்டமிடப்பட்டதை விடவும் அதிகமான உயிர் விலையையும் கால அளவினையும் கொடுத்தே இது நிகழ்ந்திருக்கின்றது. புதிதாக கைப்பற்றப்பட்ட பகுதிகளைப் பலப்படுத்துதல், போரின்போது உயிரிழப்பு, காயம் காரணமாக வெளியகற்றப்பட்ட துருப்புகளுக்கான பதிலீடுகள் என்பவற்றுக்காகப் படைத்தரப்பு தற்போது பெருமளவில் ஆளணியை ஒன்றுதிரட்ட வேண்டிய நிலை வந்து விட்டது.

புலிகளுக்கு என்ன விளைவினை உண்டு பண்ண விரும்பினார்களோ, அதே விளைவைத் தாம் அகலக் கால் வைத்ததன் காரணமாக 'பூமராங்' போன்று படையினரும் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

### சார்க் சலசலப்பு

இந்த நிலையில்தான் ஆளணிச் சிக்கல் என்ற பனையிலிருந்து விழுந்த படையினரை 'சார்க்' என்னும் மாடு மிதிக்கத் தொடங்கியிருக்கிறது. ஜூலை 27 இல் கொழும்பில் நடைபெறவுள்ள 'சார்க மாநாடு' மிக உச்சமான பாதுகாப்பைப் படையினரிடம் கோரி நிற்கின்றது.

கண்டியில் நடைபெறுவதாக இருந்த இம்மாநாடு, பாதுகாப்பு காரணங்களுக்காகவே கொழும்புக்கு மாற்றப்பட்டது. ஆயினும் கொழும்பில் அண்மைக்காலமாகத் தற்கொலைத் தாக்குதல்களும், குண்டுத் தாக்குதல்களும் பரவலடைந்துள்ளன. வான் புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலும் கொழும்பை விட்டு இன்னும் நீங்கி விடவில்லை.

சர்வதேசத்தின் கவனத்தைத் தம்பால் ஈர்ப்பதற்காகவும், தமது தாக்குதல் திறனை வெளிப் படுத்துவதற்காவும், போரில் வென்று கொண்டிருப்பதாக அரசு மேற்கொள்கின்ற பிரசாரங்கள் எல்லாம் தவறானவை என்று நிரூபிப்பதற்காகவும் பாரிய தாக்குதலொன்று இக்காலப்பகுதியில் புலிகளால் நடத்தப்படக்கூடுமெனப் படைத்தரப்பு எதிர்பார்க்கின்றது. எனவே, தலைநகரை மட்டுமல்லாது, போர்க்கள முனைகளையும் நாட்டின் கேந்திர முக்கியத்துவமான இடங்களையும், அதியுச்ச விழிப்பு நிலையோடு கண்காணிக்க வேண்டிய கட்டாய சூழல் படையினருக்கு ஏற்பட்டுள்ளது. இதனை விடத் தலைநகரிலிருந்து விலகி, சிங்கள மக்கள் வசிக்கின்ற ஏனைய மாவட்டங்கள் சிலவற்றிலும் புலிகளின் தாக்குதல்கள் ஏற்கனவே நிகழ்ந்துள்ளமையால், அம்மாவட்டங்களிலும் படையினரைத் தொடர்ச்சியாக நிலைநிறுத்த வேண்டிய தேவையுள்ளது.

**-பிரமன்-**

நாட்டின் ஏதாவது ஒரு பகுதியிலிருந்து படையினர் விலக்கிக் கொள்ளப்பட்டு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க முற்படும்போது, விலக்கிக் கொள்ளப்பட்ட இடங்களினூடாகத் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு - ஓட்டை - புலிகளுக்கு இலகுவாகக் கிடைத்து விடும்.

உடனடியாகப் பெரியதொரு ஆளணியை திரட்டும் வசதியும் இலங்கை அரசிடம் இல்லை. பொருளாதார நெருக்கடியும், போர் பற்றிய அச்சங்களும் படையினருக்கான ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளிலும் பிரதிகூலமான நிலையைத் தோற்றுவித்துள்ளன.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள அயல்நாட்டு தலைவர்களின் அந்தந்த உள்நாட்டு விவகாரங்கள் அவர்களுக்கான பாதுகாப்பின் அதிகரிப்பை - அத்தியாவசியமாக்கியுள்ளன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தலைவர்கள் தலிபான் தீவிரவாதிகளின் 'தாக்குதல் இலக்குகளாகக்' கருதப்படுகின்றனர்.

இதனைவிட, இலங்கை அரசுக்கு சாதகமான அணுகுமுறைகளை இந்தியத்தரப்பு மேற்கொள்கின்றது என்ற கருத்துநிலைப்பாட்டின் பின்புலத்தில் இந்தியப் பிரதமரை புலிகள் இலக்கு வைக்கக்கூடும் என இலங்கை அரசும் புலனாய்வுத்துறையும் கூறிக்கொள்கின்றன. இதனால் இந்தியப் பிரதமரது பாதுகாப்பும் பன்மடங்கு அதிகரிக்கப்பட வேண்டும். இதற்குக் கறுப்புப்பூனைப் படைப்பிரிவு, மட்டுப்படுத்தப்பட்டளவிலான இந்தியக் கடற்படையினர், விமானப்படையினர் பயன்படுத்தப்பட்டாலும் கூட, அப்பாதுகாப்பு நடவடிக்கைக்கும் இலங்கைப் படையினரின் பங்களிப்பும் தேவையானதாகவே இருக்கும்.

எனவே, அரசுத் தலைவர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு, தலைநகரின் பொதுவான பாதுகாப்பு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைக் காப்பதற்கான ஏற்பாடு, களமுனையில் பலமாக நிலைகொள்ளல் என்பவற்றுக்காக ஏற்கனவே உள்ள படையினரை விடவும் மேலதிகமாக - பற்றாலியன் கணக்கில் - மிக அதிக எண்ணிக்கையைக் கொண்ட - ஆளணித் தேவையை இலங்கை அரசு - எதிர்கொண்டுள்ளது.

### போர்முனை நெருக்கடி!

சாதகமான(?) முனைகளினூடாகத் திறக்கப்பட்ட போரானது, இப்போது சிக்கலான முனைகளில் இடைத்தங்கலுக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் புதிதாக வேரூன்றிய இடங்களிலிருந்து படையினரை மீளப்பெறுதலோ, எண்ணிக்கை குறைப்பினை மேற்கொள்தலோ உடனடிச் சாத்தியமில்லை.

"புலிகள் மரபுவழிச் சமருக்கான திறனை இழந்து விட்டார்கள். அவர்களின் முதுகெலும்பு முறிக்கப்பட்டு விட்டது." என அரசும், படைத்தரப்பும் அடிக்கடி கூறிவந்தாலும் கூட களயதார்த்தம் அவ்வாறில்லை என்பது எல்லோருக்குமே தெரியும்.

புலிகளின் ஊடறுப்புச் சமர், 'ஓயாத அலைகள்' போன்ற மீளக்கைப்பற்றும் தாக்குதல்கள் என்பவற்றைப் படைத்தரப்பு எந்நேரமும் எதிர்பார்த்திருக்கின்றது.

எனவே, களமுனைகள் பலமாக இருக்க வேண்டுமாயின், படைக்குறைப்பு சாத்தியமில்லாததொன்றாகிவிடுகிறது. தாம் கைப்பற்றிய பகுதிகளைக் கைவிட்டு மீளவும் முன்னைய நிலைகளுக்குப் படையினர் திரும்புவார்களாயின் அது புலிகளுக்கு மனோரீதியாக ஊக்கமளிப்பதுடன் படையினர் யுத்தத்தில் தோற்று வருகிறார்கள் என்ற எண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியிலே ஏற்படுத்தி விடவும் கூடும். இதனால் சிக்கலான களமுனை களைவிட்டு மீளவும் முடியாத நிலை படையினருக்கு ஏற்பட்டுள்ளது.

### துருப்புச் சீட்டை இழக்க விரும்புமா இலங்கை?

அதேநேரம் தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலை தணியும் வரை சார்க் மாநாட்டையும் பிற்போடவும் முடியாது. உலக அரங்கில் மதிப்பிழந்து கிடக்கின்ற இலங்கையின் கௌரவத்தை அது இன்னமும் தரமிறக்கம் செய்து விடலாம். சார்க் மாநாடு ஒத்திவைக்கப்படுமாயின் இலங்கையைப் பாதுகாப்பற்ற நாடாக சர்வதேசநாடுகள் பலவும் அறிவிக்கக்கூடும். அதனால் உல்லாசப் பயணத் துறையில் தேக்கநிலை ஏற்பட்டு, ஏற்கனவே தள்ளாடிக் கொண்டிருக்கின்ற இலங்கைப் பொருளாதாரத்தைக் குப்புறத் தள்ளி விழத்தி விடக்கூடிய சூழல் உருவாகிவிடும். இதையெல்லாம் எந்தவொரு இறையாண்மையுள்ள அரசும் விரும்பப் போவதில்லை.

சர்வதேச ரீதியாகச் செல்லாக் காசாகி இருக்கும் இலங்கையின் மதிப்பினை தூக்கிநிறுத்தி அதிகரிக்கச் செய்வதற்கும், அந்நிய முதலீடுகளை ஏறுமுகப்படுத்துவதற்கும், இலங்கை ஒரு பாதுகாப்பான ஜனநாயக நாடு என்பதை நிரூபிப்பதற்கும், புலிகள் உண்மையிலேயே முடக்கப்பட்டு விட்டார்கள் என்பதை உணர்த்துவதற்கும் இலங்கை அரசுக்கு இப்போதுள்ள துருப்புச் சீட்டு சார்க் மாநாடுதான்.

எந்தளவு தூரம் சார்க் மாநாடு வெற்றிகரமாக - நாட்டில் எவ்வித குழப்பங்களுமின்றி - நிறைவேற்றப்படுகின்றதோ அந்தளவு தூரத்திற்கு இலங்கை அரசின் மேற்குறித்த கணக்குகள் நிறைவேறுவதற்கான சாத்தியங்களும் அதிகமாவுள்ளன.

### சார்க் சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறார்களா புலிகள்?

அதேவேளை புலிகள் தரப்பும் இத்தகைய தொரு சந்தர்ப்பத்திற்காகவே காத்திருப்ப தாகப் படுகின்றது. சார்க் மாநாடு நடத்தப்படு வதற்குரிய சூழலை தலைநகரில் இல்லாமற் செய்தல், படைக்குறைப்புச் செய்யப்படும் இடங்களில் தாக்குதல்களை நிகழ்த்துதல், தமக்கெதிரான அரச பரப்புரைகளுக்குப் பதிலடியாக பாரிய தாக்குதல்களை

(24 ஆம் பக்கம் பார்க்க)


வெள்ளவத்தையில்.......

SPOKEN ENGLISH



பிரதி ஞாயிறு
மு.ப. 8.30 - பி.ப. 12.30

Duration 6 Month

ஆரம்பம் ஜூலை 13
ஞாயிறு மு.ப. 8.30

ஆங்கிலம் கற்றலில் மாணவர்களின் உளவியல் ரீதியிலான பிரச்சனைகளுக்கு பரிகாரமாக விசேடமாக வடிவமைக்கப்பட்டதும் அடிப்படையிலிருந்து கற்று ஆறே மாதங்களில் ஆங்கிலத்தில் அச்சமின்றி பேசி உருவுவதுமான பாடநெறி.

மாமுன் ரக்கீம்
English Special Trained Dip in Eng. Teaching

ஆசிரியரின் தொடர்புகளுக்கு Call & SMS : 077 3696634

Sangam Academy (CTS)
61, 37th Lane, Colombo - Tel ; 060 2150082

சுடர் ஒளி
ஜுலை 13 - ஜுலை 19, 2008
85, ஜெயந்தவல்லி மகாரச்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன் 0114734451—6
பக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## இந்தியாவின் பித்தலாட்டம்

இலங்கை விவகாரத்தில் இந்தியத் தரப்பின் குள்ளநரித்தனப்போக்கு ஈழத்தமிழர்களை எரிச்சலுக்குள்ளும் பெரும் விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

சிறுபான்மைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தைத் தூண்டி எரியவிட்டபடி, அதைப் பயன்படுத்தித் தனது காரியத்தை மட்டும் சாதித்துக்கொள்வதில் புதுடில்லி கண்ணாக இருக்கின்றதோ என்ற பலமான சந்தேகம் ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுவிட்டது.

புதுடில்லியில் தற்போதைய காங்கிரஸ் அரசும், இலங்கையின் யதார்த்தப் புறநிலைகளை ஆட்சிப்பீடத்தின் அதிகார இக்கடிவாளத்தைக் கையில் வைத்திருக்கும் சோனியாகாந்திக்கு எடுத்துரைக்கமுடியாத அதிகாரவர்க்கமும், குயுக்தித்தனத்தில் சிறந்துவிளங்கும் எம்.கே.நாராயணன் போன்ற குளறுபடிகளின் கைகளில் நிர்வாக முடிவுகளை எடுக்கும் பொறுப்பும், தொடர்ந்து நீடிக்கும் வரை இந்தியத் தரப்பை நம்புவதில் பயன் ஏதுமில்லை என்ற ஏமாற்ற நிலைக்குத் தமிழர் தரப்பு வந்துவிட்டது போலவே தோன்றுகின்றது.

அண்மையில் கொழும்பு வந்த இந்திய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவிடம் தமது கடைசி முயற்சியாக விடயங்களை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி முறையிட்டுப் பார்த்தார் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும், திருகோணமலை எம்.பியுமான இரா.சம்பந்தர்.

அதுவும் பயன் தந்ததாகப் பெறுபேறு கிட்டவில்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் மற்றும் அதனை அடுத்து கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஆகியவற்றில் இந்தியாவின் நலனை ஒட்டிக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எல்லாம் இன்னும் செயற்பாட்டில் - நடைமுறையில் - தொடர்கின்றன. ஆனால், ஈழத்தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் அவர்களின் நலன் தொடர்பாகவும் அவற்றில் குறிப்பிடப்பட்டிருந்தவை எல்லாம் இன்று காற்றில் பறக்கவிடப் பட்டுவிட்டன.

இதை இந்தியத் தரப்பிடம் சம்பந்தர் நேரடியாகவும் வெளிப்படையாகவும் சுட்டிக்காட்டியும் பயனோ, பலனோ ஏற்படவேயில்லை.

மாறாக, மன்னாரில் கடலுக்கு அடியில் எண்ணெய் அகழும் பொறுப்பு சீனாவிடமிருந்து பிடுங்கப்பட்டு அயல்வல்லாதிக்க நாடான இந்தியாவுக்குக் கிட்டும் நடவடிக்கையே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

அதுவும் தமிழர் தாயகப் பிரதேசத்தை அண்டிய மூலவளத்தைச் சூறையாடும் விவகாரங்களிலேயே இந்தியா முனைப்புக் காட்டுகின்றனரே தவிர, ஈழத் தமிழர்களின் இன்றைய - அவசர - அவசிய - மனிதாபிமான மற்றும் மனிதநேய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதில் கூட அது நாட்டம்காட்டவில்லை என்ற ஆழமான - பலத்த சந்தேகம் தமிழர்கள் தரப்புக்கு ஏற்பட்டு பலமாகி வருகின்றது.

இதன் காரணமோ, என்னவோ இந்தியத் தரப்பு மீது-புதுடில்லி நிர்வாகம் மீது - தாம் வைத்திருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையை இரா.சம்பந்தர் போன்ற மிதவாதத் தலைவர்கள் கூடப் படிப்படியாக இழக்கும் நிலைமை வந்திருக்கின்றது.

அண்மையில் கொழும்பு வந்திருந்த இந்திய உயர்மட்டக் குழுவினர் சம்பந்தருடனான தமது சந்திப்பின்பின்னர் அவரை மேலதிக பேச்சுக்காகப் புதுடில்லி வருமாறு அழைத்திருந்தனர்.

ஆனால், அந்தச் சந்திப்புக்காகப் புதுடில்லி செல்வதில் சம்பந்தர் எம்.பி. இப்போது அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்று தெரிகிறது.

'பார்ப்போம். சார்க் மாநாடு முடியட்டும். ஆறுதலாகப்பேசுவோம்' - என்றவாறான பதில்கள் இப்போது சம்பந்தரிடம் இருந்து வருகின்றன என்று கொழும்பில் உள்ள இந்தியத் தரப்புகள் விசனிக்கின்றன.

ஈழத்தமிழர்களின் பிரச்சினையை வைத்து அவர்களின் முதுகில் சவாரி விட்டுத் தன் காரியத்தைப் பார்க்கும் புதுடில்லியின் தற்போதைய அரசிடம், பல்லிளித்து இனியும் ஏமாறுவதில் அர்த்தம் இல்லை என்ற ஏமாற்றத்தின் உச்சியில் சம்பந்தர் இப்படி விட்டேத்தியாக நடந்து கொள்கின்றாரோ தெரியவில்லை.

'இப்போதைய புதுடில்லி அரசு, தன்னையே அதிகாரத்தில் நிலைநிறுத்த முடியாது தடுமாறுகிறது. அதனுடன் பேசி என்ன பயன்? அடுத்து வரும் புதிய அரசுடனாவது சேர்ந்தியங்கி ஈழத் தமிழர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுப்போம்!' - என்று சம்பந்தர் எண்ணுகின்றாரோ என்னவோ..!

எது, எப்படியென்றாலும் தற்போதைய புதுடில்லி ஆட்சிப்பீடம் ஈழத்தமிழரின் முதுகில் சவாரிவிட்டுத் தன்காரியத்தை மட்டும் கனகச்சிதமாக நிறைவேற்றிக்கொண்டுசெல்வது இந்தப் பிராந்திய அரசியலில் முழுப் பித்தலாட்டமாகும்.

இது,போறழிவால் பேரவலப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் மனதை மேலும் வருத்தும் ஈனத்தனம்மிக்க கோழைச்செயலாகும்.

# கிழக்குக் குட்டையில் மீன்பிடிக்க கோட்டபாய வகுத்த திட்டம்:

## கருணா - பிள்ளையான் குழப்பம்!

**அதிரடி ரங்கு**



பிரித்தாளுவது என்பது எப்போதுமே ஆட்சித்தரப்பின் சூழ்ச்சித் திட்டங்களில் ஒன்றுதான். அதிகார சாணக்கியத்தில் அது முக்கியமான ஓர் அம்சம்.

தங்களது நியாயமான உரிமைகளுக்காகவும், விடுதலைக்காகவும் கிளர்ந்தெழுந்து போராடும் தமிழர் தரப்பை அடக்குவதற்கு பேரினவாத ஆட்சியாளர்கள் கையாளும் பிரதான தந்திரங்களுள் இதுவும் ஒன்று.

குமாரசூரியர், அருளம்பலம், இராஜதுரை என்று தொடங்கி இன்று டக்ளஸ் தேவானந்தா வரை இந்தத் தந்திரோபாயத்துக்குத் தமிழர் தரப்பில் பிளப்புக்குக் கருவியான - கோடரிக்காம்பான - ஆப்பான - பிரகிருதிகள் பலர்.

அந்த வரிசையில் இப்போது கருணாவும் முக்கியமானவர்.

வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் ஐக்கியப்பட்டு நின்று உரிமைக்காகப் போராடும் ஈழத்தமிழர்களின் பலத்தைச் சிதைப்பதற்காக, அந்த ஐக்கியத்திலி ருந்து கிழக்குத் தமிழர்களைப் பிரித்து நலிவடையச் செய்யும் எத்தனம் சிங்களத்தால் முன்னெடுக்கப்பட்டது. அதற்குத் துணைபோனார் கருணா.

யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் அரசுக் கட்டுப்பாட்டுப் பிரதேசம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனத் தமிழர்களின் தாயகம் பிரிக்கப்பட்டு வகுக்கப்பட்டிருந்தமையால் புலிகளின் வன்னித் தலைமையகத்தை ஒட்டிய பெருநிலப்பரப்புடன் தரைவழியில் தொடர்பற்ற - தனிப்பிரதேசமாக - கிழக்கில் தமிழர் தாயகப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தப் பிரதேசத்துக்குப் புலிகளின் தளபதியாக இருந்த கருணா, புலிகளின் பிரதான தளப்பிரதேசத்தோடு நிலத் தொடர்பற்ற அந்தச் சாதகமான நிலைமையைத் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தித் தமது கட்டப்பாட்டில் தனி இராச்சியமாக இருந்த பிரதேசத்தில் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான துரோகத்துக்கு இலகுவாகத் துணைபோனார்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கருணாவை வைத்து நலிவடையச் செய்த சிங்களம், அதே பிரித்தாளும் சூழ்ச்சியை முன்னிறுத்தி பின்னர் கருணாவையும் செல்லாக் காசாக்கியது.

புலிகளின் தலைமைக்கு முதுகில் குத்தி, விடுதலைப் புலிகளைக் காட்டிக்கொடுத்த கருணாவுக்கு அதனால் சொந்தக் காலில் நிற்கும் சுதந்திர உரிமை பறிபோனது. சிங்களத்தின் படைத்தரப்பின் தலைமை ஆட்டுவிக்கும் சொற்படி ஆடவேண்டியவரானார் கருணா.

அவரின் 'மிதப்பிலும்', புலிகளின் பாசறையில் தளபதியாக வளர்ந்ததினால் இயல்பாகவே அவரிடம் குடிகொண்டிருந்த கிளர்ந்தெழும் புரட்சி நடத்தையிலும் சந்தேகம் கொண்ட சிங்களத் தலைமை, தங்களின்ஆதிக்கத்தில் செயற்பட வேண்டிய கட்டாயத்தில் கருணாவும் அவரது அணியினரும் இருந்தமையைப் பயன்படுத்தி கருணாவை செல்லாக் காசாக்கி வெட்டிவிட்டது.

தங்களது 'போடு தடி'யாக செயற்படக்கூடியவர் என்று தான் கருதிய பிள்ளையானைக் கொம்புசீவி, முன்னிறுத்தி, கருணாவை பாதுகாப்புத் தரப்பு பல்லுப் பிடுங்கிய பாம்பாகக் கழற்றிவிட்டது.

ஏற்கனவே,விடுதலையின் பெயரால் தான் தளபதியாக இருந்து, போராட்ட வேள்வியில் ஆகுதியாகிய பல்லாயிரம் வேங்கைகளை மாவீரர் துயிலும் இல்லங்களில் வித்துடல்களாகப் புதைத்து, நடுகற்கள் நட்டுப் போற்றிய கருணா, தாம் அரசுப்பக்கம் குத்துக்கரணம் அடித்ததும், கிழக்கில் அந்த மாவீரர்கள் மீளாத் துயில் கொள்ளும் மாவீரர் துயிலும் இல்லங்களையே 'புல்டோசர்' போட்டு அழிக்கும் ஈனச்செயலுக்குத் துணை போயிருந்தமை, கிழக்கில் கருணா அணியில் நிற்கவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிய புலிஉறுப்பினர்கள் மனதில் பெரும் விசனத்தையும், எரிச்சலையும், கோபத்தையும், ஆவேசத்தையும் தூண்டியிருந்தது. கருணா அணிக்குள் நிலவிய இந்த அதிருப்தி நிலைமை கருணாவின் தலைமைக்கு பிள்ளையானைக் கொண்டு ஆப்புவைக்க சிங்களத்துக்கு நன்கு உதவியது.

புலிகளைப் பிளக்கும் வேலைக்கு கருணாவைப் பயன்படுத்தி, பின்னர் கருணா தலைமையிலான அணியைப் பிளப்பதற்கு பிள்ளையானை வகையாக உபயோகித்ததும் - வேலை முடிந்ததும் - கருணாவை வெளிநாட்டுக்கு அனுப்பிக் கையைக் கழுவி விட பாதுகாப்புத் தரப்பு முடிவு எடுத்தது.

அதன்படி காரியங்கள் ஒப்பேறின.

ஆனால், பிள்ளையான் பாதுகாப்புத் தரப்பு எதிர்பார்த்த மாதிரி 'தலையாட்டும் தஞ்சாவூர் பொம்மை' அல்லத் தாம் என்பதை தனது செயற்பாடுகள் மூலம் நிரூபிக்கத் தொடங்கியதும் கலங்கிப் போனது அரச பாதுகாப்புப் பீடம்.

கருணா குழுவின் இராணுவத் தலைமை அதிகாரத்தைக் கைப்பற்றிய பிள்ளையான், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் தென்னிலங்கைச் சமுதாயத்தின் மத்தியில் தாமே கிழக்கில் அரசியல் தலைமையையும் கொண்டவர் என்று காட்டிக்கொண்டார்.

இப்படி இரண்டு வலுவையும் கொண்ட பிள்ளையானிடம் இருந்து புலி விரோத எடுப்பு அதிகம் வெளிப்படாதமையும், 'தமிழ்த்தேசியம்' பற்றிய சிந்தனைத் தெறிப்பு அவ்வப்போது ஆழமாக வெளிப்பட்டமையும் கொழும்பைச் சற்று சிந்திக்க வைத்தன எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் பிள்ளையானை 'பிரபாவின் ஆள்' என்று சந்தேகிக்கும் வதந்திக் கதைகள் தென்னிலங்கையில் உலாவரத் தொடங்கின.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல நடந்த ஒரு சம்பவம் பிள்ளையான் குறித்துத் தீர்க்கமான ஒரு முடிவை சிங்களத் தலைமை எடுப்பதற்குக் கார்ணமாகிவிட்டது எனக் கூறப்படுகின்றது.

வன்னியில் புலிகளின் செயல்பாட்டை ஆழ ஊடுருவும் அணிகள் மூலம் முடக்கலாம் எனத் திட்டம் போடும் கொழும்புக்கு, வன்னிக்குள் ஊடுருவி அந்த நாசவேலைகளைச் செய்வதற்குப் பொருத்தமான ஆட்களுக்குப் பற்றாக்குறை. ஆகவே, அந்த வேலையைச் செய்வதற்குத் தமது அணியிலிருந்து குறைந்தது இருநூறு பேரையாவது பிள்ளையான் தரவேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாகவே பிள்ளையானைப் பணித்தாராம். ஆனால், பிள்ளையானோ முகத்துக்கு நேராகவே அதற்கு மறுத்துவிட்டார் என்று நம்பகமாக அறியவந்தது.

'கிழக்கில் எனது மக்களுக்கு ஏதும் செய்வதுதான் எனது நோக்கம். வடக்கில் இருப்பவர்களை அழிப்பதற்குத் துணை போவதல்ல' - என்ற சாரப்பட பிள்ளை யான் கொடுத்த பதிலே கோட்டாபயவைச் சீற்றமுற வைத்ததோடு, கருணாவின் மீள் வரவுக்கும் வழிசெய்தது எனத் தெரிகின்றது.

லண்டனிலிருந்து கருணா திருப்பி அனுப்பப்பட்டால் அவரது பாதுகாப்புக்கு ஊறு ஏதும் விளைவிக்கப்படமாட்டாது, அது உறுதிப்படுத்தப்படும் என்ற வாக்குறுதி, இதை அடுத்தே, உத்தியோகப்பற்றற்ற முறையில் கொழும்பினால் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

தாம் லண்டனுக்கும் ஒளித்துக் கடத்தப்பட்டமையின் பின்னணியில் சூத்திரதாரியாக கோட்டாபயவே இருந்தார் என்ற முழு உண்மைகளையும் பிரிட்டிஷ் அரசுக்கு ஒப்புவித்து, கோட்டபாயவின் முகத்திரையைக் கிழித்துக் காட்டிக் கொடுத்த கருணாவை, மன்னித்து, அந்தத் தவறுகளை மறந்து, கருணாவை மீண்டும் அரவணைக்கக் கோட்டாபய தீர்மானித்தமை, எகிறிக் குதிக்கும் பிள்ளையானுக்கு ஒருபாடம் கற்பிக்கவே என்பது உள்ளாந்தம்.

'கருணாவை வெட்டி, நான் உன்னை வளர்த்து விட நீ எனக்கா வேலை காட்டுகிறாய்? கொஞ்சம் பொறு. மீண்டும் கருணாவைக் கொண்டுவந்து உன்னை செல்லாக்காசாக்கி அடக்கிக் காட்டுகிறேன்' - என்று கறுவிய கோட்டாபய, அதனை இப்போது செயற்படுத்துகிறார். அந்தத் திட்டமே இப்போது கட்டவிழ்கின்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கொழும்பு திரும்பிய கருணா, கிழக்கில் தன்னுடைய அணியினரிடையே தாம் இழந்த - தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட - தலைமையையும் அதிகாரத்தையும் மீளப்பெறுவதற்காக, கோட்டாபயவின் துரோகங்களை மறந்து - வேறு வழியின்றி - அவரின் விசுவாசம்மிக்க 'எடுபிடி'யாக அவர் இட்ட பணியைத் தொடர்கின்றார். கருணாவுக்கு விசுவாசமானவர் என்று கூறப்படும் சின்னத்தம்பி மாஸ்டர் என்பவர் தமது அணி உறுப்பினர்களில் இருந்து ஒரு சிறு எண்ணிக்கையானோரை அரச படைகளின் ஆழ ஊடுருவும் குழுவுக்குத் தந்துதவ இணங்கிவிட்டார் என்றும் கேள்வி. அதுவும் கோட்டாபயவுக்கு திருப்தியைத் தந்திருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன.

ஆக இனி -

கிழக்கில் குட்டையைக் குழப்பி, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் கோட்டபாயவின் தந்திரோபாயத்தின்படி -

கிழக்கில் மாகாண முதல்வர் என்ற அரசியல் அதிகாரத்தை வைத்திருக்கும் பிள்ளையானின் இராணுவச் செயற்பாட்டுப் பல்லுப் பிடுங்கப்படும். அரசியல் அதிகாரச் செல்வாக்கும் அடிதளரும். கருணா - பிள்ளையான் நெருக்கடி முற்றும் - என்று எதிர்பார்க்கலாம்.

நாடு திரும்பிய கருணாவை நேரில் சந்திப்பதற்குத் தமக்கு நேரமில்லை என்று கூறி உதாசீனப்படுத்தி ஒதுக்கிய பிள்ளையான், பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவின் அருட்கடாட்சம் - பார்வை - கருணா பக்கம் அதிகம் சாயத் தொடங்கினால், வேறுவழியின்றி மீண்டும் கருணாவின் தொண்டராக மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டு, மாறினாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

# வெற்றுக்கோஷமிடும் படைத்தரப்பின் மத்தியில் புற்றெடுத்துப் போயுள்ள ஆளணிப் பிரச்சினை

வட போர் அரங்கில் பெருமெடுப்பிலான போரை நடத்திவரும் இலங்கை அரசுக்கு தனது படைகளில் ஏற்பட்டுள்ள ஆட்பற்றாக் குறையே புலிகளை விட பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

தமது படைகள் வன்னியில் பெரிய பெரிய பிரதேசங்களையெல்லாம் கைப்பற்றிவிட்டன எனக் கொழும்பில் அரசு அறிக்கை விட்டு ஆனந்தம் கொள்கின்றபோதும், பிடித்த இடங்களைத் தக்கவைப்பதற்கு ஆட்கள் இன்றி அவதிப்படும் பெரும் சிரமம் களத்தில் நிற்கும் அரச படைகளுக்குத்தான் தெரியும்.

அரச படைகள் எதிர்நோக்கியுள்ள இந்தப் பெரும் பிரச்சினையை உடனடியாகச் சீர்செய்யும் வகையில், தெற்கில் படைகளுக்கு ஆட்சேர்க்கும் தீவிர முயற்சியில் இராணுவம் இறங்கியுள்ளது.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள - கைத்தொலைபேசிகள் மூலம் குறுந்தகவல் ஊடாக படைகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான விளம்பரம் - மற்றும் தப்பியோடிய படையினருக்கு பொதுமன்னிப்பு வழங்கி மீண்டும் படையில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் ஆகியவை இராணுவம், வன்னிக்களத்தில் எதிர்நோக்கியிருக்கும் ஆட்பற்றாக்குறையைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

2002 இல் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னரான காலம் முதல் 2005 வரையான காலப்பகுதிக்குள் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் எண்ணிக்கை 55 ஆயிரம் என்று இராணுவத்தரப்பின் புள்ளி விவரம் கூறுகின்றது. அவ்வாறு தப்பியோடியவர்களை மீண்டும் படையில் சேர்த்துக் கொள்வதற்கு அரசுத் தரப்பு மேற்கொண்ட பகீரதப்பிரயத்தனத்தின் பயனாக மிகச் சிறிய எண்ணிக்கையானோரை அது மீளப் பெற்றுக்கொண்டது.

ஆனால், இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட யுத்தப் பீதியை தொடர்ந்து 15 ஆயிரம் பேரை படைகளுக்கு இணைத்துக் கொள்ளும் மீள்முயற்சி ஒன்றை தொடங்கிய அரசு, அதில் சிறிதளவு வெற்றியே கண்டிருக்கிறதெனக் கூறப்படுகின்றது.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கித் தள்ளப்பட்டு, பொருட்களின் விலைகள் படுபயங்கரமாக அதிகரித்துவிட்டபின்புலத்தில், பல்வேறு சலுகைகள் மற்றும் அதிக சம்பளம் போன்ற விளம்பரங்களைக் காண்பித்து படைகளுக்கு ஆட்சேர்க்க அரசு முயற்சி எடுத்ததால் அது இவ்வாறு சிங்கள இளைஞர்களைப் படையில் இணைத்துக்கொள்ள உதவிபுரிந்தது.

இதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரப்போகின்ற மழைகாலத்துக்கு முன்னர் தற்போது ஆரம்பித்துள்ள படைநடவடிக்கை மூலம் கணிசமான வெற்றியை வன்னித் தளத்தில் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பது அரசுத் தரப்பின் திட்டம். இதற்காகவே இராணுவம் வடபோர் முனைகளில் படாதபாடுபட்டு வருகிறது.

அவ்வாறு பாரிய வெற்றிகளை பெற வேண்டுமானால் தற்போது இராணுவம் களமுனையில் சந்தித்துவரும் இழப்புக்களை உடனுக்குடன் சரிசெய்யவேண்டும். உயிரிழந்த, காயமடைந்த படையினருக்குப் பதிலாக புதிய படையினரை களமுனைக்கு அனுப்பவேண்டும். அதற்கு போதிய ஆளணி வேண்டும்.

ஆனால், தற்போது படைத்தரப்பில் நிலவும் பாரிய ஆட்பற்றாக்குறைப் பிரச்சினையால், களமுனையில் செய்தே ஆகவேண்டிய இந்தப் படைகளை மீளநிரப்பும் பணி பெரும் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் ஆழக்கால் பதித்த அரச படைகள் 'ஜெயசிக்குறு' காலப்பகுதியில் வாங்கிய பலத்த பதிலடிக்குத் தற்போது நிலவும் இதே மாதிரியான ஆள்பற்றாக்குறையும் பிரதான காரணம் என்பது அரசுக்கு நன்றாகவே தெரியும்.

'வன்னியைப் பிடித்துவிட்டோம், புலிகளை முடித்துவிட்டோம்' என்று அறிவித்தபடி வவுனியாவிலிருந்து மாங்குளம்வரை போய் நின்ற அரச படைகள் புலிகள் கொடுத்த பதிலடியால், ஓமந்தை தாண்டிய பின்னர் தான் தமது ஓட்டத்தையே நிறுத்தின. அவ்வளவுக்கு தாம் பிடித்த பிரதேசங்களைத் தக்க வைத்துக்கொள்ள இராணுவத்திடம் அப்போது படைகள் இருக்கவில்லை. ஒரேயடியாக மாங்குளம் வரை முன்னேறிப் போய் நின்றவர்களுக்கு தமக்கு பின்னால் - தாம் கைப்பற்றிய பிரதேசங்களில் - என்ன நடக்கிறது என்பது கூட தெரிந்திருக்கவில்லை.

'ஜெயசிக்குறு' காலப்பகுதியில் இராணுவம் வன்னியின் கிழக்கு பகுதியால் கொக்குதொடுவாய் முதல் மன்னார் வரையான பிரதேசங்களை தனது வல்வளைப்புக்குள் கொண்டுவந்து, வன்னியைக் கிட்டத்தட்ட தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது என்று கூறலாம்.

ஆனால், அவ்வாறு கைப்பற்றிய பிரதேசங்களைத் தக்கவைப்பதற்கு அரசு அங்கு நிறுத்தியிருந்த படைகளையும் அவற்றின் இன்றைய நிலைகளையும் நோக்கினால் ஆட்பற்றாக்குறை என்ற விடயம் இலங்கைக்கு பெரிய சிக்கலாகவுள்ளது என்பது புரியும்.

கொக்குதொடுவாயிலிருந்து ஒதியமலை வரை தேசியக்காவல் படையின் 22-3 மற்



'மக் இன்பென்ரி' படையணி அங்குரார்ப்பண நிகழ்வு

றும் 22-4 பட்டாலியன்கள், ஒதியமலை முதல் நெடுங்கேணிவரை தொண்டர்படை, நெடுங்கேணியிலிருந்து ஒட்டுசுட்டான் வரை தேசியகாவல் படையின் 56-3 பிரிவு, ஒட்டுசுட்டான் முதல் அம்பகாமம் வரை இலங்கை கடற்படை, அம்பகாமம் முதல் மாங்குளம் ஊடாக வன்னிவிளாங்குளம்வரை தேசியக் காவல்படையின் 56-2 பிரிவு, வன்னிவிளாங்குளத்திலிருந்து மன்னார் முள்ளிக்குளம்வரை இலங்கை விமானப்படை, அங்கிருந்து மன்னார் மத்தி வரை தேசியகாவல் படையின் 21 ஆவது பிரிவு.

இந்த நிலையில்தான் வன்னியின் தென்பகுதியில் இலங்கைப் படைகளால் சுமார் 130 கிலோ மீற்றர் நீளப்பகுதி தக்க வைக்கப்பட்டிருந்தது.

இங்கு குறிப்பிடப்பட்ட தேசியகாவற் படை (SLNG-Sri Lanka National Guard) எனப்படுவது ஆரம்பகாலங்களில் சிறு சிறு பிரிவுகளாக சிறியரக ஆயுதங்களுடன் - இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டு வந்தது. 1992 காலப்பகுதியில் இந்தப் படைகள் இலங்கை இராணுவத்தில் முழுமையாக இணைத்துக்கொள்ளப்பட்டன. சுமார் 16 ஆயிரம்பேரை கொண்ட இந்தப் படைகள் 25 பட்டாலியன்களாக பிரிக்கப்பட்டு அவ்வப்போது களமுனைத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

'ஜெயசிக்குறு' காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட தேசியக்காவற்படையின் 21, 22 மற்றும் 56 பிரிவுகள் தற்போது இலங்கை இராணுவத்திலேயே இல்லை. அவற்றிலிருந்தவர்களில் பெரும்பகுதியானவர்கள் தப்பியோடிவிட்டார்கள்.

இந்தப் படையணிகளில் எஞ்சியிருந்தவர்களையும், இராணுவத்தில் இருந்து தப்பி ஓடி மீண்டும் இணைந்து கொண்டவர்களையும் ஒருங்கிணைத்துத்தான் இராணுவம் தற்போது புதிய படையணிகளை உருவாக்கிவருகிறது.

இந்த வகையில் அமைக்கப்பட்டு களத்தில் இறக்கிவிடப்பட்டுள்ள படையணிகள் தான் 58 ஆவது டிவிஷன் எனப்படும் செயலணிப்படை ஒன்றும் மற்றும் செயலணிப் படை இரண்டும் ஆகும். இவற்றில் 58 ஆவது பிரிவு படையணி டிவிஷன் ஒரு படையணியாகக் கருதப்படுகின்றபோதும் உண்மையில் டிவிஷனுக்குரிய அம்சங்கள் அந்தப்படையணியிடம் இல்லை என்பது உண்மை.

ஒரு டிவிஷன் என்றால் அதற்கு இவ்வளவு மோட்டார்கள், இவ்வளவு டாங்கிகள் என்று படையணிக்கோட்பாடு உள்ளது. அவ்வாறான எந்த கோட்பாடுகளையும் நிறைவு செய்யாமல் இராணுவத்தினால் களமுனைக்கு அனுப்புவதற்கென அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்ட குறைப்பிரசவப் படையணிகள்தான் இவை.

அதனால்தான் இவை வலிந்த தாக்குதல் அணிகளாக அன்றி, கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை தக்கவைப்பதற்காகவும் தற்காப்பு தாக்குதல்களுக்காவும் என பணி ஒதுக்கப்பட்டு களத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இவற்றுக்குப் புகழ்மாலை சூட்டுவதும் இவர்களின் வீரப்பிரதாபங்களை வெகுவிரைவில் களத்தில் காணலாம் என்று தென்னிலங்கை சிங்கள ஊடகங்களும் இராணுவத் தரப்பினரும் தினமும் வெளியிடும் தகவல்களும் களத்தில் நிற்கும் புலிகளைப் பொறுத்தவரை மிகப்பெரிய நகைச்சுவை.

ஏனெனில், இந்தப்படையணிகள் மற்றும் வன்னிப்போர் முனையில் உள்ள இராணுவ இயந்திரத்தின் செயற்பாடு ஆகியவற்றின் பின்னணி தகவல்கள் சுவாரசியமானவை.

'செயலணிப்படை - இரண்டு' என்ற பெயரில் தற்போது கண்டி வீதிக்கு மேற்காகப் பாலமோட்டையிலிருந்து கண்டி வீதி வரையான பிரதேசத்தைத் தக்கவைப்பதற்கென நிறுத்தப்பட்டுள்ள படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் றொல்ப் நுகேரா. இவர் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் விசுவாசி.

இந்த ஆண்டின் முற்பகுதியில் இவரது தலைமையில் இயந்திர இலகுபடை (Mac Infantry) என்ற புதிய படையணியை இலங்கை இராணுவம் ஆரம்பித்தது.

சாதாரணமாக டாங்கிகளில் இரண்டு அல்லது மூன்றுபேர் இருந்து தாக்குதலை நடத்தலாம். ஆனால் 'மக் இன்பெண்டரி' படையணியில் உள்ள இந்தப் புதிய கவசக் கலத்தில் சுமார் 17 பேர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தலாம். இவ்வாறான வசதிகளுடன் கூடிய ஒரு கொமாண்டோ படையணியே இது.

இந்தக் கவசப்படையணியின் தலைவராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் றொல்ப் நுகேரா, நடைபெறப்போகும் புலிகளுக்கு எதிரான போரில் பல வெற்றிகளைக் குவிப்பார் என்றும், இவர் இலங்கை படைக்கு கிடைத்த புதிய துட்டகைமுனு என்றும், ஆயிரம் ஆயிரமாய் புலிகளின் தலைகளை கொய்யப்போகும் அபூர்வ அதிரடி நாயகன் என்றும் இராணுவத்தரப்பினால் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறு படையினர் மத்தியில் புகழாரம் சூட்டி, இந்த 'மக் இன்பென்ரி' படையணியின் தொடக்க நிகழ்வு கொடிகாமத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது அந்த இடத்தை நோக்கி விடுதலைப்புலிகள் மேற்கொண்ட ஆட்லறி தாக்குதலில் பிரிகேடியர் றொல்ப் நுகேரா படுகாயமடைந்தார். காயமடைந்த இவர் குணமடைந்து மீண்டும் கடமைக்கு திரும்பினார்.

ஆனால், இன்று வரை இந்த 'மக் இன்பென்ரி' படையணி களத்தில் இறங்கவே இல்லை, முகமாலை ஊடாகப் படையினரால் நான்கு தடவைகள் வலிந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு விட்டன. எந்த ஒரு தாக்குதலிலும் படைத்தரப்பில் இந்த படையணி பயன்படுத்தப்படவில்லை.

இந்தப் படையணி தொடர்பாக கேணல் தீபன் கருத்து தெரிவிக்கையில் "இலங்கைப் படையினரின் இந்தப் புதிய படையணியைப் பார்ப்பதற்கு நாம் ஆவலாக உள்ளோம். அதனை ஒரு முறையாவது முகமாலை பக்கம் தலை காட்டவிட்டால் நன்றாகவிருக்கும்.

"நாங்கள் வேண்டுமானால், கண்ணி வெடிகளையெல்லாம் அகற்றி அந்த படையணி வருவதற்கு வழிசெய்து தருகிறோம். அந்த படையணியை மட்டும் ஒரு முறை எமக்கு காண்பியுங்கள்".

"இப்போது எம்மிடமிருக்கும் இலங்கைப் படைகளின் சாமான்களுடன் வந்து சேர்ந்த இன்னொரு சாமானாக இருந்துவிட்டுப் போகட்டும்" என்று கிண்டலடித்திருந்தார் தீபன்.

ஆரம்ப நிகழ்வில் கொடுத்த முதலடியில் மாயமாகிய இந்த படையணியின் தலைவரே மன்னாரில் வந்துநின்று கொண்டு வன்னிக்குள் நுழையப் போகின்றார் என அறிக்கை விடுகிறார்.

இவரைப்போல, 58ஆவது டிவிஷன் எனப்படும் செயலணிப்படை - ஒன்றின் கட்டளை தளபதி பிரிகேடியர் சவீந்திர டி சில்வா. மன்னாரின் தெற்குப் புறமாக நிறுத்தப்பட்டுள்ள இந்த அணியில் சுமார் எட்டு பட்டாலியன்கள் உள்ளன. முழுமையான டிவிஷன் தகைமையை எட்டாத படையணியென இதனையும் கூறலாம்.

இந்தப் படையணி அதிகாரியின் பின்னணியிலும் ஒரு சம்பவம் உள்ளது.

ஓயாத அலைகள் - 3 காலப்பகுதியில் கனகராயன்குளத்தில் இருந்த 55-56 பிரிகேட் தலைமையகம் மீது புலிகள் கடும்தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். தலைமையக வளாகத்தினுள் ஆட்லறிகள் வீழ்ந்து வெடித்தன.

புலிகளின் திடீர் தாக்குதலை எதிர்பாராத படையினர் நாலாபக்கமும் சிதறி ஓடினர். ஓடிப் போய் வெவ்வேறு இடங்களில் பதுங்கிக் கொண்ட படையினர், எதிர்த்தாக்குதல் நடத்துவது குறித்த உத்தரவுகளை பெற அப்போது அங்கிருந்த 56 ஆவது பிரிகேட் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி குணசேகர மற்றும் 55 ஆவது பிரிகேட் தலைமை அதிகாரி பிரிகேடியர் சி.எம்.போறன் ஆகியோரை தொடர்புகொள்ள முயற்சித்தனர். ஆனால், முடியவில்லை. 24 மணிநேரமாக இரண்டு தலைமை அதிகாரிகளிடமிருந்தும் எந்தச் சத்தமும் இல்லை.

பின்னர் கிடைத்த தகவலின்படி, புலிகளின் திடீர் தாக்குதலால் ஓடிப்போய் பதுங்கு குழிக்குள் ஒளிந்துகொண்ட இந்த இரண்டு அதிகாரிகளும், பல மணிநேரத்தின் பின்னர், அங்கிருந்து ஒருவாறு தப்பிச்சென்று இன்னொரு முகாமிலிருந்த கவசவாகனத்தை எடுத்துக் கொண்டு வவுனியாவுக்கு சென்றுவிட்டார்கள்.

இந்தச் சம்பவம் அப்போது கொழும்பு பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் இராணுவத் தளபதியால் தெரிவிக்கப்பட்டபோது, அந்த இரண்டு தளபதிகளையும் அழைத்த - அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இராணுவத்திலிருந்தே அவர்களைத் தள்ளி வைத்துவிட்டார் என்று அப்போது பேச்சடிபட்டது.

## ஆஸ்திரேலியாவிலிருந்து தெய்வீகன்

மேற்குறிப்பிட்ட கனகராயன் குளத்தாக்குதலில் அகப்பட்ட அந்த முகாமிலிருந்த கப்டன் தர அதிகாரியே தற்போது பிரிகேடியராகவுள்ள சவீந்திர டி சில்வா. அந்த தாக்குதலில் சிதறி ஓடிய இவர் புளியங்குளம் பிரதேசத்தில் ஒளித்திருந்துவிட்டு பின்னர் ஒருவாறு வவுனியாவுக்கு போய்ச் சேர்ந்துவிட்டார்.

இவரும் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவின் தீவிர விசுவாசி.

ஓயாத அலைகள் - 3 தாக்குதல்களால் படையிலிருந்து தப்பியோடி பின்னர் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட படையினர் இந்த தளபதிகளின் கீழேயே இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

புலிகளின் தாக்குதலால் இப்படியான கசப்பான அனுபவங்களை பெற்ற இந்தப் படையினர் தற்போதைய களமுனையில் புலிகள் வலிந்த தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்கும்போது, அதற்கு எவ்வாறு பதிலளிக்கப்போகிறார்கள் என்பது படைத்தலைமைக்குத்தான் வெளிச்சம்.

# சிறு விளம்பரங்கள்

## திருமண சேவை

சுலபமான மணமக்கள் தெரிவுக்குச் சுயதெரிவுமுறையே! சுயதெரிவுமுறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் சுயதெரிவு முறைமுன்னோடி சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப் படுத்துநர் குரும்பசிட்டியூர் மாவெழு வேல்அமுதனிடம் தொடர்புகொள்க! தொலைபேசி: 2360488, 2360694, 4873929.

---

சக்தி திருமண சேவை. யாழ். கொழும்பு இந்திய வம்சாவளி இந்து, RC உள்ளூர், வெளிநாடு மணமக்களை பெற்றுக் கொள்ளலாம். Shakthi Marriage Service, No 30, Ramani Mawatha, Negombo. Tel : 031 2232130, 0777 043138, 0315674603.

---

www.thaalee.com this is the one and only popular and pioneer website for the Sri Lankan Tamil Nation residing all over the world, providing Astrologyical Prediction,Consultation, Mediation and match Making by the Famous Astrologer S.Sarma JP. பெற்றோர்களே! இன்றுடன் உங்கள் பிள்ளைகளுக்கு பெண்,மாப்பிள்ளை பார்க்கும் படலத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமா? அப்படியானால் உடனே www.thaalee.com என்கிற website மூலமாக இயங்கும் திருமண சேவையை நாடுங்கள். Phone : 2520619. 45/1, Madampitya Road, Colombo -15.

## வீடு விற்பனைக்கு

வத்தளை தொடக்கம் சீதுவ, ஜா-எல கந்தானை, மாபோல, ஹுனுபிட்டிய, ஹெந்தளை ஆகிய பகுதிகளில் சிறிய, பெரிய வீடுகள், காணிகள், களஞ்சியசாலைகள் விற்பனைக்கு, வாடகைக்கு, இப்பகுதிகளில் உள்ள வீடு / காணிகள் விற்றும் கொடுக்கப்படும். Rajamani - 0773203379,0115645922.

---

வத்தளையில் கடை விற்பனைக்கு உண்டு. பழைய நீர்கொழும்பு வீதியில் OKI பாடசாலைக்கு அருகில் உள்ளது. 8" Store ஆகவோ Yard ஆகவோ பாவிக்கலாம். 2 ஆம் மாடி கட்டிடம் 13" மதில் 13 அடி கேட். தொடர்பு : 077 3400765.

---

மாபோல முஸ்லிம் பாடசாலைக்கு அருகில் (10பேர்ச்) காணி உடனடி விற்பனைக்குண்டு பார்வையிடலாம் ஞாயிறு காலை 10.00ற்கு பின்னர். தொடர்பு : 077 308 2940.

## தேவை

வீட்டுப் பணிப்பெண் கொழும்பில் உள்ள சிறிய குடும்பத்தினருக்கு துப்பரவான, முகப்பாவனையுடைய 25 வயதிற்கு குறைவான மலையகத்தவர் தங்கியிருந்து வேலை செய்ய தேவை. வீட்டு வேலைகள் செய்து குறைந்தது 1 வருடம் அனுபவம் இருக்க வேண்டும். கெட்டித்தனமாக வேலை செய்பவர்களுக்கு ஆரம்ப சம்பளம் 8,000/- சாப்பாட்டுடன் வழங்கப்படும். சாதாரண ஆங்கிலம் தெரிந்திருந்தால் நல்லது. வேலைக்கு கூட்டிக் கொண்டு வருபவர்களுக்கு செலவுப் பணம் 2,500/- வழங்கப்படும். 077 5784500 011 462 8566. (காலை 11.00 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்ளவும்.

---

கிழமைக்கு 1500 ரீ-சேட் துண்டுகள் வெட்டித் கொடுப்பதற்கு அனுபவமுள்ள SubAgents தேவை. உடனடியாகத் தொடர்பு,கொள்ளவும். Tel - 072 5282 8390, 25211086 - 7 PM

---

சிறிய குடும்பத்திற்கு 50 வயதிற்கு உட்பட்ட பணிப்பெண் உடன் தேவை. குடும்பத் தொந்தரவு யாதுமற்றவராகவும், சற்றுப் படித்தவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது. மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : 011 4830282.

---

கொழும்பு சுற்று வட்டாரத்தில் கௌரவமான செல்வந்தர் வீடுகளில் தங்கி வேலை செய்ய வீட்டுப் பணிப்பெண்கள் தேவை. சம்பளம் 8,000/- , 15,000/- வயது 17 முதல் 60வரை. கிராம சேவகர் சான்றிதழ்களுடன் வரவும். தமிழர் களுக்கு சிறந்த பாதுகாப்பு உத்தரவாதம் உண்டு. "லக் சிறி ஏஜன்சீஸ்" 135/4 களனிமுல்லை அங்கொடை. 011 4857184 077 4619651.

---

இலக்ரோனிக் வேலைத்தளம் ஒன்றில் வேலை பயிலுனராக விரும்பின் மொரட்டுவை, பாணந்துறை, இரத்மலானை, தெஹிவளையில் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் :0777 199153.

---

மட்டக்களப்பு LASAN INN இல் தங்கியிருந்து வேலை செய்வதற்கு அனுபவமுள்ள சமையல்காரர் ( Cook ) மற்றும் கூல்பார், கொமினிகேசன் வேலையாட்கள் தேவை. தொடர்பு : 89/1, Trinco Road, Batticaloa. 077 9679755, 065 2227174.

---

வீட்டுப் பணிப்பெண், காவலாளி, சாரதி, பராமரிப்பாளர், சமையற்காரர், வீட்டுப் பையன், கொழும்பு பங்களாக்களில் வேலைக்குத் தேவை. சம்பளம் 8,000/- 12,000/- இடையில். அரச அனுமதி பெற்ற 'சுமித்ஏஜென்சி' 53/1, கொஸ்பின்னை வத்தை, கட்டுவல பொரலஸ்கமுவ. 011 4868554,0115620304 புறக்கோட்டை - பிலியந்தலை 120 வீதி, கட்டு வாவல, 10 ஆம் கட்டைச் சந்தியில் இறங்கவும்.

---

அழகுக்கலை, தையல், ஐசிங் சமையற்கலை,யோகாசனம் ஆகியன நடைபெறும். பயிற்சி நிலையம் ஒன்றில் உதவி Trainers தேவை. இத்துறைகளில் ஓரளவு அறிவும், ஆர்வமும் உடையவர்கள் விரும்பத்தக்கது. ஓரளவு ஆங்கிலம் எழுத, பேசத் தெரிய வேண்டும். O/L, A/L கல்வி அறிவுவேண்டும். 0777 3458773.

---

இளம்வயதுடைய உற்சாகமான ஆண்கள் Pettahவில் உள்ள Stationary கம்பனிக்கு Sales, Delivery, Payments எடுப்பதற்கு தேவை. நன்றாக கதைப்பதற்கும் இத்தொழில் அனுபவம் இருக்க வேண்டும். ஆரம்ப சம்பளம் 10,000/- மேல் சான்றிதழ்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு காலை 11.30 மணிக்குப் பின்பு சமூகமளிக்கவும். S.M.F. Enterprises, 68, Central Road, Colombo - 12. Tel : 011 2348721.

---

Office Girls தேவை. மும்மொழிகளிலும் உரையாடக்கூடிய சிறந்த ஆளுமையுள்ள அலுவலக வேலை சிறிதளவு தெரிந்தவர் விரும்பத்தக்கது. உடனடியாக தொடர்பு கொள்ளவும் : 0777 739861. ராஜகிரிய, மருதானை, தெமட்டகொட, பொரளை பகுதிகளில் வசிக்கத்தக்கவர்.

---

150. பேர்ச்சஸ் மட்டக்குளி, புளூமெண்டால், கிராண்ட்பாஸ் போன்ற இடங்களிலிருந்து Stores தேவை. 40 அடி கென்டெய்னர் போகக்கூடியதாக இருக்க வேண்டும். Tel : 072 2701442

## வாடகை

கண்டி பேராதெனிய றோட்டில் Regal தியேட்டர் பக்கத்தில் மொண்டசூரி, Computer Class, பிரத்தியேக வகுப்புக்கள் நடத்த உகந்த 8 அறைகள் கொண்ட கட்டிடம் வாடகைக்கு விடப்படும். அதே இடத்தில் வீடுகள் வாடகைக்கு உண்டு. தொடர்பிற்கு: 071 4145885, 081 4933 018.

---

தரிப்பிடம் மலசலகூடம் பாதுகாப்பு சகல வசதிகளையும் உள்ளடக்கியது. தொடர்பு கொள்ள 0773846749.

---

Kalubowila 59/6, Temple Lane இலுள்ள 1st Floor வீடு வாடகைக்கு Full Tiles Car park., 3 அறைகள் 3 Bathroom, Pantry தொடர்பு: 0777 525577, 011 2763608

---

தொழில் செய்யும் வாலிபருக்கு வாடகை அறை உள்ளது. கொழும்பு 14. சகல வசதியும் உண்டு. Tel: 072 2907023 or 077 9677368 ( முஸ்லிம் மட்டும் )

---

வத்தளை ஹேகித்த வீதிக்கு அருகாமையில் 3 படுக்கையறைகள், 3 குளியல் அறைகள், வாகன தரிப்பிடம் சகல வசதிகளுடன் முற்றிலும் டைல்ஸ் பதிக்கப்பட்ட அழகிய பாதுகாப்பான வீடு உடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு : 072 638849.

---

பாமன்கடை/ களுபோவில சுஜாத அவுனியுவில் 4 படுக்கை அறைகளைக் கொண்ட விசாலமான கீழ்மாடி வீடு வாடகைக்கு உண்டு. 2 குளியல் அறைகள், 2 வாகனத் தரிப்பிடம் ரூபா 40,000/- ஒரு வருட முற்பணம் தொடர்பு கொள்ளவும். ( 011 276 1570 ) அல்லது 0777 416244.

---

கொழும்பு 15 இல் 136 எலிஹவுஸ் றோட்டில் 4 படுக்கையறைகள், 2 வாகனத் தரிப்பிடம் மற்றும் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. Tel: 077734 6457

---

சகல வசதிகளையும் கொண்ட சிறிய வீடு கிராண்ட்பாஸில் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு விடப்படும். தொடர்பு கரி 2513557 077 4168193.

---

கொழும்பு 15 இல் நல்ல குடியிருப்பு பகுதிகளில் எல்லா வசதிகளுடனான வீடு வாடகைக்கு. 0777209349 /2521508.

---

50/29, Jubilie Mawatha, Mattakkuliya வில் எல்லா வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு : 2521491, 077 5269504.

---

64B, கல்கிசை டெம்ப்ளர் வீதி, 4 படுக்கையறைகளைக் கொண்ட முழுமையாக டைல் பிடிக்கப்பட்ட மேல் மாடி வீடு உடனடி வாடகைக்கு. தயவு செய்து கவனிக்கவும் - எந்தவிதமான வியாபாரத்திற்கும் உகந்தது. தொடர்பு : திரு ஜின்னா - 0777 588096.

---

தெஹிவளை 2 - 3 - 4 அறைகளைக் கொண்ட வசதியுள்ள வீடுகள், சந்திக்கு சமீபமாக, மொண்டிசோரி கம்பூட்டர் எந்தவிதமான வகுப்புகளுக்கும் காணி விற்பனையாளர்களுக்கு, திருமண தரகர்களுக்கு, கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு. 25/3,விஜயசேகர வீதி. தொலைபேசி: 2718303.

---

2 படுக்கை, அறை, Hall, Kitchen வாடகைக்கு உண்டு 12000/- 23, Karagampitiya Cross Road, Dehi wala. 0775369088

---

சொய்சாபுர தொடர்மாடிக்கு அருகாமையில் பணி புரிபவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உணவு, தங்குமிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. தொடர் : 2623002.

---

தெஹிவளை சந்தி - காலி வீதியில் சகல வசதிகளுடனான அலுவலகத்திற்குகந்த இடவசதிகள், ஆண்கள் தங்குவதற்கான அறைகள் உண்டு. SSA Computer 22-1/1, காலி வீதி, தெஹிவளை . 078 52 61636

---

முதியர்களுக்கு உணவு தங்குமிட வசதிகளோடு,வாடகைக்கு உண்டு. தொடர்களுக்கு : Tel: 077 3954646.

## கல்வி

Spoken English with Grammer சற்றேனும் ஆங்கில அறிவு இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்லவுள்ளவர்களுக்கும் மிகக் குறுகிய காலத்தின் அடிப்படையில் இருந்து பேச்சுப் பயிற்சியுடன் தனியாக கற்பிக்கப்படுகின்றது. வெள்ளவத்தை. 0777 254627 Karan English Language Centre.

---

30 வருடங்கள் கணிதத்துறையில் அனுபவமுடைய இளைப்பாறிய கல்வியதிகாரியால் 5 தொடக்கம் 6 வரையிலும் G.C.E. (O/L) துரித வினாவிடை வகுப்பும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கணித பாடம் வீடு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 077 9174616 ( கொழும்பில் ).

---

6 ஆம் ஆண்டு தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு கணிதம், சமூகக் கல்வி, வரலாறு ஆகிய பாடங்கள் பட்டதாரி ஆசிரியரினால் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். தொடர்பு : 2505219.

---

ஆண் - பெண் இருப்பாலருக்கும் மேலதிக வருமானமாக வேலையில் இருப்போருக்கும் ஏனையவருக்கும் ரூபா 15000.00 முதல் ரூபா. 30000.00 வரை மேலதிக வருமானமாக பெற்றுக்கொள்ள கல்வி சார்ந்த எமது கற்கைநெறிகளை அறிமுகப் படுத்துவதன் மூலம் மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு : Cornerstone College 081 49 12261, 081 4912262.

---

Singapore Educated Foreign M.Sc Degree Graduate Master at Wattala. Business English, Advanced English, Preliminary English, IELTS, Spoken English, General English for Schoolers and French Courses. Commencing on 6th July. Trust Education 6A, Kerawalapitya Junction, Hendala, wattala.Tel : 071 7579242.

---

IELTS Exam Preparation Class (பரீட்சைக்கு தயார்படுத்தும் வகுப்புகள் ) ஆசிரியரினால் தனியாகவும் Qualified & Experienced குழுவாகவும் கற்பிக்கப்படும். (With Special Individual Attention) Results Guranteed. Contact : 077 3063 855.

---

SPOKEN ENGLISH Classes வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெஹிவளை பகுதிகளில் வீடுவந்து கற்பிக்கப்படும். Grammar பகுதிகளும் விளக்கமாக கற்பிக்கப்படும்.Send SMS your name & address to 077 18147 41.

---

English Language Literature O/L 2009, History English Medium Year 6-10.வீடு வந்து கற்றுத்தரப்படும். K. Ganesh B.A. ( Cey ) 0777 668725.

## சேவை

Reki (றெய்கி) தியான மருத்துவப் பயிற்சி.(மதம் சார்ந்ததல்ல) தன்னை மேம்படுத்தி வாழ்க்கையில் வெற்றி கொள்வதற்கு விஞ்ஞான விளக்கத்துடன் தமிழில் விரிவுரைகள் வைத்திய நிபுணரால் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழும் வழங்கப்படும். அழகுக்கலை பயில்பவர்களும் கலந்துகொள்ளலாம். 077 6259032 060 2314378.

---

மொழிபெயர்ப்பு சேவை : சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் பலவற்றுக்கு மொழிப் பெயர்ப்பு சேவைகளை வழங்கும் அனுபவமிக்க மொழிபெயர்ப்பாளரால் ஆங்கிலம் தமிழ் மொழிகளில் மொழி பெயர்ப்பு சேவைகள் செய்து தரப்படும். மொழிபெயர்ப்புகள் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு பிழைத் திருத்தங்கள் சரிபார்க்கப்பட்டு உரியநேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு : 4854771 280 9185.

---

தட்டச்சு சேவை : தட்டச்சுத்துறையில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அனுபவம் கொண்ட தட்டெழுத்தாளரால் கணினி மூலமான தட்டச்சு வேலைகள் நேர்த்தியான முறையில் உரிய நேரத்திற்கு, செய்துதரப்படும். தொடர்புக்கு : 4854771 2809185.

---

சகல விதமான மரவேலைகள், கூரை வேலைகள், பென்றி வேலைகள், Terazzo டைல் வேலைகள், மேசன் வேலைகள் அலுமினிய வேலைகள் பெயின்டிங் வெல்டிங் போன்ற வேலைகள் நியாயமான விலைக்கு, செய்துதரப்படும். Tel: 0777633780.

---

கட்டிடம் சம்பந்தமான சகல வேலைகளும் ஒருவரின் கீழ் செய்து கொடுக்கப்படும். Labour Contract ஆகவோ சாமானுடனும் Carpenter,Mason, Tiles plumbing, Painting, Pantry Cupboard. 0714896717 ஷர்ஷா 011 2421563.

---

நீர்க் குழாய் திருத்துதல் மற்றும் டைல் பாத்றூம் கட்டர் அனைத்தும் டைல் வேலைகள் கொண்டிராக்டர்கள் தொடர்பு: கபில பண்டார 077 6340968.

---

Asri. Appolo அருகில் டாக்டரினால் நடத்தி வரும் "அம்மா இல்லம்" முதியோர் நோயாளர்களுக்கு மாதக் கட்டணம் 12,500/-உம் முதற் கட்டணம் 25,000/-ம் மட்டுமே அறவிடப்படும். சேவைக்கு, 0785337259, 011 25 13562.

## வைத்திய ஆலோசனை

நாளாந்தம் வாழ்க்கையில் பிரச்சனைகளின் நிமித்தம் உளவியல் தாக்கங்களால் பாதிக்கப்பட்டு வருகிறீர்களா ? திருமணம், கல்வி தொழில், உறவுமுறை (Relationship) சார்பான உடல், உள ரீதியான பிரச்சனைகளுக்கு வைத்திய நிபுணர், உள வளத்துணை ஆலோசனை (Counselling) வழங்குகிறார்.

---

சித்த ஆயுர்வேத பயிற்சிநெறிகள் ஆரம்பமாகியுள்ளது. இதில் சேர விரும்புவோர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். வைத்திய நிபுணரால் நடத்தப்படுகின்றது. Dr.S. Indiranee,Seewali Road, Mount-lavania. Tel : 060 2172699.

---

நாளாந்த வாழ்க்கையில் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறீர்களா? தொழில் ரீதியாக தகுதிபெற்ற( Professional ) உள வளத்துணை நிபுணரால் Counselling வழங்கப்படும். 0777 248583.

---

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த பிரபல சுதேச வைத்தியம் நிபுணர் Dr. V. Rajah அவர்களால் மயிர் உதிர்தல் பொடுகு நாட்பட்ட தோல் நோய்கள் தேமல் எக்ஸிமா அலர்ஜி முகப்பருக்கள் மற்றும் சகல பாலியல் குறைபாடுகளிற்கும் சிறந்த முறையில் சிறந்த சிகிச்சை வழங்கப்படும்.No. 253, G.R. De Silva Mawatha, 1st Floor, Kotahena, Colombo 13. Tel : 077 6167732, 060 2266844, E mail :rajaaherbel@yahoo.com சனி ஞாயிறு தினங்களில் மட்டும் சிகிச்சை அளிக்கப்படும். தயவுசெய்து முன்பு பதிவு பெற்று வரவும்.

---

நடக்க, இருக்க, மடிக்கமுடியாமல் முழங்கால் குதி தொடை பாதம் விரல்கள் முள்ளந்தண்டு தோள் இடுப்பு கழுத்து போன்ற உறுப்புகளில் நோ வலி குத்து வேதனை எவ்வளவு நாட்பட்டதாக இருந்தாலும் ஆபரேஷன் தேவையில்லை. மூக்கடைப்பு தும்மல் நெஞ்சுச் சளி இருமல் வாசிக்கும் போது கீ கீ என்று சத்தம் ஆஸ்துமா இவை அனைத்துக்கும் சிறப்பான மூலிகை மருந்து சிகிச்சை பக்க விளைவு எதுவும் இல்லை. குறைந்த பத்தியம் சித்தவைத்தியர் Dr.R. Sivagurunathan. Tel :0777 301669 011 7910 679. E.mail : vaithiyar@hotmail.com

## பழுது பார்த்தல்

Computer Repairing, Trouble Shooting, ADSL, Internet, E - Mail, Configuration, Network, Net2Phone; காரியாலயங்கள் இல்லங்கள் வந்து செய்யப்படும். Prasath 011 4939861 PC - Ace plus Solutions,F-14, People's Park, Colombo -11.

---

Computer Repair, Software ADSL, Net 2 Phone, Installation & PC Sales at Your Place We Provide Quick & Reliable Service தொடர்பு: Tele Net No. 22 காலிவீதி, தெஹிவளை. Tel : 011 2730872, 077 3934811.





# குரங்குத் தலைவன் படுகொலை!

உ

சக மனிதர்களுடன் வன்முறையில் மனிதன் ஈடுபடுவதைப் போல மற்ற விலங்கினங்களும் தங்களுக்குள் சண்டையில் இறங்குவதுண்டா?!

அநேகமாக எல்லா உயிரினங்களும் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்கின்றன. சிங்கம், ஓநாய், ஆடு, மாடு, மான், ஒட்டகச்சிவிங்கி எல்லாமே தங்களுக்குள் சண்டையிடுவதை நாம் பார்க்கிறோம். விலங்கினங்கள் சண்டையில் ஈடுபட மூன்று காரணங்கள் உண்டு. ஒன்று - பெண்ணுக்காக; மற்றது- எல்லைக்காக; இன்னொன்று - தலைமைக்காக!

மான் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் கலைமானுடன் இன்னொரு ஆண் மான் ஓடிவந்து தலையால் முட்டி மோதிச் சண்டையிடும். அது ஒரு போட்டிதான் (Contest for Leadership). தவிர அது எச்சரிக்கை மிகுந்த மோதல் - கொல்வதற்காக அல்ல, பலத்தை நிரூபிப்பதற்காக! அதற்கு இணையாக மேசை மீது இரு மனிதர்கள் கைகளைப் பொருத்தி 'மல்யுத்தம்' (Arm Wrestling) போடுவதைச் சொல்லலாம்!

முட்டி மோதி சண்டையிடும் மான்களில் இரண்டே சதவிகிதம்தான் எதிர்பாராத வண்ணம் படுகாயப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது! சண்டையில் தோற்ற மான், தானாகப் பின்வாங்கிவிடும். ஜெயிக்கும் மான் தலைமையேற்கும். இனி எந்தப் பெண் மானையும் முதலில் புணரும் உரிமை அதற்குக் கிடைக்கிறது.


அதேபோல ஓநாய்க்கூட்டம் இன்னொரு



ஓநாய்க் கூட்டத்தின் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தால், யுத்தம் நிகழும். முக்கியமாக அந்த மோதல் தங்கள் எல்லைக்குள் கிடைக்கும் உணவுக்காக. கோபம், ஆத்திரம், பொறாமை, பழிக்குப் பழி காரணமாக எந்த விலங்கினங்களும் தங்களுக்குள் மோதிக் கொள்வதில்லை. அந்த உணர்வுகள் அவற்றுக்குக் கிடையாது! மனிதன் அப்படியல்ல! லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் மனிதர்கள் தங்கியிருந்த காட்டுப் பகுதியில் உள்ள குகைகள், மரங்கள், பழங்களுக்கு அவர்கள் உரிமை கொண்டாட ஆரம்பித்துவிட்டனர். சில சமயங்களில் பருவநிலை காரணமாக உணவு குறைச்சலாகவே கிடைக்கும். குகைகளுக்குள் கூட பனிக் காலங்களில் கொடிய விலங்குகள் புகுந்து கொள்ளும்.

ஒரு குட்டையில் உள்ள தண்ணீரை மற்றவர்கள் குடிக்க மனிதர்கள் அப்போதே அனுமதி மறுத்தார்கள். பெண்களை வன்முறையாகவே ஆண்கள் தூக்கிச் சென்று பலவந்தமாகப் புணர்ந்தார்கள். ஏற்கனவே அந்தப் பெண்ணோடு வசித்த மனிதன் சத்தியமாக வந்தவனுடன் மோதியிருப்பான். எல்லா மோதல்களுமே எல்லைக்காக, உணவுக்காக, பெண்களுக்காக! ஆதிகாலத்திலேயே மனிதனின் வாழ்க்கை நாள்தோறும் வன்முறை நிறைந்ததாகவே அமைந்தது!

இருப்பினும், மற்ற விலங்கினங்களோடு மனிதனை ஒப்பிடும்போது, அவனிடம்




ஒரு பெரிய மைனஸ் பொயிண்ட் இருந்தது- அது - குறைவான உடல் வலிமை!

பல லட்சக்கணக்கான ஆண்டுகளாக, மனிதன் உடல்ரீதியாக 'வீக்' ஆகவே இருந்து வருகிறான். சிங்கம், புலி, யானை, காண்டாமிருகம், காட்டெருமை... எதனோடும் நேரடியாக மோதி மனிதனால் வெற்றிகொள்ள முடியாது. அவனுக்கு அதற்கான உடற்கட்டோ, நகங்களோ, கோரைப் பற்களோ கிடையா!

நியாயமாக, இப்போது உலகில் மிஞ்சியிருக்கிற ஒரு மனித இனமும் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அழிந்தொழிந்திருக்கவேண்டும். புத்திசாலியான மனிதன் துவளவில்லை. மிருகங்களைச் சமாளிக்க ஆயுதங்கள் தயாரிக்க ஆரம்பித்தான்!

கும்பலாகப் பதுங்கிச் சென்று காட்டெருமையைக் கூர்மையான கற்களாலோ, ஈட்டியைப் போல சீவப்பட்ட மரக்கிளைகளாலோ குத்தி அவனால் கொல்ல முடிந்தது. இந்த வெற்றிக்குப் பிறகு புதுப்புது ஆயுதங்களைக் கண்டுபிடிப்பது அவனுடைய முக்கிய தொழிலாகிவிட்டது. அதிலிருந்துதான் ஆயுத விஷயத்தில் இன்றுவரை எப்பேர்ப்பட்ட முன்னேற்றம்! ஒரு பட்டனைத் தட்டிவிட்டால் ராக்கெட் மூலம் அணுகுண்டுகளைக் கொண்டு சென்று ஒரு நாட்டையே அழிக்கும் அளவுக்கு மனிதனின் கண்டுபிடிப்புகள் இன்னமும் தொடர்கின்றன!

ஆதிகாலத்தில் பெண்கள் குகைளில் குழந்தைகளைக் கவனித்துக்கொண்டு, வேட்டைக்குச் சென்ற ஆண் திரும்பி வரும்வரை பொறுமையாகக் கவலையோடு காத்திருந்தாள். ஆகவேதான் பெண்களிடம் வன்முறை உணர்வு ஆணின் அளவுக்கு வரவில்லை.

ஆர்வத்துக்காக வித்தியாசமானதொரு கேள்வி! ஆண்கள் - சக ஆண்களைக் கொல்வது, பெண்கள் - பெண்களைக் கொல்வது - எது அதிக?

டாலி, மார்ட்டின் வில்ஸன் என்னும் விஞ்ஞான ஜோடி பிரிட்டனிலிருந்து, உகண்டா வரை ஆராய்ச்சிகள் மேற்கொண்டதில், ஆண்கள் மற்ற ஆண்களைக் கொல்வது 90 சதவீதம், மிச்சம்தான் பெண்கள்!

அதேசமயம், இன்னொரு விசித்திரமான தகவல்! இரண்டாயிரம் பெண்களில் ஒரே ஒரு பெண்ணுக்கு ஆணிடம் உள்ள அத்தனை வன்முறை உணர்வுகளும் இருக்கக்கூடும். அந்தப் பெண் Turner's Syndrome என்கிற க்ரோமோஸோம் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவளாக இருப்பாள், அதாவது, பெண்ணிடம் உள்ள இரண்டு XX க்ரோமோஸோம்களில் ஒரு X க்ரோமோஸோமின் 'குணநலன்கள்' பிறப்பிலேயே மிஸ்ஸிங் ஆக இருந்து, அது



[illegible]

'டம்மியாக இருந்தால், அந்தப் பெண்களுக்கு அநேகமாகக் குழந்தை பிறக்காது என்பதைத் தவிர, திடீர்க் கோபம், அடிதடியில் இறங்குவது, ரொம்ப கெட்ட வார்த்தைகளால் திட்டுவது, தன்னிடம் அடிபட்டவர் கீழே விழுந்தால் எட்டி உதைப்பது, அவர் மீது ஏறி நின்று ஆவேசமாகக் குதிப்பது... இதெல்லாம் அந்தப் பெண் பின்பற்றுவாள். (ஆண்கள் மட்டுமே செய்கிற விஷயங்கள் இவை!)

முன்பே சொல்லப்பட்ட சில காரணங்களுக்காக விலங்குகளிடையே நேரடி மோதல்கள் நிகழலாமே தவிர, ஜூலியஸ் சீசரைக் கொல்லச் சதியாலோசனை நிகழ்த்தி, திட்டம் வகுத்து, செனட் அரங்கத்தில் சீசர் நுழைந்த சமயம் பார்த்து அவரை புருட்டஸ், காஷியஸ் மற்றும் சகாக்கள் சூழ்ந்துகொண்டு கொன்று தீர்த்த அதே கொலைவெறித்தனமான அணுகுமுறை விலங்குகளிடையே உண்டா என்றால் 'இல்லை' என்றுதான் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.



ஜேன் கூடால் என்கிற உலகப் புகழ்பெற்ற பெண்மணி, குரங்குகளை (குறிப்பாக Apes- அதிலும் சிம்பன்ஸிகளை) நீண்டகாலமாக ஆராய்ச்சி செய்தவர். சிம்பன்ஸிகளிடையே அவருக்கு நண்பர்கள் கூட உண்டு!

1960இல் டான்ஸானியா காடுகளில் 'கோம்பி' என்ற காட்டுப்பகுதியில் அவர் தங்கி, சிம்பன்ஸி கூட்டுக்குடும்பங்களை ஆராய்ந்ததில் - மிகுந்த அமைதியாக, ஒற்றுமையாக, ஒன்றுக்கொன்று உதவியாக சிம்பன்ஸிகள் வாழ்ந்து வந்ததை அவர் கண்டார். அப்படியென்றால் உலகிலுள்ள ஒரு கோடி விதமான உயிரினங்களில், சுமார் நாலாயிரம் விதமான பாலூட்டிகளில், மனிதன் மட்டுமே திட்டம் போட்டு, கூட்டுச் சேர்ந்து எதிராளியைத் தீர்த்துக்கட்டுகிற உயிரினமா?

சில வாரங்கள் ஆராய்ச்சிக்குப் பிறகு ஜேன் கூடாலுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

திடீரென ஒருநாள், நூற்றுக்கணக்கான சிம்பன்ஸிகள் அடங்கிய கூட்டுக் குடும்பம் இரண்டாகப் பிரிந்தது. முதலில் சில தலைமை சிம்பன்ஸிகள் தனிக்கட்சி ஆரம்பித்தன. வேறு வழியில்லாமல் தொண்டர்களும் இரு தரப்பாகப் பிரிய வேண்டி வந்தது.

ஓரிரவு, கோடி (Godi) என்கிற 21 வயதான ஆண் சிம்பன்ஸி (தலைவர்) அடர்ந்த காட்டில் மரம் ஓரமாக அமர்ந்து பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தது.

அப்போது புதர்களின் பின்னாலிருந்து பல சிம்பன்ஸிகள் மெள்ளத் தலையைத் தூக்கி நோட்டம்விட்டன. பிறகு பதுங்கி வந்த சிம்பன்ஸிகள் வலதுபுறம், இடது புறம் என்று இடம்மாறி அமர்ந்தன. பிறகு திடீர் அட்டாக். ஜூலியஸ் சீசர் கதையேதான்! நாலாபுறமும் சூழ்ந்து கொண்ட (எதிர்க்கட்சி) சிம்பன்ஸிகள் தனியாக அமர்ந்திருந்த 'கோடி' என்கிற அந்த 'சிம்ப்'பைக் கிழித்துக் குதறின. ஆச்சரியம்! படுகாயத்துடன் கீழே விழுந்த 'கோடி'யின் கை, கால்களை நான்கு சிம்பன்ஸிகள் அழுத்திப் பிடித்துக்கொள்ள, ஒரு சிம்பன்ஸி பெரிய கல்லைத் தூக்கிவந்து 'கோடி'யின் தலைமீது போட்டது. 'கோடி'யின் வாழ்க்கை அத்தோடு ஓவர்!

அதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் 'தலைவர்கள்' மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டனர்! சில சிம்பன்ஸித் தலைவர்கள் தப்பினார்கள்! அவர்களுடைய அந்தக் கட்சியில் எல்லாத் தலைவர்களையும் இழந்த எதிர்க்கட்சித் தொண்டர்கள் மீண்டும் சங்கமம் ஆனார்கள்!

உலக விஞ்ஞானிகள் இந்தத் திட்டமிட்ட வன்முறையைக் (Organised Violence) கேட்டுத் திகைத்துப் போனார்கள். மனிதனுக்கு மிக நெருக்கமான சிம்பன்ஸிக்கும் 'மனித வன்முறை' இருக்கிறது என்பது ஆராய்ச்சியாளர்களிடையே மிகுந்த பரபரப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது!

சிம்பன்ஸிகள் மாறி மாறி எதிர்க்கட்சித் தலைவர்களை வரிசையாகத் தீர்த்துக் கட்டியமை ஏன்?

எதிராளிகளாக இருந்த சிம்பன்ஸித் தலைவர்கள் எல்லோரும் இறந்தால், மீண்டும் அந்த அணி தங்களோடு சேரும், அந்த அணியில் உள்ள அத்தனை பெண்களும் மீண்டும் நம்முடைய 'அந்தப் புரத்துக்கு' வரவேண்டியிருக்கும். பெரிய அளவில் தொண்டர்கள் நம்மோடு சேர்வார்கள், நம் எல்லை விரிவடையும்!

சரி, இதெல்லாம் சிம்பன்ஸிகளுக்கு எப்படித் தெரியும்?! மனிதனுக்கு மட்டுமே மூளைக்குள் தோன்றுகிற வன்முறை எண்ணங்கள் அல்லவா அவை?!

ஒரு கொலையைச் செய்துவிட்டு நீதிமன்றத்தில், 'என்னை மட்டும் குற்றம் சாட்டுகிறீர்களே? சிம்பன்ஸிகள் கூடத் தான் திட்டம் போட்டுக் கொலையெல்லாம் செய்கின்றன! நானும் ஒரு குரங்கு தான். ஆகவே இந்தக் கொலை வழக்கில் என்னையும் சிம்பன்ஸியாகப் பாவித்து விடுதலை தரவேண்டும் யுவர் ஹானர்!' என்று ஒரு கொலைகாரன் வாதாடலாமோ?!

வளரும்...

# திருநெல்வேலியில் பற்றிய தீ!



கறுப்பு ஜூலை கலவரத்தின் கால்நூற்றாண்டுப் பூர்த்திவேளை இது. இச்சமயத்தில், அந்தக் கறுப்பு ஜூலைக் கலவரம் கட்டவிழ்ந்த பின்னணியையும் அந்நேரச் சூழலையும், இந்த இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள இனவாதச் சக்திகள், தமிழ்த் தேசியத்தின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து, தனியரசுப் போராட்டத்துக்கான அக - புறச் சூழ்நிலையை உருவாக்கிக்கொடுத்த மடைமைத்தனத்தையும் தமிழர் தேசத்தின் குரல் அன்டன் பாலசிங்கம் விவரிக்கின்றார்.

கறுப்பு ஜூலை குறித்துத் தமது 'போரும் சமாதானமும்' என்ற தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டப் பதிவுநூலில் 'வன்முறைப் புயல்வீசிய கறுப்பு ஜூலை' என்ற தலைப்பில் அவர் பொறித்துச்சென்ற தகவல்கள் இத்தொடரில் பிரசுரமாகின்றன. இது இக்கட்டுரையின் இரண்டாம் அத்தியாயமாகும். ★

**2**

ஜூலை மாதம் நடுப்பகுதியில் நிகழ்ந்த சோக சம்பவம் ஒன்று விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பேரிடியாக அமைந்தது. 1983 ஜூலை 15 அன்று மாலை, யாழ்ப்பாண நகரிலிருந்து 15மைல் தொலைவிலுள்ள மீசாலைக் கிராமத்தில் இந்தத் துன்பியல் சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு மினிபஸ்,இரண்டு ஜீப் வண்டிகள், ஒரு இராணுவ ட்ரக் ஆகியனவற்றில் மீசாலைக் கிராமத்திற்குள் நுழைந்த நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் அங்கிருந்த விடுதலைப் புலிப் போராளிகளின் இருப்பிடத்தை நோக்கி விரைந்தனர். இராணுவத்தினரின் இந்தச் சுற்றிவளைப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் தளபதியான சார்ள்ஸ் அன்ரனி (சீலன்) மற்றும் மூன்று போராளிகளும் மாட்டிக்கொள்கின்றனர். சுற்றிவளைத்த படையினருடன் புலி வீரர்கள் துப்பாக்கிச் சமரில் குதிக்கின்றனர். இராணுவத்தினர் பனைமரங்கள் சூழ்ந்த பாதுகாப்பான இடங்களில் நிலையெடுத்து நின்று சரமாரியாகச் சுட, பொட்டல் வெளியில் மாட்டிக்கொண்ட போராளிகள் திருப்பித் தாக்குகின்றனர். இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் மார்பைத் துளைக்க, இரத்தம் சிந்தியவாறு நிலத்தில் சரிகிறான் சீலன். தப்பமுடியாத நிலை. எனினும், உயிருடன் எதிரியிடம் சிக்கக்கூடாது என்ற உறுதிப்பாடு உந்த தன்னைச் சுட்டுக்கொன்றுவிடுமாறு சக போராளியிடம் பணிக்கிறான் சீலன். தனது தளபதியை சுடத் தயங்குகிறான் தோழன். அப்பொழுது கண்டிப்பான கட்டளையிடுகிறான் சீலன். வேறு வழி தெரியாது கதறி அழுதபடி சீலனின் கட்டளையை நிறைவேற்றுகிறான் அந்தப் போராளி. அவ்வேளை, ஆனந்த் என்ற மற்றொரு போராளியும் எதிரியின் சூட்டுக்கு இலக்காகி படுகாயங்களுடன் சாய்கிறான். தன்னையும் சுட்டுக்கொன்றுவிடும்படி மன்றாடுகிறான் ஆனந்த். அவனது வேண்டுகோளும் நிறைவேற்றப்படுகிறது. உயிருக்கும் மேலாக நேசித்த சக போராளிகளை உயிருடன் எதிரியிடம் விட்டுவிடாது செய்து, அவர்களது ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு, முற்றுகையிலிருந்து தப்பிச்சென்றனர் மற்றும் இரு போராளிகள்.

மாவீரன் சீலனின் சாவு எமது விடுதலை இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாக அமைந்தது. அபாரமான துணிவும், தமிழீழ இலட்சியப் பற்றுறுதியும் மிக்க சீலன் பல களங்களைக் கண்ட வீரன். ஆற்றல் படைத்த கட்டளைத் தளபதி. தலைவர் பிரபாகரனின் மிகவும் நெருங்கிய தோழன். அந்த மாவீரனின் மறைவு பிரபாகரனின் ஆன்மாவை உலுப்பியது. ஒருபுறம் கடும் துயரும், மறுபுறம் கடும் சீற்றமும் அடைந்த பிரபாகரன் சிங்களப் படையினருக்குத் தகுந்த பதிலடிகொடுக்கத் தீர்மானித்தார். அதற்கான தாக்குதல் திட்டத்தையும் அவரே வகுத்தார். விடுதலைப் புலிகள் மீதும் பொதுமக்கள் மீதும் அரச பயங்கரவாத வன்செயல்களை ஏவிவிடும் ஆயுதப்படையினர் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவர்



என்பதை எதிரிக்கு உணர்த்தவேண்டும் எனவும் பிரபாகரன் எண்ணினார். யாழ்ப்பாண நகரப் பகுதிக்குள் இராணுவ வண்டித் தொடர்கள் இரவிலே கிரமமாக நடமாடும் வழித்தடங்கள் பற்றிய விவரங்களைப் புலனாய்வு மூலம் திரட்டி, பிரசித்தி பெற்ற திருநெல்வேலிக் கெரில்லாத் தாக்குதலைப் புலிகளின் தலைவர் திட்டமிட்டார். இந்தத் தாக்குதலுக்குச் செல்லக்கிளி அம்மான் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். ஆனாலும் தாக்குதல்

## வன்முறைப் புயல் வீசிய 'கறுப்பு ஜூலை!'

நடவடிக்கை முழுவதையும் பிரபாகரனே நெறிப்படுத்தினார்.

ஜூலைமாதம் 23ஆம் நாள், நள்ளிரவு. தலைவர் பிரபாகரனுடன் அன்றைய மூத்த தாக்குதல் தளபதிகளான செல்லக்கிளி, கிட்டு, புலேந்திரன், விக்டர், சந்தோசம் ஆகியோருடன் பதினான்கு விடுதலைப்புலி அதிரடி வீரர்கள், ஆயுதபாணிகளாக இயக்கச் சீருடை அணிந்து, யாழ்ப்பாண நகரிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ள திருநெல்வேலியில் பலாலி - யாழ்ப்பாணம் வீதியோரமாக தாக்குதலுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகனங்களும் பாதசாரிகளும் வீதியில் செல்லாதபடி தடை ஒழுங்குகள் செய்து கேந்திர நிலைகளில் கண்ணிவெடிகளை புதைத்துவிட்டு புலி வீரர்கள் நிலையெடுத்துக் காத்து நிற்கின்றனர்.

மாதகல் இராணுவ முகாமிலிருந்து ஸ்ரீலங்காவின் முதலாவது காலாட் படைப்பிரிவைச் சேர்ந்த பதினைந்து பேர்கொண்ட அணி ஒன்று இராணுவ வண்டித் தொடராக திருநெல்வேலி நோக்கி வந்துகொண்டிருந்தது. முதலில் ஒரு ஜீப் வண்டி, அதற்குப் பின்னால் ஓர் இராணுவ ட்ரக் வண்டியாக படையினர் பதுங்கி நிற்கும் புலி வீரர்களின் நிலையை அண்மிக்கின்றனர். புலிகளின் பதுங்கு காவல்நிலையை இராணுவ வாகனங்கள் கடந்தபோது நிலக்கண்ணித் தகர்ப்பி அமுக்கப்படுகிறது. திருநெல்வேலியை அதிரவைத்த பயங்கரவெடியோசை. இராணுவ ஜீப் வண்டி காற்றில் உயர எகிறித் துண்டம் துண்டமாகச் சிதறி தரையிலே விழுகிறது. பின்னே வந்த ட்ரக் வண்டி திடீரென்று நிற்கிறது. பீதியடைந்த படையினர் அச்சத்தோடு வெளியே பாய, புலிகளின் துப்பாக்கிச் சல்லடை அவர்களைப் பதம் பார்க்கிறது. ட்ரக் வண்டியால் அவர்கள் வெளியே வர, வர அச்சொட்டாகச் சுடுவதில் பெயர்பெற்ற பிரபாகரனின் துப்பாக்கி அவர்களில் பலரை அடுத்தடுத்து வீழ்த்துகிறது. சில இராணுவத்தினர் வாகனத்துக்குக் கீழே தவழ்ந்துசென்று படுத்திருந்தபடி சிலாவிச் சுடுகிறார்கள். ஆனால், புலிகளின் எறிகுண்டுகள், அவர்களைச் செயலிழக்கச் செய்கின்றன.

துல்லியமான, இம்மியும் பிசகாத புலிகளின் போரியல் தேர்ச்சியை இத்தாக்குதல் பறைசாற்றியது. பதின்மூன்று சிங்களப் படையினர் அதேஇடத்தில் கொல்லப்பட்டார்கள். இரண்டுபேருக்குப் படுகாயம். அந்த நாட்களில் சிங்கள இராணுவத்துக்கு இது ஒரு பெரும் உயிரிழப்பாக அமைந்தது. விடுதலைப் புலிகளின் தரப்பில் லெப்டினன்ட் செல்லக்கிளி இத்தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

செல்லக்கிளி அம்மான் (செல்வநாயகம்) அஞ்சாநெஞ்சம் படைத்த ஒரு வீரன். தலைசிறந்த தாக்குதல் தளபதி. தலைவர் பிரபாகரனின் இளம்பராயத் தோழன். ஆரம்பகாலப் போராட்ட வரலாற்றில் பல சாதனைகளைப் படைத்தவன். அந்நாளில் சிங்கள தேசத்தையே கிலிகொள்ளச் செய்த ஒரு வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதலுக்கு தலைமைதாங்கி அத்தாக்குதலிலேயே களப்பலியாகிய அந்த வீரனின் மறைவு எமது இயக்கத்திற்கு ஒரு பேரிழப்பாகியது.


தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே ஒரே வழி என்று உறுதியாக நம்பியிருந்த ஆட்சியாளருக்குத் தமிழ்ப் புலிகளின் கெரில்லாப் படையினரால் பதின்மூன்று சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டமை, ஒரு பலத்த அடியாகப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரு கொடுங்கோலர். இரும்புப் பிடியோடு நாட்டை ஆண்டு கொண்டிருந்தார். அவருடைய மூத்த அமைச்சர்களான லலித் அத்துலத் முதலி, பிலிப் குணவர்த்தனா, சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்கா ஆகியோர் பெயர்பெற்ற இனவாதிகளாவர். தமிழர் போராட்டத்தை இராணுவ அடக்குமுறையால் நசுக்கவேண்டும் என்ற கொடிய கொள்கையைப் பலமாகப் பற்றிக்கொண்டிருந்தவர்கள். இத்தகைய தலைமையைக் கொண்டிருந்த ஆட்சிப்பீடத்துக்கு தமிழருடைய ஆயுதக்கிளர்ச்சி வளர்ந்து சிங்களப் படையினரின் உயிர்களைப் பறிப்பது தாங்கமுடியாத அவமானமாகப் பட்டது. இராணுவத்திடம் இருந்து கடுமையான பழிவாங்கல் நடவடிக்கை மின்னல்வேகத்தில் வரலாம் என்ற பதற்ற அங்கலாய்ப்போடு யாழ்ப்பாண மக்கள் எதிர்பார்த்து நின்றார்கள். எதிர்பார்த்தபடியே மறுநாள் திருநெல்வேலியிலும் கந்தர்மடத்திலும் சீற்றச் சன்னதம் ஆடிய அரசபடையினரால் 60தமிழ்ப்பொதுமக்கள் ஈவிரக்கம் இன்றிப் படுகொலை செய்யப்பட்டார்கள். ஆனால், தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற இனக்கலவரத் தாக்குதல்களோடு ஒப்பிடும்போது, யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ வெறியாட்டம் சிறு அளவிலானது என்றே கூறலாம். தலைநகரில் தொடங்கிய இனக்கலவரத் தாக்குதல்கள் நாடு முழுவதும் பரவி இதுகாறும் நடைபெறாத அளவுக்குத் தமிழ்உயிர்களையும் உடைமைகளையும் அழித்து ஒழித்தன.

கடந்தகாலங்களில் கூட, இனக்கலவர வன்முறைத் தாக்குதல்களுக்குத் தமிழ்மக்கள் அவ்வப்போது முகம் கொடுத் திருக்கிறார்கள். ஆனால், 83 ஜூலை யில் இடம்பெற்ற இன அழிவு முன்பு நிகழ்ந்த எதனுடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு கொடுமையானதாக, குரூரமானதாக மிகப்பெரியதாக அமைந்தது. விடுதலைப்புலிகளால் சிங்களப் படையினர் கொல்லப்பட்டதை ஒட்டி, திடீரென எழுந்த பழிவாங்கும் உணர்ச்சியாக இந்த இனக்கலவரம் காணப்படவில்லை. மாறாக, இனக்கொலை என்று வர்ணிக்கும் அளவுக்கு, அரசினால் ஏற்கனவே திட்டம் வகுக்கப்பட்டு தருணம் பார்த்து நடத்தப்பட்ட கொடுந்தாக்குதலாக 83 ஜூலை வெறியாட்டம் காணப்பட்டது.

(தொடரும்)

# ஒவ்வாமை!

## பலவகை; பல காரணங்கள்




**கேள்வி:** பெண் வயது 55. எனது 16 வயதில் மொழி வாதம்(Rheumatic Fever) வந்தது. தொடர்ந்து 30 வருடங்கள் பென்சிலின் ஊசி போட்டேன். கொழும்பில் இருதய பரிசோதனைக்கு சென்றபோது இனி ஊசி உபயோகிக்க வேண்டாம் என்றார்கள். எனது உடம்பு பெருத்து, முகமும் உருண்டையாக வந்துவிட்டது. இங்கு பரிசோதனை செய்த பின்னர் தைரொக்ஸின் (Thyroxine) மாத்திரைகளை உபயோகிக்கச் சொன்னார்கள். மாத்திரை உபயோகிக்கும்போது உடல் - முக வீக்கங்கள் குறைந்தன. எனக்கு என்ன கோளாறு ஏற்பட்டுள்ளது? பரிகாரம் கூறவும்.

**பதில்:** நீங்கள் 30 வருடமாக பென்சிலின் ஊசி போட்டிருக்கவேண்டிய தேவை இல்லை. (Rheumatic Fever) என்கின்ற வாதக் காய்ச்சல் அநேகமாக - இளம் வயதினரையே - குறிப்பாக 12 வயதிலிருந்து 21 வயதிற்கிடைப்பட்டவர்களையே தாக்குகின்றது. இந்தக் காய்ச்சலின்போது இதயவால்வுகள் பழுதடைந்து இயக்கப் பண்பானது குறைகின்றது. இதனால் இதயத்தின் இயக்கம் சீராக நடைபெறாமல் - இருதயம் பலவீனமடைகின்றது. இந்த வாதக் காய்ச்சல் அடிக்கடி வந்தால் இதயவால்வு நோய்களைத் தரும் என்பதால், வாத காய்ச்சல் வந்த இளைஞர்களை - 21 வயது வரை - தடுப்பு முறைக்காக பென்சிலின் ஊசியை மாதா மாதம் எடுத்து வருவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

தவறான தொடர்பாடல் காரணமாக நீங்கள் 30 வருடம் இந்த ஊசி மருந்தை உபயோகித்திருக்கின்றீர்கள். என்றாலும், இதனால் எதுவித பாதிப்பும் ஏற்படாது. உங்கள் முகவீக்கத்திற்கும் - உடல் பெருத்ததுக்கும் காரணம் உங்கள் தைராய்ட் சுரப்பியின் குறைபாடுதான்.

இதனை Hypothyroidism அல்லது Myxoedema என்று அழைப்பார்கள். இதற்குத்தான் - தைரோக்ஸின் (Thyroxine) வில்லைகளை, உங்களை உபயோகிக்க அறிவுறுத்தியுள்ளார்கள். நீங்கள் தொடர்ந்து - வாழ்நாள் முழுவதும் - இந்த மாத்திரைகளை உபயோகிப்பது அவசியமாகின்றது.

* * *

**கேள்வி:** வயது 22. எனது பல் ஈறுகள் மேலும் கீழும் தேய்ந்துவருகின்றன. நான் வசிக்கும் சூழ்நிலை காரணமாகச் சரியான போஷாக்கான உணவுகள் இல்லை. தகர டப்பாவில் அடைத்துள்ள மீன் வகைகளேயே அதிகமாக சாப்பிடுகின்றேன். இந்த மீன்களின் எலும்புகளும் நன்றாக அவிந்து இருப்பதால் - நான் இவற்றை அதிகமாக உபயோகிப்பதால்தான் - என் ஈறுகள் கரைகின்றன என்று எனக்குச் சந்தேகம். மேலும் இதற்காக மீன் எண்ணெய் மாத்திரைகள், கல்சியம் மாத்திரைகள் உபயோகிக்கின்றேன். எனவே, எனது பல் ஈறுகள் கரையாமல் இருப்பதற்கு பரிகாரம் கூறவும். எனது தலையில் பொடுகு அதிகம் உண்டு. இது தவிர முகம், தோற்பட்டைகள், முதுகு, நெஞ்சு பகுதிகளிலும் அடிக்கடி பருக்கள் ஏற்படுகின்றன. இதற்கும் பரிகாரம் கூறவும்.



• **பதில்:** பல் ஈறுகள் பழுதடைந்து தேய்ந்து, கரைந்து போவதற்கு முக்கிய காரணம், ஈறுகளுக்கும் பற்களுக்கும் இடையிலுள்ள பகுதிகளில் தொற்றுகள் ஏற்படுவதுதான். இதனை Pyorrhoea - பயோரியா என்று கூறுவார்கள். பற்களைச் சுத்தமாக வைத்திருக்காமல் - பற்களின் சுகாதாரத்தைப் பேணாமல் - இருக்கும்போது இந்தக் கோளாறு ஏற்படுகின்றது. உணவின் பின்னர், பற்களின் ஈறுகளிடையே உணவுத் துணிக்கைகள் சிக்கிக்கொள்கின்றன. இவை அகற்றப்படாவிடில் இந்த உணவுத் துணிக்கைகள் அழுகி - தொற்றுகளின் உறைவிடமாகின்றன, பற்களின் ஈறுகள். இதனால் பற்களின் வேர்கள் பலவீனமடைந்து, பற்கள் ஆட்டம் கண்டு, இளவயதிலேயே விழுந்து விடுவதற்குச் சந்தர்ப்பம் உண்டு.

எனவே, நீங்கள் உங்கள் பற் சுகாதாரத்தைப்பேணவும். கரி, சாம்பல் கொண்டு பற்களைத் துலக்கவேண்டாம். உணவின் பின்னர் பற்களைத் துலக்கிச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும். முடியுமானால் பல் வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

தலையில் பொடுகு ஏற்படுவதற்கு தொற்றுகள், பங்கசுத் தொற்று என்பவை சில காரணங்களாக இருந்தாலும் தலையில் சருமம் வரண்டு ஒவ்வாமை மற்றும் வைட்டமின் குறைவுகளாலும் பொடுகு ஏற்படும். முதலில் காரணத்தை அறிந்து - அதற்குரிய சிகிச்சையைப் பெறவேண்டும். சரும நோய் நிபுணர்களின் ஆலோசனை பெறுதல் சாலச்சிறந்தது. தலையில் பொடுகு உள்ளவர்களுக்கு அந்தப் பொடுகு, முகத்தில், கழுத்தில், நெஞ்சில், முதுகில் விழுந்து பருக்களை ஏற்படுத்துவது சகஜம். படுக்கை விரிப்பில் பொடுகு உதிர்ந்து விழுந்து அதன் மேல் நாம் படுத்துருளும்போது சருமத்தில் தொற்று ஏற்பட்டு பருக்கள் ஏற்படும். தலையில் பொடுகுகளை நீக்கினால் ஒழிய பருக்கள் தோன்றுவதைத் தவிர்க்க முடியாது.

* * *

**கேள்வி:** ஆண். கிரிக்கெட் விளையாடும்போது பந்து முகத்தில் பட்டு வலது பக்க முக எலும்பு உள்ளுக்குள் அமிழ்ந்து போய்விட்டது (Depressed Inside). தற்பொழுது ஒரு பக்க முகம் கோணலாகப் பார்ப்பதற்கு தெரிகின்றது. இதனை நிவர்த்தி செய்யமுடியுமா?

**பதில்:** இன்றைய விஞ்ஞான யுகத்தில் இந்த மாதிரியான சிகிச்சைகள் எல்லாம் மிகச் சாதாரணம். முக அழகையே மாற்றும் - கலியுக விஸ்வகர்மாக்களாக - Maxillo Facial-Surgeons எனப்படும் விசேட வைத்திய நிபுணர்களால் உங்களுக்கு உதவி புரிய முடியும் என நம்புகின்றேன்.



இலங்கையில் கண்டி பொதுமருத்துவமனை, கொழும்பு பொதுமருத்துவமனை உட்பட பல மருத்துவமனைகளில் இது மாதிரியான சத்திரசிகிச்சைகள் நடைபெறுகின்றன. ஆனால், இத்தகைய சிகிச்சை முறைகள், நமது அண்டை நாடான இந்தியாவில் மிகவும் அபிவிருத்தியடைந்துள்ளன என்பதை நான் நேரில் பார்த்தும் உள்ளேன். நீங்களும் இந்தியச் சஞ்சிகைகளிலும் இந்தியத் தொலைக்காட்சிகளிலும் இந்தப் புதிய சத்திர சிகிச்சை பற்றி வாசித்தும் பார்த்தும் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன். ஆனால், இந்தியாவில் இந்த சிகிச்சைக்குச் செலவு கொஞ்சம் அதிகம். எனவே முதலில் நம் நாட்டு Maxillo Facial துறை நிபுணர்களைச் சந்தித்து ஆலோசனை பெறவும்.

* * *

**கேள்வி:** வயது 32. எனக்கு கடந்த 10 வருடங்களாக ஒவ்வாமை (Allergy) நோயிருக்கின்றது. பல வைத்தியர்களிடம் (ஆங்கில மருத்துவர்) சிகிச்சை பெற்றும் குணமாகவில்லை; ஹோமியோபதி மருத்துவத்தில் குணமாக்க மருந்துகள் உண்டு என்று கூறுகிறார்கள். அதனைச் செய்யலாமா? அல்லது நீங்கள் கூறும் பரிகாரம் என்ன?

**பதில்:** தங்களுக்கு ஒவ்வாமை உள்ளது என்று கூறியுள்ளீர்கள். உங்கள் ஒவ் வாமை எப்படிப்பட்டது, என்ன விதத் தில் வெளிவருகின்றது என்பன பற்றிக் கூறவில்லை. உதாரணமாக ஒரு சிலருக்கு உணவு ஒவ்வாமை - Food - Allergy- வயிற்றுவலி, வயிறோட்டம், வாந்தி என்பவையாலும் - தேகத்தில் அரிப்பு, எறும்பு கடித்தது போல் சருமத்தில் பொக்களம் போன்றவையாலும் வெளியே தோன்றும் காற்றிலுள்ள தூசு, பூக்களின் மகரந்தங்களால் ஏற்படும் ஒவ்வாமை - தும்மல், கண் சிவத்தல், வீக்கம் என்ற வகைகளில் வெளிப்பாடு காட்டும். Dust-mite என்கிற தூசி நுண்ணங்கிகளால் - ஒவ்வாமை ஏற்பட்டால் Bronchitis என்கின்ற நுரையீரல் குழாய் அழற்சி, Asthma என்கிற மூச்சிரைப்பு நோய்கள் ஏற்படலாம். இவற்றைத் தவிர, சிலருக்கு சில உணவுகளுக்கு, இறைச்சி வகைகளுக்கும் சில தக்காளி, பருப்பு போன்ற காய்கறி தானிய வகைகளுக்கும் ஒவ்வாமை ஏற்படும். இன்னும் சிலருக்கு உபயோகிக்கும் மருந்து வகைகளுக்கு கூட ஒவ்வாமை ஏற்படும். சிலருக்கு ஒரு குறிப்பிட்ட பருவகாலத்திலோ (காலை - மாலை வேளைகள்) ஒவ்வாமை அறிகுறிகள் ஏற்படும். எனவே பொதுவாக உங்களுக்கு தொடர்ந்து பல வருடங்களாக ஒவ்வாமை ஏற்படுகின்றதென்றால் - ஒரேவகையான குணங்குறிகளுடன் ஒவ்வாமை ஏற்படுகின்றதா அல்லது வெவ்வேறு சந்தர்ப்பங்களில், வெவ்வேறு பொருட்களால் ஒவ்வாமை ஏற்படுகின்றதா என்பதை முதலில் கண்டறிய வேண்டும். ஆங்கில மருத்துவத்தின்படி ஒவ்வாமை ஏற்படுவதற்கு - ஒவ்வாத பொருள், சூழ்நிலை, உணவு என்பவை- உங்கள் தேகத்தோடு சம்பந்தப்படும் போது - Histamine, serotonin போன்ற பொருட்கள் சுரக்கப்பட்டு- இவை உடலின் திசுக்களில் ஏற்படுத்தும் மாற்றமே ஒவ்வாமையின் குணம் குறிகளாக வெளிப்படுத்தப்படுகின்றன. எனவே - சுரக்கப்பட்ட ஹிஸ்ரமைன், செரோட்டனின் பொருட்களுக்கு எதிர்வினை தரும் Anti Histamine, Anti-Serotonin, Anti-Inflamatory வகை மருந்துகளை மேற்கத்திய - ஆங்கிலேய மருத்துவம் உபயோகித்து சிகிச்சை அளிக்கின்றது. மொத்தத்தில் - Symptomatic Treatment என அழைக்கப்படும் குணங்குறிகளுக்குத்தான் மேற்கத்திய வைத்தியத்தில் சிகிச்சை அளிக்கப் படுகின்றதே, ஒழிய நோயின் காரணத்தை - அடிப்படையை கண்டறிந்து சிகிச்சை தரப்படுவதில்லை. அநேகமான ஒவ்வாமைகளுக்கு காலக்கெதியில் - நமது தேகம் இசைந்து (Adjusted) போய்விடுவதால் இந்த Symptomatic சிகிச்சையோடு -

இலவச மருத்துவ
ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்த மல்லிமாராய்ச்சி
மாவத்தை, கொழும்பு-14.

ஒவ்வாமை குணமாகிப்போய்விடுவதும் உண்டு. நீங்களும் இத்தகைய சிகிச்சைகளை இதுவரை பெற்றிருப்பீர்கள். என்றாலும் தொடர்ந்தும் திருப்பித்திருப்பி வருவதால்- உங்கள் ஒவ்வாமை குணமாகவில்லை என்றே எனக்குத் தெரிகின்றது. ஒவ்வாமையை கண்டறிந்து, அதன் காரணத்திற்கு சிகிச்சை அளிப்பதில்தான் வெற்றி தங்கியுள்ளது. சித்தவைத்தியம், ஆயுர்வேதம், ஹோமியோபதி வைத்தியம் என்பவை நோய்களின் காரணங்களுக்குத்தான் சிகிச்சை அளிக்கின்றன என்பதனால் ஒவ்வாமைக்கு இவை சிறந்த சிகிச்சை முறைகள் என்பது எனது சொந்த அபிப்பிராயம். ஆனால் இத்துறைகளில் தகுந்த வைத்தியரின் சிகிச்சையை நாடவேண்டும். சமீபத்தில் எனது நண்பர் ஒருவர் தனது ஒவ்வாமை பிரச்சினைக்கு இந்தியாவின் கேரள மாநிலத்தில் - ஒவ்வாமை சிகிச்சைக்கென்று தனியே ஒரு ஸ்தாபனம் இருப்பதாகவும், அங்கு ஒவ்வாமை தரக் கூடிய சகல விஷயங்களையும் நோயாளியிடம் தனித்தனியே பரீட்சித்து காரணத்தைக் கண்டு பிடித்து சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் கூறினார். பலவைத்தியர்களால் கைவிடப்பட்ட அவரது ஒவ்வாமைக்கோளாறு அந்த சிகிச்சையின் பின்னர் முற்றாகக் குணமாகியதாகவும் தெரிவித்தார். இதுபற்றிய வேறுவிவரங்கள் எனக்கு தெரியவில்லை.



சுடர் சிந்தனை :- "தொடர்ச்சியான பயிற்சியே வெற்றிக்கு வழி"

# தரம்-05 புலமைப்பரிசில்

## விசேட மாதிரி வினாத்தாள் - 07

மாணவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
பாடசாலை/கல்வி நிலையம் : ..........................................
மாவட்டம் : ..........................................
தொலைபேசி இலக்கம் : ..........................................

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி - 1

**முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.**

01. மென்மை - அழகு - பாயும்



1) 2) 3)


02. நீர் - வர்ணம் - கொடி




1) 2) 3)

**3ஆம், 4ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருக்களின் தொடர்பினை அவதானித்து அடுத்துவரும் உருவின் கீழ் கோடிடுக.**


03.






1) 2) 3)

04.





1) 2) 3)

05. இவ் உருவில் உள்ள ஆகக்கூடிய செவ்வகங்கள் எத்தனை?



1) 18 2) 12 3) 16


**6ஆம், 7ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்களுள் இரண்டு ஒத்த தன்மை உடையவை. அவற்றின் கீழ்க் கோடிடுக.**

06.



(A) (B) (C) (D)


07.



(A) (B) (C) (D)


**8ஆம், 9ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருக்களின் இடைவெளிகளில் வரவேண்டிய மிகப்பொருத்தமான பகுதியின் கீழ்க் கோடிடுக.**

08.



1) 2) 3)

09.



1) 2) 3)

**10ஆம், 11ஆம் வினாக்களில் உள்ள பழமொழிகள் உணர்த்தும் கருத்துக்களைத் தெரிவுசெய்க.**

10. இளங்கன்று பயமறியாது
 1) சிறிய கன்றுக்கு எப்போதும் பயம் இருக்காது.
 2) இளமைப்பருவம் துணிவு கொண்டது.
 3) இளமைப்பருவத்தில் பயப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதில்லை.

11. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
 1) சிறிய துரும்பைக் கொண்டே பல் குத்த வேண்டும்.
 2) சிறிய பொருட்களை சேர்த்து வைத்தல் வேண்டும்.
 3) எதனையும இகழ்ந்து பேசலாகாது.

**12ஆம், 13ஆம் வினாக்களுக்கு பின்வரும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு விடை தருக.**

1 மாம்பழம், 2 தோடம்பழம் → 70
3 மாம்பழம், 4 தோடம்பழம் → 160

12. ஒரு மாம்பழத்தின் விலை யாது?
 1) 25 2) 20 3) 30

13. 5 மாம்பழம் வாங்கும் விலைக்கு எத்தனை தோடம்பழங்களை வாங்கலாம்?
 1) 2 2) 3 3) 4


14. காலையில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்த கபிலனின் நிழல் அவனுக்குப் பின்னால் விழுந்தது. எனின், அவன் எத்திசையினை நோக்கி பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்திருப்பான்?
 1) கிழக்கு. 2) மேற்கு. 3) வடக்கு

15. அண்ணன், தம்பி இருவரதும் வயதுகளுக்கிடையில் உள்ள வித்தியாசம் 6 ஆண்டுகளாகும். இருவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை 34 ஆகும். எனின், அண்ணனின் வயது யாது?
 1) 14 2) 20 3) 28


16. ஒரு முக்கோண வடிவான உருவினை ஆக்க அதன் பக்கங்களுக்கு குண்டூசிகள் பொருத்தப்பட்டன. ஒரு பக்கத்திற்கு 9 குண்டூசிகள் பொருத்தப்பட்டன எனின், அவ்வுருவை அமைக்கத் தேவையான குண்டூசிகள் எத்தனை?
 1) 27 2) 24 3) 30

17. விளையாட்டு, கிரிக்கெற், வொலிபோல் என்பவற்றிற்கிடையிலான தொடர்பைக் காட்டும் சரியான உரு எது?
 A விளையாட்டு.
 B கிரிக்கெற்.
 C வொலிபோல்.


1)




2)




3)



# தூண்டில் மீன்

சிறுகதை

ச. முருகானந்தன்



முகுந்தனால் நம்பமுடியவில்லை. ஒருவேளை இது கனவாக இருக்கக்கூடாதா என மனது ஏங்கியது. நினைத்தபடி வாழ்க்கைத்துணை அமைவது என்பது எல்லோருக்கும் கொடுத்துவைப்பதில்லையே. அரபுப் பாலைவனத்தில் இரண்டுவருடம் குப்பை கொட்டிவிட்டு, கணிசமான வங்கி இருப்புடனும், வாழ்க்கை பற்றிய இனிய கனவுடனும் வந்திறங்கிய அவனுக்கு இந்த ஏமாற்றமா காத்திருக்கவேண்டும்?

அவன் வந்தமையை அறிந்த நண்பர்கள், உறவினர்கள் அவனைத் தேடி வந்த வண்ணம் இருந்தனர். அவர்களோடு மனம்விட்டு மகிழ்வோடு உரையாடமுடியாத அளவு இதயம் சோகத்தில் ஆழ்ந்திருந்தது. வரண்டுபோன அவன் கண்களில் அழுவதற்குக் கண்ணீர் இருக்கவில்லை. வாழ்க்கை பற்றிய எதிர்பார்ப்புகளை மென்று விழுங்கிக்கொண்டு ஒப்புக்கு உரையாடிக்கொண்டிருந்தான்.

காதலுக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா? அவனைத் துயரில் தோய்த்து அமிழவைத்து அமுக்குகிறதே? ராணி எப்படி அவளால் முடிந்தது இன்னொருவனை மணந்துகொள்ள? அவன் வரும் வரை அவனுக்காகக் காத்திருப்பேன் என்று கண்ணீரிடையே சொல்லி வழி அனுப்பியவள், அதை ஏன் மறந்தாள்?

ஏமாற்றத்தின் உச்சத்தில் துடிதுடித்துக் கொண்டிருக்கும் அவனுக்கு, ஊரில் ஏற்பட்ட பேரிழப்புகள் எவையுமே தனது காதல் தோல்விக்கு நிகரானவையாகத் தெரியவில்லை.

(இரண்டு வருடங்களுக்கு முன்னர் வெளிநாடு சென்றபோதிருந்ததை விட ஊர் எவ்வளவு அழிவுற்றுப் போய் இருக்கிறது...? கொடுநாசயுத்த அரக்கன் ஏறத்தாழ அந்த ஊரை முழுமையாகவே விழுங்கி விட்டிருந்தான். எங்கு பார்த்தாலும் இடிந்த கட்டடங்கள், வரண்டுபோன விளை நிலங்கள். வீதியில் அதிக சனநடமாட்டம் இல்லை. மக்களின் முகங்கள் கூட இருண்டு போய், இடிந்து போய், நம்பிக்கை அற்றவையாய்....

இந்த இடைப்பட்ட இரண்டு வருடத்துக்குள் எத்தனை பேர் யுத்தத்தின் போது பலியாகிவிட்டார்கள்? எத்தனைபேர் காணாமல் போய் விட்டார்கள்? வீதிகளே 'சுடுகாடு'களான கதைகளை கேட்கக் கேட்க நெஞ்சு கனத்து அழுகிறது. ஏற்கனவே கடிதமூலம் கேள்விப்பட்ட - தொலைபேசி மூலம் அறிந்த - விடயங்கள்தாம். எனினும், பிரளயத்தின் பின்னரான ஊர் போல் சிதைவடைந்து விட்ட அவனது கிராமத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. எனினும், இவற்றை எல்லாம் தள்ளிவிட்டு தனது சொந்த வாழ்வில் ஏற்பட்டுவிட்ட காதல் தோல்வி அவனை நடைப்பிணமாக்கி விட்டிருக்கிறது.

அவனால் நம்ப முடியவில்லை! ராணியா தன்னை நிராகரித்தாள்? ஏன் நிராகரித்தாள்?.... அப்படி நிராகரித்தாலும் எப்படி ரவியை அவளால் மணந்து கொள்ள முடிந்தது?

மாலையில் மனம் ஒரு நிலையின்றித் தவித்த நிலையில் அவன் வெறிச்சோடிய வீதியினூடே உச்சிக்கோயில் குளத்தை நோக்கி நடக்கின்ற வேளை, அவன் மனதில் அவளைத் தவிர எதும் இருக்கவில்லை. அன்று காலையில் அவளுடனான தற்செயலான எதிர்ப்படலின் போது, தன் வாட்டத்தை மறைத்தபடி அவள் புன்னகைத்து, அவனோடு உரையாடியபோது அவன் செயலற்றுப் போனான். எவ்வளவு விரைவாக அவனிடமும், அவ்விடத்திலிருந்தும் விலகிட முடியுமோ, அவ்வளவு விரைவாக ராணி விடைபெற்றுச் சென்றபோது, வலிந்து சிரித்த அவளது முகத்தின் முகமூடியினூடேயே உறைந்திருந்த அவளது சோகத்தை அவனால் உணர்ந்திட முடிந்தது. அவனுக்கு முன்னால், அன்பின் சுவடு வற்றிபோன, இருளுடுருவி மறைக்கின்ற, வெகு ஆழத்தில் வெறி மூடிக்கிடக்கின்ற இதய அறைகளுக்குள், அவனோடு கடந்து விட்ட நினைவுச்சுழல்கள் எழாதவள் போல் அவள் பேச முயன்றமை, அவனுக்குப் பெரு வியப்பாக இருந்தது.

மனதில் புரையோடிப் போயிருக்கிற உச்சகட்ட துயரமான காலப் பதிவுகளில் நசிந்து இடர்பட்டு, ஆணிவேர் உருக் குலைந்து போயிருக்கின்ற, உறவின் கறைகளில் சிக்கிப் பங்குமுற்றுப் போயிருக்கின்ற அவனைப் போல, அவளும் தினமும் அழுதுவடிகின்றாளா?.. இல்லை எல்லாவற்றையும் மறந்து புறம் தள்ளி விட்டு கிடைத்த வாழ்வை வளமுற சுவைத்தபடி இருக்கின்றாளா?... அவனுக்குப் புரியவில்லை.

இதய சோகத்தினூடும், அவன் கால்கள் இலக்கை நோக்கி தவறாது நடந்து கொண்டிருந்தன.

இங்கொன்றும் அங்கொன்றுமாக இடிந்தும், இடியாமலும் சில கட்டடங்கள். தன்னிச்சையாக வளர்ந்த பற்றைகள் மூடிய காணிகள். வீதி வெறிச்சோடியிருந்தது. எப்பொழுதுமே கலகலப்பாக இருக்கும் கோயில் வீதியும் சோபையிழந்திருந்தது. குளத்தங் கரையிலும் சனநடமாட்டம் இல்லை. அதிகம் சனப்புழக்கம் இல்லாதமையினால் குளத்து நீரில் பாசி படர்ந்திருந்தது. சுற்றுப்புற மரங்களை மேவிப் பற்றைகளும், புதர்களும் வளர்ந்திருந்தன.

முகுந்தன் குளக்கரையில் வந்தமர்ந்து கொண்டான். சருகுகளின் ஓசையில் தவளைகள் தத்திப் பாய்ந்தன. தொலைவில் யாரோ இரண்டு விடலைகள் தூண்டில் வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அவனது நினைவுகளும் பின்நோக்கி நகர்ந்தன.

அவனும் ரவியும் எத்தனை நாட்கள் அவர்களைப் போல் இந்தக் குளத்தங்கரையில் நேரம் போவது தெரியாது அமர்ந்திருந்து, பேசியபடியே மீன்களுக்குத் தூண்டில் போட்டபடி களித்திருக்கிறார்கள். நகமும் சதையும் போன்ற நட்பு. பாடசாலையிலும் ஒரே வகுப்பு. இருவரையும் எப்போதும் தனித்தனி காண்பதென்பது அரிது. உள்ளூரில் திரைப்படம் வெளியாகும் நாளில் திரையரங்கில் கலரியில் இருவரையும் அருகருகே காணலாம். கோயில் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் எல்லாவற்றிக்கும் இருவருமே சேர்ந்துப் போவார்கள்.

இருவரும் எப்பொழுதும் எதையாவது பேசிக்கொண்டிருப்பார்கள். உள்ளூர் விவகாரம், அரசியல், சினிமா, விளையாட்டு எனப் பல விடயங்கள் பற்றி பேசினாலும், பருவ உணர்வு தொடர்பான உரையாடல்கள் முன்னுரிமை பெறும். புரியாதவற்றையும், தெரியாதவற்றையும் தமக்குத் தெரிந்தளவில் பகிர்ந்து கொள்வார்கள்.

சனி, ஞாயிறு விடுமுறை நாட்கள் வந்து விட்டால் குளத்தில் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதே நண்பர்கள் இருவரினதும் பொழுதுபோக்காக இருக்கும். முதல் நாள் மாலையிலேயே இதற்காக திட்டம் தீட்ட ஆரம்பித்து விடுவார்கள். ஏனைய நண்பர்கள் போல் கிரிக்கட் மட்டையும் விக்கட்டும் என்று இவர்கள் அலைவதில்லை. தனியார் கல்வி நிலையங்களில் படிப்பதிலும் ஈடுபாடில்லை. மீன் பிடிக்கச் செல்வது தான் விருப்பமான பொழுதுபோக்கு.

குளத்தில் ஜப்பான் மீன் என்ற கறுப்பு மீனும், கெழுத்தி மீனும்தான் அதிகம் இருக்கும். இரண்டு வகை மீனும் இருவருக்கும் அதிக விருப்பமில்லை. பிடிபடும் இவ்வகை மீன்களை யாராவது வழிப்போக்கர்களுக்கு இலவசமாகக் கொடுத்து விடுவார்கள். எப்போதாவது படும் விரால் மீன் என்றால் இருவருக்குமே பிடிக்கும். அவர்களது வீட்டாரும் விரும்பி உண்ணுவார்கள். அவியலாகவோ, ஆணமாகவோ, தூள் பிரட்டலாகவோ, பொரியலாகவோ உண்ணுவார்கள். தசைப்பிடிப்பான விரால் மீன்களை சுவைத்து ரசித்து உண்ணுவார்கள்.

சனி, ஞாயிறு காலையிலே குளத்தடிக்குச் சென்றுவிடுவார்கள். இவர்களைப் போல இன்னும் சிலரும் மீன் பிடிக்கத் தூண்டில் சகிதம் வருவார்கள். அத்துடன் காலையில் பலரும் குளிக்க வருவதால் குளத்தடி கலகலப்பாக இருக்கும். சிறிய பருவத்தில் மீன்களுக்கு மட்டும் தூண்டில் போட்டவர்கள், வளர்ந்து விடலைப் பருவம் எய்திய பின் மீன்களுக்கு தூண்டில் போட்டுக் காத்திருக்கும் வேளையில் குளிக்க வரும் குமர்ப்பெண்களுக்குத் தமது கண்களாலும் தூண்டில் போடுவர். மாலையிலும் மீன் பிடிக்க வருவதுண்டு. அப்போது குளத்தடி சன சந்தடியின்றி இருக்கும். தூண்டில் போட்டபடி மனம் விட்டு உரையாடுவதற்கு பொருத்தமான நேரம்.

தூண்டில் கொழுவுவதற்காக நாக்கிளிப் புழுக்களைச் சேகரித்துக் கொண்டு வருவதெல்லாம் ரவிதான். தூண்டில் கட்டுவது தொடக்கம், மீனுக்குப் புழுக்களை இரையாக தங்கூசியில் கொழுவுவதற்கு அளவாக வெட்டுவது வரை எல்லா வேலைகளிலும் ரவி வல்லவன். தூண்டிலில் புழுக்களைக் கொழுவுவது அவதானமாகச் செய்யாது விட்டால் தூண்டில் ஊசி கைவிரலைப் பதம் பார்த்து விடும். புழுக்கள் நெளிந்துக் கொண்டிருந்தால் கொழுவுவதும் கடினம். ஆனால், ரவிக்கு இது கைவந்த கலை. முகுந்தன்தான் சிரமப்படுவான்.

இருவரும் ஒரே நேரத்தில் தூண்டில் போட்டாலும், ரவியின் தூண்டிலில் மீன் இலகுவில் மாட்டிவிடும். எனினும், முகுந்தன் நீண்ட நேரம் மீனுக்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும். அவன் ஒரு மீன் பிடிக்கும்போது ரவி நான்கைந்து மீன்களைப் பிடித்து விடுவான். எனினும், விரால் மீன் அவசரமாக முகுந்தனின் தூண்டிலில் சிக்கும். சில வேளைகளில் ரவிக்கு ஒரு இரால் கூட அகப்படாது. அப்படியான நாட்களில் அவன் முகுந்தன் பிடித்த விராலைக் கேட்பான். அவனும் மறுக்காமல் கொடுப்பான்.

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த முகுந்தனை குளக்கரை பாலைமரத்திலிருந்து தாவிய குரங்குக் கூட்டம் இவ்வுலகுக்குக் கொண்டுவந்தது. யாரோ இரண்டு பெண்கள் குளத்திற்குக் குளிப்பதற்காக இறங்கிக் கொண்டிருந்தார்கள். முகுந்தனின் நினைவில் ராணி பிரசன்னமானாள். சில வருடங்களுக்கு முன்னர் அவனும் ரவியும் தூண்டில் போட்டுக் காத்திருக்கும் வேளையில் அவளும் தோழிகள் சகிதம் குளிக்க வருவாள். அந்த வேளைகளில் குளிக்கும் பெண்களை இவர்கள் கண்கள் கண்டும் காணாதது போல் மேய்வதுண்டு. எதிலும் ரவியின் கண்களோ முதல் பாய்ச்சல். நாளாவட்டத்தில் ராணியை மேய ஆரம்பித்தான். ஆனாலும் அவளோ இவனைத் திரும்பிக் கூட, பார்ப்பதில்லை. தற்செயலாக அவர்கள் பக்கம் திரும்பினால் கூட அவள் தன்னையே பார்ப்பதாக முகுந்தனிடம் தம்பட்டமடிப்பான். முகுந்தனுக்கு நண்பனின் கூற்றில் உடன்பாடு இல்லாவிட்டாலும் கூட அவனது மனம் நோகுமே என்று மறுத்துக் கூற மாட்டான்.

ராணி அழகிதான். கூடிவரும் நண்பிகள் மத்தியில் பளிச்சென்று இருப்பாள். வசீகரமான, களையான முகத்தில் எப்போதும் புன்னகை பூத்திருக்கும். நண்பனுக்கு அவள் மீது ஈர்ப்பு ஏற்பட்டிருக்காவிட்டால், முகுந்தனும் அவள் மேல் காதல் கொண்டிருக்கக் கூடும்.

முகுந்தனுக்கு இல்லாத ஏதோ ஒரு வசீகரம் ரவிக்கு இருக்க வேண்டும். சுற்று வட்டத்திலுள்ள இளம் பெண்களில் பலருக்கு அவனில் விருப்பம் இருந்தது. தூண்டில் போடும்போதுதான் ஜப்பான் மீன்கள் அவனுக்குச் சிக்கும். அவன் கண்களால் தூண்டில் போடாமலே பல பெண்கள் ரவியின் காதலுக்காக ஏங்குவதை முகுந்தன் அவதானித்திருக்கிறான். ஆனாலும் விரால் மீன் போல அவனது தூண்டிலில் சிக்காமல் வழுக்கி கொண்டிருந்தாள் ராணி. இது ரவியைப் பெரிதும் பாதித்தது. பித்துபிடித்தவன் போல் அவள் பின்னால் திரிந்தும் அவள் அசைந்து கொடுக்கவில்லை. இறுதியில் முகுந்தனிடம் தஞ்சமடைந்தான்.

''மச்சான்.... அவள் இல்லாத வாழ்க்கையை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. நீதான் எப்படியும் எனக்காக அவளோடு கதைத்து சம்மதம் வாங்கித்தரவேண்டும்'' என்று அவன் கேட்டபோது முகுந்தனின் மனம் திக்கென்றது.

அதற்கு இரண்டு காரணங்கள். காதல் விவகாரங்களில் தூது போவது சிக்கலான விடயம். மற்றது இப்படியான விடயங்களில் அவனுக்கு அனுபவம் இல்லை. பெண்களுடன் அதிலும் இப்படியான விடயங்களைப் பேசுவது என்றாலே நாடி துடித்து உடல் வியர்க்கத் தொடங்கிவிடும். எனினும், நண்பனை பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு ஒருநாள் ராணியை அணுகினான். அவன் நினைத்தது போலன்றி அவள் வெகு இயல்பாகவே

(27 ஆம் பக்கம் பார்க்க)



# திரிஷாவைப் பின்னுக்குத் தள்ளிய நயன்தாரா

திரிஷா, இலியானா இருவரையும் சம்பள விஷயத்தில் பின்னுக்குத் தள்ளினார் நயன்தாரா. மலையாளத்தில் வெளியான 'மனசின் அக்கரை' திரைப்படமே நயன்தாராவின் முதல்படம். இதில் ஏழை கம்யூனிச தம்பதியின் ஒரே மகளாக நடித்திருந்தார் நயன். ஜெயராம், செம்மீன் ஷிலா ஆகியோர் நடித்திருந்த 'மனசின் அக்கரையில்' அறிமுகமான நயன்தாராவின் இன்றைய வளர்ச்சி பிரமிப்பானது.

இதற்கு அடித்தளமாக அமைந்தது ஹரியின் 'ஐயா'. சரத்குமார் ஜோடியாக நயன்தாரா நடித்த இந்தப் படமே நயன்தாராவின் முதல் தமிழ்ப்படம். பிறகு ரஜினி ஜோடியாக சந்திரமுகி. அத்தோடு தெலுங்கிலும் முன்னணி நடிகையானார். சிம்புவுடனான காதல் விவகாரத்தில் சிறிதுகாலம் முடங்கிப்போனாலும் அவரது மீள்வரவு பிரமாண்டமாக இருந்தது.

'பில்லா'வில் கிளாமரில் கலக்கியவர், 'யாரடி நீ மோகினி'யில் குணச்சித்திர வேடத்தில் கலங்கடித்தார். 'குசேலன்', 'சத்யம்', 'ஏகன்', 'வில்லு' என இப்போதைக்கு இவர்தான் கொலிவூட்டின் டொப் ஹீரோயின்.

லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் தயாரிப்பில் கார்த்தி நடிக்கும் படத்தில் நயன்தாரா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்தப் படத்திற்கு நடிகைகள் திரிஷா, இலியானா வாங்கும் சம்பளத்தை விட அதிகமாக நயன்தாராவுக்கு சம்பளம் பேசப்பட்டுள்ளது. சுமார் 1.2கோடி என்கிறது கோடம்பாக்கம். 'குசேலன்' வெளிவந்தால் இந்தச் சம்பளத்திற்கும் சிக்கமாட்டார் நயன்தாரா என்பதுதான் நிலைமை.

# கமல் ஜே

'மர்மயோகி'யில் கமல்ஹாசனுக்கு ஜோ
ஸ்ரேயா. இதுபற்றி ஸ்ரேயா கூறியதாவது:
தயாரிக்கும் கொலிவுட் பட சூட்டிங் முடி
திரைக்கு வருகிறது. இதில் கால் சென்டர்
மொடேர்ன் கேர்ள் வேடம். வெளிநாட்டு
தொலைபேசியில் பேசும்போது காதல் மல
காதலால் ஏற்படும் விளைவுகள்தான் கதை
தமிழில் விக்ரம் ஜோடியாக 'கந்தசாமி'யில்
நடித்து வருகிறேன். இதையடுத்து கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் 'ஜக்குபாய்' படத்தில் நடிக்கிறேன். தந்தை, மகளுக்கு இடையே நடக்கும் சம்பவத்தை மையமாக வைத்து இக்கதை உருவாகி இருக்கிறது. இதில் சரத்குமார் மகளாக நடிக்கிறேன். கமலஹாசன் இயக்கி நடிக்கும் 'மர்மயோகி'யில் நடிக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். அதற்கான பேச்சு நடக்கிறது. இதுகுறித்து விரைவில் அறிவிப்பேன்'' இவ்வாறு ஸ்ரேயா கூறினார்.



# தோமையார் படத்தில் அஜித், ஷாலினி

புனித தோமையாரின் வாழ்க்கை வரலாறை திரைப்படமாக எடுக்க, கிறிஸ்தவர்கள் முன்வந்துள்ளனர். சுமார் ஐம்பது கோடியில் இத்திரைப்படம் தயாரிக்கப்படுகிறது. தோமையாரின் நினைவு நாளான கடந்தவாரம் படத்தின் தொடக்க விழா சாந்தோம் ஆலய வளாகத்தில் நடைபெற்றது. முதலமைச்சர் கருணாநிதி படத்தைத் தொடக்கிவைத்தார்.பிரமாண்டமாகத் தயாராகும் இப்படத்தில் ஹொலிவூட் நடிகர்கள் சிலரும் நடிக்கிறார்கள். சென்னை, இடுக்கி மூணாறு பகுதிகளிலும் சில வெளிநாடுகளிலும் படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். நடிகர் அஜித்தையும் அவர மனைவி ஷாலினியையும் சிறப்புத் தோற்றத்தில் நடிக்கவைக்கும் திட்டம் உள்ளதாக கூறினார் படத்தின் ஒருங்கிணைப்பாளர். தொடக்கவிழா இப்போது நடந்தாலும் படப் பிடிப்பு அடுத்தவருடம் ஜனவரியில்தான் தொடங்குகிறது.



# படிக்காதவனுக்கு பிரம

தனுஷ் நடிக்கும் 'ப
பிரமாண்ட அர
விமானநிலையம் பே
நீண்டநேரம் படப்பி
களில் இந்தியா
தீவிரவாதிகளின்
இதனால் பாதுகாப்
ப
காட்
காத்திருந்த
அறிந்தவ







## ...ஜோடியாக ஸ்ரேயா

...ஜோடியாக நடிக்கிறார்
...வது:அசோக் அமிர்தராஜ்
...முடிந்துவிட்டது. ஒகஸ்டில்
...ட்டரில்வேலைசெய்யும்
...ட்டு இளைஞருடன்
...ல் மலர்கிறது. அந்தக்
... கதை.
...'யில்

## ...ரமாண்ட அரங்கு

...தும் 'படிக்காதவன்' படத்துக்கு ஹைதராபாத்தில் ...அரங்கு அமைக்கிறார்கள். ரயில்நிலையம், ...ம் போன்ற சனநெருக்கம் அதிகமுள்ள பகுதிகளில் ...டப்பிடிப்பு நடத்துவது கடினம். மேலும் சமீபகாலங் ...ந்தியாவின் ரயில் மற்றும் விமான நிலையங்கள் ...ளின் தாக்குதல் பட்டியியலில் இடம்பிடித்துள்ளன. ...துகாப்புப் பிரச்சினைகளும் உண்டு.தனுஷ் நடிக்கும் 'படிக்காதவனிலும் ரயில்நிலைய காட்சியொன்று இடம்பெறுகிறது. அனுமதிக்காகக் ...இருந்தால் ஆறுமாதம்ஓடிப்போய்விடும் என்பதை ...ிந்தவர்கள் ரயில்நிலையம் போன்று பிரமாண்ட அரங்கை ஹைதராபாத் ராமோஜிராவ் பிலிட் சிட்டியில் உருவாக்கியுள்ளனர்.



# வில்லு



## விக்னேஷை பாம்பு கடித்தது! படப்பிடிப்பில் பயங்கரம்

விக்னேஷ் நடிக்கும் ஒவ்வொரு படமுமே விஷக்கடிதான். இந்த லட்சணத்தில் நிஜப்பாம்புகள் அவரைக் கொத்தி அதுவும் ஒரு விஷக்கடியாக ஆனதால் படப் பிடிப்பு குழுவே பதறிப்போயி ருக்கிறது. 'ஈசா' என்ற படத்தின் சூட்டிங்கில் விக்னேஷ் மீது பாம்பு களை தூக்கி எறிவது போலவும் அவர் அதை தனது கைகளால் தடுத்தபடியே எதிரிகளுடன் சண்டை போடுவது போலவும் காட்சி. இவ்வாறு எறிந்த பாம்பு களில் எல்லாமே 'பொக்கை' வாய் பாம்புகள்தான் என்று நம்பி சண்டை போட்டுக்கொண்டிருந்த விக்னேஷ், ஏமாந்துபோனதுதான் பரிதாபம். அதில் சில நிஜப்பாம்புகளும் உள்ளே வந்துவிட்டனவாம். கொஞ்சநேரத்தில் மயக்கமாகி விட்டார் விக்னேஷ். பதற்றமடைந்த படப்பிடிப்புக்குழுவினர் அங்கிருந்து அவரை அவசர அவசரமாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சிகிச்சை அளித்தார்கள். தற்போது கடிபட்ட விக்னேஷ் சுகமாக இருக்கிறார்.



## ஆயுதம் செய்வோம்


### திரைவிமர்சனம்

'பிரச்சினைக்கு வன்முறை தீர்வாகாது' காந்தியடிகளின் இந்தச் சத்தியவார்த்தையை கொண்டு கதை பண்ணியிருக்கிறார் இயக்குநர் உதயன். எனினும், மாளவிகாவின் குத்தாட்டம் மூலம் சத்தியசோதனை புத்தகத்தை விற்கும் மட்டமான சிந்தனையையெல்லாம் நியாயப்படுத்துவதை மகாத்மாவின் ஆத்மா மன்னிக்காது.

கதாநாயகனான சுந்தர் சி. அவ்வப்போது அடிதடியில் இறங்கும் ஒரு மெக்கானிக். டிராபிக்கிற்கு இடையூறு ஏற்படுத்திய குற்றத்திற்காக 15நாட்கள் மதுரை காந்தியகத்தில் இருக்கவேண்டுமெனத் தண்டனை விதிக்கிறது கோர்ட். காமெடி டிராக்கையும் நுழைக்கவேண்டும் என்பதால் கூடவே ஒட்டிக்கொள்கிறார் விவேக். தண்டனை அனுபவிக்கப்போன இடத்தில் மாமியார் வீட்டுக்கு விருந்துண்ணப்போன மாப்பிள்ளைகள் போல இருவரும் அடிக்கும் லூட்டிகள் சிரிப்பை வரவழைத்தாலும் லாஜிக்குகளை தலைகீழாகக் கட்டித்தொங்க விடுகிறார் இயக்குநர்.

இப்போது கதாநாயகி அஞ்சலி அறிமுகம். உடம்பில் ஒட்டுத்துணியில்லாமல் பார்த்த காரணத்திற்காக சுந்தர் சி. மேல் காதல் கொள்ளும் கதாபாத்திரம். தண்டனை முடிந்து சென்னை திரும்பும் நாயகன், மீண்டும் தனது ரௌடி வேலைகளில் இறங் குகிறார். முன்னாள் அமைச்சருக்கு (வில்லன் மணிவண்ணனுக்கு) எதிராக இருக்கும் நேர்மையான வக்கீல் விஜயகுமாரிடமிருந்து முக்கியமான ஆதாரம் ஒன்றைப் பறித்துத் தரும் வேலை இப்போது. கைகலப்பில் கம்பி குத்தி இறந்துபோகிறார் விஜயகுமார். அந்தக் குற்றவுணர்வு துரத்தும் சுந்தர் சிக்கு அறிவுக்கண் திறக்கிறது. வில்லனை மாட்டிவிட கிடைக்கும் ஆதாரங்களைக் கைக்கூலிகள் அழித்துவிட, அஹிம்சை வழியில் போராடி விஜயகுமாரின் லட்சி யத்தை நிறைவேற்றுவதுடன் நமக்குக் கிடைக்கிறது ரிலாக்ஸ்.





## முன்கதைச் சுருக்கம்

[illegible]

றோபோ குழாயடியில் இருந்தான். அது வேலைக்காரர்களுக்கான குளியலறை. அதன் கீழ் அவன் குந்தியிருந்தான். மளமள' வென நீர் சொரிகிறது. அதில் தலையை பிடித்துக் கொண்டிருந்த அவன் தன்னை மறந்தவொரு ஆனந்த நிலையில் இருந்தான். குளிப்பதுதான் எவ்வளவு சுகம் என்று நினைத்தானோ என்னவோ...!

கிளின்டன் அவனை வெறித்துக் கொண்டு நின்றான். அவன் நெஞ்சு இலை நெருப்பில் விழுந்தாற் போல் வேகிறது. ஓர் அருவருப்பான நீக்ரோ, என் அழகான மனைவியை முழுநிர்வாணமாக அனுபவித்து வந்து தன் உடலை கழுவிக் கொண்டிருக்கிறான். இந்த எண்ணம் மனதில் ஓடியதும் சகிக்க முடியாத மனவுளைச்சலில் அவன் உடல் முழுவதும் விதிர்விதிர்த்தது.

அவன் கையிலொன்று வேகமாக இடுப்பிலிருந்த துப்பாக்கியை தொட்டது.

சரே'லென அதை வெளியில் எடுத்து எத்தனை குண்டுகள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் தீரும் வரை இந்தப் பன்றிப் பயலை துவசம் செய்து விட வேண்டும் என்ற கொதிப்பு அவனுக்குள் கொழுந்து விட்டெரிந்தது.

ஆனால், மனதில் இன்னொரு குரல் அவனை எச்சரித்தது. அவனுடைய தகிப்பை முடக்கியது, கனலும் நெருப்பை அணைத்தது.

'கிளின்டன் அவசரப்படாதே' என்று அது முணு முணுத்தது.

''இதோ பார்! நீ அவசரக்காரன் அல்ல. சாமர்த்தியசாலி, புத்திக்கூர்மை படைத்தவன். இவனை நீ சாகடித்தால் அப்புறம் உன் திட்டம் எல்லாம் குருவிக் கூட்டத்தில் கல்லெறி விழுந்தாற்போல சிதறி கெட்டுப் போய்விடும். அவசரப்படாதே! மனசஞ்சலத்திற்கு இடம் கொடுக்காதே'' என்றெல்லாம் அவன் மனம் தொடர்ந்து எச்சரித்துக் கொண்டிருந்தது.

ஏனோ தெரியவில்லை. கிளின்டனுக்கு பெண்ணாசை என்பது கொஞ்சமும் இல்லை. அத்தகைய சபலமும் அவனுக்கு இல்லை.

ஆனால்-

களஞ்சிய அறைச் சுவரில் கண்ட ஆலிங்கன நிழலாட்டமும், இரு சர்ப்பங்களைப் போன்று அவர்கள் இரு வரும் ஒன்றாகப் பிணைந்து, நெளிந்து, உருண்டு ஈடுபட்டிருந்த சல்லாபமும் அவன் கண்களையும், கருத்தையும் விட்டு நீங்காமலிருந்தன. யாரோ என்று நினைக்க அவள் தன் ஆசைக்குரியவள் என்ற நினைப்பு அவனைத் தகித்தது.

'ஜீசஸ்! என்ன இப்படி?' என்று அவன் மனதில் இனம் புரியாத ஏக்கமும், துன்பமும் பிறந்தது.

திரும்பத் திரும்ப அந்த காட்சிகள் தோன்றி அலைக்கழித்தன. அவ்வ தோன்றத் தோன்ற துப்பாக்கியின் மீது படிந்து கிடந்த விரல் இறுகின, துடித்தன, அவன் ஒரு போதும் இல்லாதவாறு தன்னிலையை இழந்து விடும் சூழல் உருவானது.

சரே'லென கைத்துப் பாக்கி அவனுடைய இறுக்கமான கைவிரல்களுக்கிடையில் அழுத்திப் போய் டுமீல்! டுமீல்! என்ற ஓசைகளுடன் தீக்கனலைக் கக்கலாம்' என்ற நிலைமை எல்லை கடந்து கொண்டிருந்தது.

அப்போது -

சடா'ரென றோபோ எழுந்து நின்றான். கடகடகட'வென தலையை வேகமாக ஆட்டினான். அவன் தலையிலிருந்து சளசள'வென நீர்த்துளிகள் நான்கு புறமும் சிதறின.

குழாயை மூடினான். நனைந்து கிடந்த தனது உடலை ஒரு துணியால் துடைத்துக்கொள்ளவாரம்பித்தான். அவன் இடையில் சிறியதொரு துணித்துண்டையே கட்டியிருந்தான். அதை அவிழ்க்க நினைத்தானோ என்னவோ திரும்பிப் பார்த்தான்.

அதை ஊகித்துக் கொண்டுவிட்ட கிளின்டன் சட்'டென மறைந்து கொண்டான். எவரும் தென்படவில்லை என்று தீர்மானித்துக் கொண்ட றோபோ அதனை கழற்றிவிட்டு நிர்வாணமாகவே நின்றுகொண்டு உடலை துவட்டினான்.

அப்போது அவன் உடல் முழுவதையும் கிளின்டனால் காணமுடிந்தது.

இவன் மனிதனே அல்லன். மிருகம் அல்லது அரக்கன் என்ற பயம் கிளின்டனை ஆட்டம் போட வைத்தது.

'இருடா நாயே! செய்கிறேன் உனக்கு. அப்புறம் பார்ப்போம் நீ எப்படி ஆட்டம் போடுகிறாய் என்று' அவன் மனம் பொறாமையால் கதறியது. அவனுடைய புடைத்து நிற்கும் உறுப்புகள் கிளின்டனை பொறாமையால் கதறவைத்தன.

கிளின்டன் தான் நின்றுகொண்டிருந்த மறைவான இடத்திலிருந்து கொஞ்சம் விலகி நின்றான்.

''ஆம்ஸ்ரோங்! ஆம்ஸ்ரோங்!'' என்ற றோபோவின் உண்மையான பெயரைச் சொல்லி நேசபாவத்தோடு கூப்பிட்டான். அவனுடைய மென்மையான அழைப்போசை உடனடியாக பதிலைக் கொண்டு வந்தது.

''இயஸ் சேர்! ஐ எம் இயா''

றோபோதான் பேசினான். ஆள்தான் ஆஜானபாகுவாக இருக்கிறானே தவிர அவனுடைய குரல் கம்பீரமாக இல்லை. கரகரப்பாகக் கம்மிப்போய் கிடந்தது.

''என்ன செய்கிறாய்?''

''குளிக்கிறேன் சார்!''

''என்ன உன் வேலை முடிந்துவிட்டது என்று யார்? சொன்னார்கள். இங்கே உனக்கொரு வேலை இருக்கிறது.!'' அவன் ஈரஉடம்புடன் தலையை சொறிந்து கொண்டு வந்து முன்னால் நின்றான்.''

கிளின்டன் சிரித்தான். ஆனால், அவன் கண்களில் வஞ்சகம் இழையோடியது.

''சரி சரி பரவாயில்லை. கூடவே வா'' றோபோ கிளின்டனை பின் தொடர்ந்தான். றோபோ மிகவும் பாசாங்குக்காரனாக இருக்கக் கூடும். இந்த பிள்ளையும் பால் குடிக்குமா என்ற ரீதியிலிருந்த அவன் உடைமாற்றிக்கொண்டு கிளின்டனை பின் தொடர்ந்தான்.

கிளின்டன் தனது படுக்கை அறையில் முன்பாக வந்து நின்றான். திரும்பி றோபோவைப் பார்த்தான். றோபோவின் முகத்தில் சலனம் எதுவும் இல்லை. அவன் உண்மையிலே ஒரு றோபோவோ தெரியவில்லை. அவன் நடை, பேச்சு, அசைவு, செயல் அனைத்துமே அதைவொத்ததாகவாகவே இருந்தன.

கிளின்டனுக்கு அவனை புரிந்து கொள்வதே கடினமாக இருந்தது. என்றாலும் எந்த விதமான சலனத்திற்கும் இடம் கொடுக்க அவன் தயாராக இல்லை. தான் செய்துவிட்ட கொலையிலிருந்து தப்புவதற்கும் அதே நேரம் தனது இமேஜை காப்பாற்றிக் கொள்வதிலும், றோபோவை தந்திரமாக பழி வாங்குவதிலும் அவன் குறியாக இருந்து தனது வஞ்சகமான திட்டத்தை செயல்படுத்துவதில் முழுக் கவனத்தையும் பதித்துக் கொண்டிருந்தான்.

கிளின்டன் தன் அறைக்கதவைத் திறந்தான்.

''றோபோ! உள்ளே வா''

அவன் கொஞ்சம் தயங்கினான். வாசல் அருகில் வந்து கண்களை அங்குமிங்கும் சுழற்றினான்.

புளோராவை அவை தேடியிருக்கக் கூடும். அவள் இல்லை. நெற்றியில் ஆழமான யோசனைக் கோடுகள் பதிந்தன.

'புளோரா எங்கே?'

அவன் மனதில் ஒரு குரல் பலமாக ஒலித்தது. அவளுக்கு ஏதும் ஆபத்தா, அனர்த்தம் ஏதும் ஏற்பட்டுவிட்டதா. ஓ! அவனும் மனிதன்தான் போலும். ஏனென்றால், அவன் மனம் 'திக் திக் திக்' கென சிறகொடிந்த பட்சியாக அடித்துக் கொள்கிறது.

கிளின்டன் ஒரு பெட்டியை சுட்டிக்காட்டினான்.

''றோபோ! இந்த பெட்டியை தூக்கிக் கொண்டு போய் வீட்டின் பின்னால் ஒரு வண்டி இருக்கிறது. அதில் வை.'' என்றான்.


றோபோ ஒரு மோப்ப நாய் மாதிரி அந்த பெட்டியை வெறித்துப் பார்த்தான்.


அதில் ஒரு பூட்டு தொங்கு கிறது. அதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அவன் வேகமாக அருகில் சென்று அதை இழுத்து ஆட்டிப் பார்த்தான்.

இதை கொஞ்சமும் எதிர்பார்க்காத கிளின்டன் வெல வெலத்துப் போனான். இந்த பன்றிப் பயலுக்கு என் மீது சந்தேகம் வந்துவிட்டதாவென அவனுடைய கைகால்கள் நடுங்கத் தொடங்கின. பூட்டை உடைத்து பெட்டியை அவன் திறந்து, அதற்குள் புளோராவின் சடலம் கிடப்பதைக் கண்டு கூச்சல் போட்டு ரகளை பண்ணிவிட்டால் பெரிய அனர்த்தமாகி விடுமே. கிளின்டனின் திட்டங்கள் தவிடுபொடியாகி விடுமே!

அப்போது...

(தொடரும்)





18. வானொலி: காது எனின், பத்திரிகை: ........................

1) எழுத்து 2) வாசித்தல் 3) கண்

குறியீட்டுக் கோவையைப் பார்த்து விடை தருக.


7 # 5 = 3 * 4

19. குறியீடு # குறிப்பது
1) கூட்டல் 2) கழித்தல் 3) பெருக்கல்

20. குறியீடு * குறிப்பது
1) கழித்தல் 2) பெருக்கல் 3) வகுத்தல்


21ஆம், 22ஆம் வினாக்களில் X எனும் இடத்தில் வரவேண்டிய பெறுமானத்தைத் தெரிவுசெய்க.

21.





1) 43 2) 51 3) 39

22.




1) 49 2) 81 3) 64

தரப்பட்டுள்ள வரிப்படத்தின்படி




23. உதைபந்தையும் மேசைப்பந்தையும் மட்டும் விளையாட விரும்புவோர் எத்தனை பேர்?
1) 12 2) 8 3) 7


24. மூன்று விளையாட்டுக்களையும் விளையாட விரும்புவோர் எத்தனை பேர்?
1) 5 2) 12 3) 7

25. வீதியில் மரங்கள் நடுவதற்கு குழிகள் வெட்டப்பட்டன. இரு குழிகளுக்கு இடைப்பட்ட தூரம் 20 மீற்றர் எனின், 1 கிலோமீற்றர் தூரத்திற்கு மரங்கள் நடுவதற்கு எத்தனை குழிகள் வெட்டவேண்டும்?
1) 72 2) 51 3) 47

26. செவ்வகம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 8 சென்ரிமீற்றர் ஆகும். அதன் பரப்பளவு 40 சதுரசென்ரிமீற்றர் எனின், அவ் உருவின் சுற்றளவு யாது?
1) 20 cm 2) 13 cm 3) 26 cm

27. மதில் ஒன்று கட்டுவதற்கு 12 மனிதர்களுக்கு 5 நாட்கள் எடுத்தது எனின், அவ் மதிலை 10 மனிதர்கள் கட்டி முடிக்கத் தேவையான நாட்கள் எத்தனை?
1) 5 நாட்கள் 2) 6 நாட்கள் 3) 8 நாட்கள்


28.





செவ்வகம் A யில் இருந்து வெட்டி எடுக்கக்கூடிய B சதுரங்களின் எண்ணிக்கை எத்தனை?
1) 10 2) 15 3) 20

29ஆம், 30ஆம் வினாக்களுக்கு சதுர வடிவான கடதாசியை நான்காக மடித்து வெட்டியபின் அதைத் திரும்ப விரித்தால் அதன் சரியான தோற்றத்தைக் காட்டும் உரு எது?

29.




30.





31. காலைப் பிரார்த்தனையின்போது வரிசையில் நின்ற மாணவர்களில் நிமலன் முன்னால் இருந்து பார்க்கும்போது மூன்றாவதாகவும், பின்னால் இருந்து பார்க்கும்போது எட்டாவதாகவும் நின்றிருந்தான் எனின், வரிசையில் நின்றிருந்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 11 2) 10 3) 9

32. ஒரு வரிசையில் பச்சை, நீலம், சிவப்பு, மஞ்சள் எனும் நிறக்கொடிகள் மாறி, மாறி நடப்பட்டிருந்தன. எனின், அவ்வரிசையில் 43 ஆவதாக நடப்பட்டிருந்த கொடியின் நிறம் யாது?
1) மஞ்சள் 2) நீலம் 3) சிவப்பு


33. மாலை ஒன்றில் முதல் இரண்டும் வெள்ளை நிறப் பூக்களும், அடுத்த மூன்றும் சிவப்புநிறப் பூக்களும், அடுத்தது மஞ்சள் நிறப் பூவும் என மாறிமாறித் தொடுக்கப்பட்டிருந்தன. எனின், 78 ஆவதாக அமையும் பூவின் நிறம் யாது?
1) மஞ்சள் 2) சிவப்பு 3) வெள்ளை

34. கபிலனின் மாதவருமானம் 14,000 ரூபா ஆகும். அதில் 1/4 பகுதியை உணவுக்காகவும் மீதியைச் சேமிப்பிலும் இட்டான். சேமிப்பில் இட்ட தொகையின் 3/4 பங்கை எடுத்து துவிச்சக்கர வண்டி ஒன்றை வாங்கினான் எனின், துவிச்சக்கர வண்டியின் விலை யாது?
1) ரூ. 10,500 2) ரூ. 7,875 3) ரூ. 3,500

35. உரு Aயில் உள்ள தராசில் இரு பக்கங்களிலும் வைக்கப்பட்டுள்ள நிறைகள் சமனானவை ஆகும்.





உரு B யில் உள்ள தராசின் நிறை சமனாவதற்கு, நிறை குறைந்த பக்கத்திற்குச் சேர்க்க வேண்டிய உருவங்கள் எவை?





36ஆம், 37ஆம் வினாக்களுக்கு விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

36.



இவ் உருவிலுள்ள கனவுருக் கட்டைகள் எத்தனை? ........................

37.





8 4     6 5

32 44     30 A

........................

38.






39. வகுப்பில் கபிலனை விட நிசார் உயரமானவன். அகிலன் கபிலனை விட உயரம் குறைந்தவன். ஆனால், வசந்தை விட உயரமானவன் எனின், வகுப்பில் உள்ள நால்வரிலும் உயரம் கூடியவர், குறைந்தவர் யாவர்?
1) நிசார்-வசந் 2) நிசார்-அகிலன் 3) கபிலன்-வசந்

40. இக் கடிகாரம் 10 நிமிடங்கள் முந்தி ஓடுகிறது. இக் கடிகாரம் காட்டும் நேரத்தில் வீட்டில் இருந்து புறப்பட்ட மாணவன் 20 நிமிடங்களின் பின் பாடசாலையை அடைகிறான் எனில், அவன் பாடசாலையை சென்றடைந்த சரியான நேரம் யாது?



1) 7.35 2) 7.25 3) 7.30

**தரம் - 05** மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்துவதற்காக வெளியிடப்படும்

## விசேட மாதிரிவினாத்தாள் - 06


ஆசிரியர்:- திரு. எஸ். தீபன்

( புத்தோட்டம் மகாவித்தியாலயம், வவுனியா. )

# கவிதைப்புனல்

## இது என்ன கோலம்?

போட்டி பொறாமை பகைமைகள்
பொல்லா மமதைத் தந்திரங்கள்
கூட்டிக் கொடுத்துக் கோள்முட்டி
கூட விருந்து குழிபறித்து
காட்டிக் கொடுத்து சதிவலையில்
கனமும் வீழ்த்தும் புல்லருரை
கேட்டுச் சிந்தை சுமக்கின்ற
மனிதா இதுயென் கோலமிது?

அடுத்தவன் குறையை அறிந்திங்கு
அறிவிலக் கதைகள் புனைந்திடுவான்
கெடுக்கும் வழியைச் சொல்லியவன்
கெட்டா லொதுக்கி வைத்திடுவான்
ஒடுக்கிக் கெடுக்கும் வழிமூலம்
ஒதுக்கும் அவனின் உரைக்கு நீ
மடுத்து செவியும் பழியேற்கும்
மனிதா இதுயென் கோலமிது?

உறவை யொதுக்கி நல்லோரை
உதவா மனுவாய் நிலைப்படுத்தி
திறமை யோர்க்குக் குழிபறிப்பான்
திறமை இலாரை ஏத்திடுவான்
சிறந்த சேவை புரிவோரை
சிறுமை அவரை யொதுக்குமவன்
அறநெறி வீழ்த்தும் வழிநம்பும்
மனிதா இதுயென் கோலமிது?

இத்தரை மீதி லநியாயம்
இஷ்டமாகப் புரிந்தோர்கள்
சித்தங் கலங்கி சமூகத்தால்
சிறுமை யோராய் சீல்வைத்தும்
சத்தியப் பாதை தெரியாமல்
சறுக்கி விழுந்தும் மறைந்திட்டார்
நித்த மிதனை யெண்ணியினி
நிம்மதி வாழ்வைத் தேடிடுவாய்!

மருதூர் ஜமால்தீன்

## எங்களூர் ஓடை

மலை யிறங்கி வரும்ஓடை
கலை யாக ஓடும் - வான்
மழை பெய்யப் புனல்பொங்கி
அலை பாய ஓடும்

விளை நிலம் முளைகொள்ள
நிலைகொண்டு ஓடும் - அதில்
உழைக்கின்ற உழவர் மனம்
தழைத் தோங்க ஓடும்

மலை களுக் கிடை யிலே
சளைக் காமல் ஓடும் - அது
வலை வீசி மீன் பிடிக்க
வள மாக ஓடும்

துணி துவைக்க வனி தை யர்
துறை தொட்டு ஓடும் - கரை
அணி கொண்ட மரங் களுக்கு
பணி செய்து ஓடும்

அணை கட்டும் அளவிற்கு
சுனை கொண்டு ஓடும் - தீ
வினை யேதும் செய் யாமல்
துணை செய்து ஓடும்

நிரை யாக மீன் ஓட
விரை வாக ஓடும் - வெண்
நுரை கொண்டு வரும் ஓடை
கரை கண்டு ஓடும்

திரை யேதும் இல்லா மல்
முறை கெட்டு ஓடும் - உடை
அரை குறை மனித ரின்
- கறை தொட்டு ஓடும்

மதி வானில் உதித் திட
கதி யாக ஓடும் - வனி
துதி பாடும் இசை கேட்டு
சுதி கொண்டு ஓடும்

தணல் போல கொதிக் கின்ற
மணல் ஊடே ஓடும் - நம்
அனல் கக்கும் உடல் தணிய
மனம் கொண்டு ஓடும்

சிங்கார நடை கொண்டு
மங் காது ஓடும் - அது
எங்க ளூர் ஓடையன்றோ
எந் நாளும் ஓடும்!

■ உதிசர் - மாவனல்லை.

## தலைவரின் பணிகள்

மனைவீடா? நிலைவீடா? இரண்டு மொன்று
மனம்விட்டா? இன்னைமனங் கொண்டே யானும்
குழுமமாக்கக் குழுவமைத்து "இறுதி மட்டும்
குறைவில்லா பணிகள் பல செய்வீ" ரென்பேன்!
பணம் வேண்டாம்; புகழ்வேண்டாம்; மக்கள் தொண்டு
பறந்திடுவேன்; கொட்டகைக்குத் தளபாடங்கள்
இணங்கவைத்து துறைமனை வாங்கி 'ட்ரக்கில்'
ஏற்றியிங்கு அனுப்பிவைப்பேன்; தொடருஞ் சேவை!

தொழிலாளர் கோரிக்கை, குறைகள் மற்றும்
தேவைகளைக் கேட்டறிவேன்; முறையாய்ப் பின்னர்
வழிகாண எழுதிடுவேன் கொப்பி யொன்றில்
வந்துவிடும் பேச்சுத்தினம்; செல்வேன் ஆங்கு
விழிப்போடு நிருவாகி இருப்பார்; பக்கம்
வீற்றிருப்பார் பெரியகிளார்க்; அவரோ கொஞ்சம்
கழிப்போடு கணைப்பார்; முறைப்பு ஏனோ
சம்மதிப்புக் 'கொப்பி'யுந்தான் ஆங்கு தானே!

வாசிப்பார் பெரிய 'கிளார்க்'; பின்னைநன்னார்
வாய்விட்டு மொழிபெயர்ப்பார்; என்ன சத்தம்!?
யோசிப்பார் நிருவாகி; மடக்கு தற்கோ
யாரறிவார்? கேள்விக்கணைத் தொடுப்பார்; யானோ
கூசாமல் பதிலளிப்பேன்; விளக்கஞ் சொல்வேன்
"குறைநிவர்த்தி; கோரிக்கை பூர்த்தி" என்பார்
பேசாமல் திரும்பிடுவேன்; வாக்கை அன்னார்
பெருமனதாய் நிறைவேற்றி வருவார் தானே!

இழுத்தடிப்பு, கழுத்தறுப்பு இருக்கு மாகில்
இங்கிருந்து மாவட்டப் பணிமனைக்கே
எழுந்துகாலை விரைந்திடுவேன்; குறைவுக் கூட்டம்
இருந்திடுவார் பிரதிநிதி; எல்லாஞ் சொல்வேன்
எழுத்துமூலம் தொடர்புகொள்வார்; திருப்தி இன்றேல்
எழுந்துவிடும் பேச்சுவார்த்தை; பலிக்கா விட்டால்
அழுத்தந்திருத்த வடிக்கை; திருத்தும் வேலை
அடிப்பணியும் நிருவாகம்; இல்லை தோல்வி!

(தொடரும்)

■ கவிஞர் எரி.எஸ். காந்தி.

## மதலைக்கு ஒரு தாலாட்டு



பொதிகை மலைத் தோன்றி சங்கத் தமிழுடன் கூடி
தரணியில் தவழ்ந்த மதலைக்கு ஒரு தாலாட்டு
பொன்னே பொன்மணியே பொன்னொளிப் பூவே!
கண்ணே கண்மணியே கற்கண்டே கண்ணுறங்கு

வைகையாம் பொய்கை நீ பிறந்த மண்ணாம்
வையகம் எங்கும் தன்னொளி வீசும் பைந்தமிழாம்
தேன்மதுரத் தாலாட்டில் கண்ணே நீ உறங்கையா
தேவியர்களின் வாய்ப்பாட்டில் நீ மயங்கையா

தங்கத் தமிழ் பேசும் தண்டமிழ் நாட்டில்
தவழ்ந்த செந்தமிழ் தேனே தமிழே கண்ணுறங்கு
தன்னொளி பரப்பும் தித்திக்கும் தீந்தமிழே!
தாயகயின் தாலாட்டில் கண்ணே கண்ணுறங்கு

■ திருமதி எம். ஆர். பாலேந்திரா, கொச்சிக்கடை.

## மறுபிறவி உண்டென்றால்...

தினம்பத்து என்றனையே திருப்தி செய்து
திரும்பிவிட்டாய் கடமைக்காய் சொந்த ஊர்க்கே!
மனம்தூங்கு தில்லையடி; பசியே யில்லை!
மயிலேயுன் நினைவேதான் நிசியில் கூட!
வனத்திடையே முனிவனெனத் தனித்தே யிங்கு
வாழுகிறேன்! நீயில்லை வசந்த மில்லை!
குணக்குன்றே மோகனமே! நித்தம் நித்தம்
கோடியென மீண்டுமெப்போ தருவாய் முத்தம்?

தொடர்புறவே பகைநடவை முயற்சி செய்தேன்
தொலைபேசி வசதியிங்கு சீராய் இல்லை!
கடவுளையும் நோகின்றேன் கண்ணே உந்தன்
கதைகேளா நிலையாலே தீராத் தொல்லை!
கோடையுடன் மாரியெனும் பருவ காலம்
குமரித், இளைஞன்யான் இளமைக் கோலம்!
வாடைவந்தும் தீண்டாத படியே நானும்
வஞ்சியுனைக் கைச்சிறையில் வரித்துக் கொள்வேன்!

"பிள்ளைகளின் பிள்ளைகளும் வளர்ந்து விட்டார்
பேராசை இனிவேண்டாம்!" என்றென் ஆசை
கிள்ளிவிட முனைந்தாயே! கிளியே நானும்
கிழப்பருவம் அடையவில்லை உளத்தா லின்னும்!
"தள்ளியே தூங்குங்கள்" என்றே சொல்லித்
தனித்தனியாய் பாய்போட்ட சரித்திரத்தைக்
கள்ளியே கற்பனையில் கவிதை யாக்கிக்
கடிதமென அனுப்புகிறேன்; படித்துப் பார்!

வருத்தமென்று எழுதிவைத்த அஞ்சல் அஃது
வருத்தத்தோடிங்கிருந்த எனக்கு மேலும்
வருத்தத்தைத் தந்தடி; என்ன செய்வேன்?
வந்துனையும் பார்த்திடவே முடியா வண்ணம்,
தெருச்சோறி நாய் போலிங்கு அங்கு மிங்கும்
திரிகின்றேன்; அலைகின்றேன்! தேற்றுதற்கு
ஒருத்தருமே இங்கில்லை உயிரே "மீண்டும்
ஒருபிறவி உண்டென்றால் இணைவோம் கண்ணே!"

■ கவிஞர் அ. கௌரிதாசன்

## துயரின் எல்லை

எங்கள் வயல்களில் இப்போ தெங்கும்
இராணுவக் காலணித் தடங்கள்
எங்கள் கடலின் தெளிவில் எங்கும்
கடற்படை யினரின் முகங்கள்

மீனவர் பேச்சின் இனிய ஒலியை
மீன்கள் கேட்டு நாளாச்சு
ஏருழும் தடங்கள் பரவை விசை
எங்கள் வயல்கள் மறந்தாச்சு

மரணம் வீட்டைத் தேடி வருமென
மனதுக்குள் தினம்தினம் மரணம்
உறவும் பிரிவும் இயல்பே எனினும்
கணத்துக்குக் கணம் அதன் கோரம்

தெருவில் இறங்கிச் செல்லும் போதிலும்
அர்த்தம் இல்லாக் கேள்விகள்
உருட்டி மிரட்டும் பார்வைக ளாலே
உயிரை வதைக்கும் காக்கிகள்

குழந்தைகள் கூட இறப்பை நினைக்கும்
கோர வாழ்க்கையின் கமைகள்
கிழங்கள் கூட துவக்கு முனையால்
உயிரைத் துறக்கும் துயர்கள்

பிறந்த தினங்கள்தான் வாழ்வின் நோம்நாம்
பெரிதாய் எதுவும் இல்லை
மறந்தும் இனிமேல் உலகில் பிறவோம்
போதும் துயரின் எல்லை

■ க. கோணேஸ்வரன் திருமலை

## இத்தரையின் இதிகாசம்?

பொய்கையில் மலருங் காதற்
பூம்புனல் தன்னில் ஏகி - தன்
மெய்யிலே நிகர்த்த அன்பை
மேவிடச் சித்தங் கொள்ளும்।

கோகிலம் பொழியும் பண்ணின்
குளிரிசை கொய்யுங் காலை
அகிலத்து மாந்தர் தம்மை - இனி
அன்புற வாடச் செயும்।

மயிலருங் கலையை ஒக்கும்
மாசிலா நடத்தை மேகம்
துயில்களைந் தெழுந்து ஆங்கே - மழைத்
துளிகளாய் மண்ணைச் சேரும்।

குறிஞ்சியின் குன்றி லெங்கும் - தேயிலை
கொழுந்தினைக் கொய்தல் வேண்டி
அரிவையர் புடைகள் சூழும் - நல்
அனந்தரம் எழிலை விஞ்சும்।

**வேறு**

தங்கமணிக் கதிர்வளைந்து தரைதழுவும் - மனந்
தாங்கொண்ணா காட்சியுற்றே உழவரினம்।
பொங்கவரும் தையிடையாள் புகழை மெச்சி
பொன்னாரந் தனைச்சூடி வாழ்த்தொலிக்கும்।

கயற்கனிகை யார்தமது கீதாஞ்சலியிற் - மிகக்
களிப்புற்ற அருணனவன் விழித்தெழுந்தான்।
இயற்கையுதன் விருந்தோம்பல் கொலுவமர்ந்த - நம்
இத்தரையாள் நிமலனவன் கடாட்சம் பெற்றாள்।

■ [illegible]

## புதுமைப் பெண்ணே! வாராயோ...?

நாணம் என்னும் வேலிகொண்டு
நாள் முழுதும் ஏங்கி நிற்கும்
காரிகையே! உன் விலங்கொடிக்க
வீறு கொண்டு வருவாயோ!

வீடு பெருக்கி, கரிகழுவி, விறகடுக்கி
நீ புட்டவிக்க பிறந்தவளோ?
ஆண்மகனின் எச்சிலுண்ணும் மரபழிக்க
வீறு கொண்டு வருவாயோ!

உயிரணுவே இல்லாத ஒரு துளிக்கு
ஒரு கோடி கேட்கின்ற பேடியவன்...
விதை நசுக்கி உயிரெடுப்போம்
வீறு கொண்டு வருவாயோ!

கூட்டத்தில் கூடி நின்று
நங்கையவள் கொங்கை கிள்ளும்
காமுகனின் சங்கறுப்போம்
வீறு கொண்டு வருவாயோ!

நிலவு என்று சொல்லி உன்னை
நிர்வாணம் ஆக்கிடுவார்
பாதகரின் குணமுரைப்பேன்
நான் பாரதியின் பேரனடி!

■ [illegible]

## காத்திரு! கனவு நிறைவேறும்!

பத்துமாதம் சுமந்து பாசமுடன் சீராட்டி
உதிரத்தைப் பாலாக்கி தன்னுயிரை எனக்களித்த
பெற்றவளோ உனை வணங்குகிறேன் கைகூப்பி
பள்ளிசெல்லும் வேளையிலே முத்தமிட்டு எனையனுப்பி
காத்திருப்பாய் எனைக் காண விழியிரண்டும் பூத்திருக்கும்
உன்மகள் சூரி என்று ஊரெல்லாம் போற்றும் நாள்
தொலைவிலில்லை வெகுவிரைவில்
உன் காதோரம் கவிபாடும்
அதுவரையில் காத்திரு உன்கனவு நிறைவேறும்

■ என். சரிகா, கனகராயன்குளம்.

# குடும்பக் கோஷ்டி மோதலால் தடுமாறும் தமிழக முதல்வர்!

தமிழக அரசியல் என்றுமில்லாதவாறு தற்போது சூடுபிடித்துள்ளது.

மத்தியில் இந்திரா காங்கிரஸ் ஆட்சி அணுசக்தி ஒப்பந்தத்தினால் அணுஅணுவாக ஆட்டம் கண்டு வரும் வேளையில் அதைத் தூக்கி நிறுத்துவதற்காகக் கலைஞர் கருணாநிதி அடிக்கடி டெல்லி சென்று வருகின்றார்.

பாரதீய ஜனதா கட்சி ஏற்கனவே கர்நாடகாவில் ஆட்சியைப் பிடித்துவிட்ட சந்தோஷத்தில் அடுத்த பொதுத் தேர்தலுக்குத் தயாராகி வருகின்றது.

ஜெயலலிதா மதில்மேல் பூனையாக இன்னமும் சரியான முடிவெதுவும் எடுக்காமல் அமைதியாகவே அனைத்தையும் அவதானித்து வருகின்றார். ஆனால், சசிகலா கூட்டத்துடன் அவர் தொடர்புகளை வைத்திருக்கும் வரை அவருக்கு எதிர்காலமேயில்லை

கருணாநிதியுடன் மறுபடியும் இணைவதை உண்மையிலேயே விரும்பவில்லை.

எனவே, பலமுறை தன்னுடைய அரசியல் வாரிசாக மு.க. ஸ்டாலினை கருணாநிதி அறிவிக்க முயன்ற போதிலும் அது வாரிசுகளிடையே பலத்த பிரச்சினைகளை உண்டாக்கி விடுமென்ற பயத்தில் அவர் மௌனம் சாதிக்கத் தொடங்கினார். இறக்கும் வரை தானே முதலமைச்சர் தனக்குப் பின் நடப்பது நடக்கட்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டுவரும் கருணாநிதியின் உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படுவது இவ்வாறான குடும்ப பிரச்சினைகளால்தான் என்பது நிதர்சனமான உண்மை. அதிலும் இவ்வளவு நாள் மௌனமாக சகலவற்றையும் அவதானித்து வந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாஇப்போது தி.மு.க. மேல் அடுக்கடுக்காக ஊழல்



யென்றுதான் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மேலும் முன்னர் கருணாநிதியை மட்டுமே களத்தில் சந்தித்து வந்த ஜெயலலிதா தற்போது வேகமாக வளர்ந்துவரும் விஜயகாந்த் மற்றும் சரத்குமாரையும் சமாளிக்கவேண்டிய இக்கட்டான நிலையில் இருக்கிறார்.

இது இப்படியிருக்க, கருணாநிதிக்கு இப்போது வயது 85 ஆகிவிட்டது. அவரால் அதிக சுமைகளைத் தாங்க முடியாத நிலை யேற்பட்டுள்ளமை யினால் தன்னுடைய வாரிசை உடனடியாக அறிவிக்கவேண்டிய நிலையிலிருக்கிறார். ஆனால், குடும்பத்தில் ஏற்பட்டுள்ள உட்பூசல், கோஷ்டி மோதல்கள் அவரை நிலைகுலைய வைத்துள்ளன. கருணாநிதியின் அரசியல் வாரிசாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவர் மு.க.ஸ்டாலின். தந்தையுடன் பல்வேறு போராட்டங்களில் கலந்து சிறைசென்று பக்குவப்பட்டவர்தான் மு.க.ஸ்டாலின். அரசியலில் நல்ல தேர்ச்சி பெற்றவரும் கூட. ஆனால் கருணாநிதியின் மற்றொரு மகனான மதுரை மு.க. அழகிரிக்கு, மு.க.ஸ்டாலின் அடுத்த முதல்வராக வருவதில் உடன்பாடு இல்லை. மதுரை நகரைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் மு.க.அழகிரி, கொலைக்குற்றச்சாட்டு சம்பந்தமாக அண்மையில் நிரபராதியென விடுதலையானதுடன் சென்னைக்கு வந்து தன் தந்தை கருணாநிதியையும் சந்தித்த விடயம் தி.மு.க. மத்தியில் பரபரப்பாகப் பேசப்பட்டது. ஏனென்றால், சற்று நீண்டகாலமாக அவர் மதுரையிலேயே ஒதுங்கியிருந்தார். கருணாநிதியின் மகளும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழிக்கும் மு.க.அழகிரிக்கும் குடும்ப உறவில் நல்ல நெருக்கம் இருந்தது. அவர்கள் கிட்டத்தட்ட தனியானதொரு குழுவாகவே இயங்கினார்கள். மேலும் 'சன்'ரிவிக்காரர்களான தயாநிதி மாறன், கலாநிதி மாறன் போன்றவர்கள் அழகிரிக்கு சிம்மசொப்பனமாக இருந்தமையினால் அவர்கள்

குற்றங்களைச் சுமத்தி வருகின்றார். மு.க.அழகிரிக்கு எதிராகக் கூட அண்மையில் அவர் சொந்தத்தில் கேபிள் ரி.வி.ஆரம்பித்ததில் ஊழல் இடம் பெற்றுள்ளதாகவும் ஆதாரத்துடன் கூறிவருகின்றார் ஜெயலலிதா. ஏற்கனவே, தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ரி.கே.பாலுவும் ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டார் என அவர் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பாலா சங்குபிள்ளை**

அரசியல் நடவடிக்கைகள் இவ்வாறு அமைந்திருக்க மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் சொத்து விவகாரத்தை ஒட்டி எம்.ஜி.ஆரின் மனைவி அமரர் வி.என்.ஜானகியின் தம்பி விஜயன் படுகொலை செய்யப்பட்டமை தமிழ்நாட்டில் எம்.ஜி.ஆர். ரசிகர்களின் மத்தியில் பதற்றத்தையும் கொந்தளிப் பையும் ஏற்படுத்திவிட்டது.

எம்.ஜி.ஆர். தன்னுடைய சொத்துகளை ஏழை எளியவர்களின் பயன்பாட்டுக்காகவே விட்டுச் சென்றார். ஆனால், அவற்றைப் பங்குபோட்டுக்கொண்ட உறவினர்கள் அதில் வருமானம் சம்பாதிக்கவே பார்த்தனர். இதைப் பொறுக்காது கேள்விகேட்ட விஜயன் கொடூரமாகத் தாக்கி கொல்லப்பட்டார் எனத் தமிழக செய்திகள் கூறுகின்றன.

உண்மையிலேயே மறைந்த மாமனிதர் எம்.ஜி.ஆர்.தான் உயிரோடு இருந்தபோதும் மறைந்த பின்னும் ஏழை எளியவர்களின் நலனுக்காகவே பாடுபட்டார். அவர் பட்ட பாட்டுக்குப் பலன் கிடைக்காமல் போனமை மிக வேதனையான விடயம். திரையுல கிலும் தமிழக அரசியலிலும் சாதனை கள் பல படைத்த எம்.ஜி.ஆரின் மேல் இன்னமும் பேரபிமானம் வைத்துள்ள அவரின் ரசிகர்களுக்கு நிச்சயமாக முன் மாதிரியாக இருப்பார் என்று ஜெயலலிதாவை மக்கள் முதலமைச்ச ராகப் பதவியில் இருக்கவைத்தார்கள். ஆனால், 'அம்மா' சும்மா படம் மட்டும் காட்டி வருவதால், இப்போது பப்படமாகி விட்டார் என எம்.ஜி.ஆர். ரசிகர்கள் ஏளனம் செய்கிறார்கள்.




"அதோ!"

பூமியிலிருந்து பிரயாணப்பட்டு 300 நாட்கள், 3 மணி, 2 நிமிஷம், 8 செகண்ட். அப்போது தான் அந்தக் கிரகத்தின் பிரதம தரிசனம் கிடைத்தது. திரையில் ஒரஞ்ச் வர்ணப் பரப்பு துல்லியமாகத் தெரிந்தது.

ஆத்மாவுக்கு உற்சாகம் பீறிட்டது. அப்பாடா, பிரயாண இறுதியின் ஆரம்பம்! இறங்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இத்தனை தினங்கள் சகயாத்ரியுடன் சிறிய விண்கலத்தில் பொறுமையின் எல்லைகளைத் தொட்டுத் தொட்டு ஏறக்குறையப் பைத்தியம் பிடித்து, வைராக்கியம் ஒன்றே வழித்துணை மனித இனத்தின் ஆர்வம் ஒன்றே உந்து சக்தியாக நாள்களைத் துறந்து, வீடு, பிறந்த மண், தேசம், கிரகம் அனைத்தையும்விட்டு வந்து, விண்வெளி வெல்வெட் இருட்டில் கண்டுபிடித்த அம்பர் முத்து. "அதோ" அஸ்ட்ரா 18.

ஆத்மா சகயாத்ரியின் கையைக் குலுக்க நினைத்தான். இன்னும் இல்லை! ஆகவேண்டிய காரியங்கள் நிறைய


உயிர் இருப்பதாக நம்பப்படுகிற அஸ்ட்ரா 18 இதோ!

அவர்கள் எப்படி இருப்பார்கள்?

கண்டுபிடிக்கலாம். முதலில் இறங்கலாம். விண்கலம் தாழ்வாகப் பறக்க அந்த வடிவங்கள் இப்போது தெளிவாகவே தெரிந்தன. ஒரே மாதிரி நீண்ட சதுரப் பட்டகங்கள் ஈட்டிக்குத்துகள் போல ஆங்காங்கே. வாகனங்கள் ஏதும் இல்லை. சாலைகள் தெரியவில்லை. சலனம் ஏதும் இல்லை. ஒரஞ்ச் நிறம் எங்கும் விரவியிருந்தது. எல்லாரும் அந்தக் கட்டடங்களுக்கு உள்ளே இருக்கிறார்களா? இப்போது எதையும் சிந்திக்காதே! இறங்கும் வழியைப் பார். அப்புறம் சிந்தி. சந்தி.

"தலை வாரிவிடப்பட்ட முள்ளம்பன்றி போல் இருக்கிறது." என்றான் ராஜன். "சமதளம் ஒன்றையும் காணோம்."

அருகே அருகே இப்போது ஏறக்குறைய மிதக்கிற கதிக்கு வந்துவிட்டது. ஏகப்பட்ட சக்தி செலவாகும். ஆத்மா கலவரத்துடன் எரிபொருள் நிலைமையைக்



இருக்கின்றன. இனிமேல்தான் செயல். இதுவரை சும்மா, கம்ப்யூட்டர் செலுத்திய கலத்தில் உட்கார்ந்து உட்கார்ந்து அலுத்தோம். இப்போதுதான் இந்த இறுதிக் கட்டத்தில்தான் மனித மூளை தேவை. அஸ்ட்ரா 18 என்னும் புதிய பூமியில் கால்வைப்பதற்கு.

மறுபடி பார்த்தான். கண்ணைப் பறிக்கும் ஆனந்த ஆரவார ஒரஞ்ச் நிறம். வெளிச்ச உக்கிரத்தில் இரத்தச் சிவப்பில் நிழல்கள். என்ன என்னவோ வினோத விரல்கள் போல அவை என்ன கட்டடங்களோ? நில அமைப்பா? பார்க்கலாம். அவசரப்படாதே. ஒவ்வொன்றாகக் கவனிக்கலாம்.

அஸ்ட்ராவின் இரண்டு சூரியன்களும் கீழ்வானத்தின் கரு நீலத்தில் கோப வைரங்களாகப் பதிந்திருந்தன.

"ஒக்ஸிஜன் இருக்கா முதலில் பார்க்கணும்" என்றான் ராஜன்.

"முதலில் தாழ்வாகப் பறந்து ஒரு வெள்ளோட்டம் பார்த்துரலாம். இறங்க சமதளம் வேணும்."

"டீஸலரேட்?" என்றான் ராஜன்.

"ம்!"

ராஜன் கம்ப்யூட்டர் ஞாபகத்தில் வேகக் குறைப்பை அமைக்க, சிக்கலான ரொக்கெட் இயக்கத்தின் எதிர்ப்புச் சக்திகள் ஆத்மாவின் வயிற்றைக் கவ்வின. மெல்ல மெல்ல அஸ்ட்ரா அவன் முன் பெரிதாகிக் காட்சி விரித்தது.

"எல்லாம் ஒரே மாதிரி இருக்கே!"

"கட்டடங்களா இருக்கும்."

"பார்க்கலாம், முதல்ல சமதளம் பாரு."

ஒரு சுற்று சுற்றிவிடலாம். அப்புறம் தாழ்வாகப் பறந்து மிதக்கலாம்.

அஸ்ட்ரா 18இல் உயிர் வடிவங்கள் இருப்பதற்குச் சாத்தியக் கூறுகள் உள்ளன. சுற்றுப்புறத்தில் பிராண வாயு இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஈரமும் தெரிகிறது. அதன் சராசரி உஷ்ணமும் கனிம இரசாயனப் பொருள்களின்...

எத்தனைமுறை அந்த ரிப்போர்ட்டைப் படித்துவிட்டான்.

கம்ப்யூட்டரிடம் கேட்டான். பாதிக்குக் கணிசமாக அதிகமாகவே இருக்கிறது. ஆத்மா மாத்திரை விழுங்கிக் கொண்டான். உடல் பூரா இருந்த களைப்பை நிமிஷத்தில் கழற்றிவிடும் மாத்திரை.

"அங்க பாருங்க."

தலை வெட்டப்பட்ட மலை போல் ஒரு பகுதி தெரிந்தது. மலைகூட இல்லை. குன்று என்றுதான் சொல்ல வேண்டும். அதன் சரிவில் ஒரு சமதளம் தெரிந்தது. மற்ற இடங்களில் எல்லாம் அந்தக் 'கட்டட' முட்கள்.

"லாண்டிங் செக்!" என்றான் ஆத்மா.

பூமிக்குச் செய்தி ஆட்டோ ட்ரான்ஸ்மிஷனில் அவர்கள் இந்தக் கணத்தின் எதிர்பார்ப்பை, புதுமையை, துல்லிய சந்தோசத்தைப் பகிர்ந்துகொள்ள முடியாது. இந்தக் கணம் எங்கள் இருவருக்கும் மட்டும்தான்.

"லாண்டிங் செக் ஒகே" என்றது கம்ப்யூட்டர். ஆத்மா கலத்தைச் செலுத்தும் பணியை ஏற்றுக்கொண்டான்.

மிதந்து மிதந்து சமதளத்தின் நேர் உச்சியில் ஆயிரம் அடி உயரத்தில் நிறுத்தினான். மெல்ல லிஃப்ட் போல 800, 700, 500, 300, 90, 80, 10, 8, 8, 7, 6, 5, 4, 3, 3, 2.

மெத்தென்று சின்னக் குலுக்கல்.

"பர்ஃபெக்ட்" என்றான் ராஜன்.

கலத்தின் கால்கள் நீண்டு தரை தொட்டுக் கவ்விக்கொண்டன. இறங்கிவிட்டோம்.


ஆத்மா ஹை இம்பாக்ட் கண்ணாடியின் இமையைத் திறந்து வெளியே பார்த்துப் பிரமித்தான். மேலேயிருந்து பார்த்தபோது அந்த கட்டடங்கள் அவ்வளவு உயரம் என்று தோன்றவில்லை. இப்போது அவை நெடிதுயர்ந்து நின்றன. மொழுமொழு என்று சற்றே அழுக்குப் பச்சை அல்லது பழுப்புப் பச்சையில் அம்மணமாக ஒரு ஜன்னலோ கதவோ வாசலோ இன்றி மௌனமாக.

ராஜன் ஸாம்ப்ளரின் தீர்ப்புக்கு

(25 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் பகுதி

## வார்த்தை விளையாட்டு




சிறுவர், சிறுமியரே!...இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளலாம். இதன்மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ்வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபத்தியைந்து வார்த்தைகளாவது உங்களால் உருவாக்கமுடியுமா என்று பாருங்கள். உருவாக்கினால் நீங்கள் கெட்டிக்காரர்தாம்.

## சின்னப் பாப்பா...




சின்னச் சின்னப் பாப்பா
சிரிக்கும் நல்ல பாப்பா
வெள்ளை தலை உடுத்திப்
பள்ளி போகும் பாப்பா.

பள்ளியிலே படித்திடுத்து
பாட்டுப்பாடும் பாப்பா
கூட்டத்திலே கூடிநின்று
ஆட்டம் போடும் பாப்பா

வீதியிலே வாகனங்கள்
விரைந்துவரும் பாப்பா
பார்த்துப் பார்த்துப் பக்குவமாய்
போகவேணும் பாப்பா

## அழகாக நிறம் தீட்டுங்கள் 56



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப் படும் படம் உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத் தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

அழகாக நிறம் தீட்டுங்கள் 53



என்.டானியல், தரம் 8பீ,
கிளி, வட்டக்கச்சி ம.வி.

### பாராட்டுப் பெறுவோர்...

1. எஸ்.சிரோமா, தரம் 4 ஏ, தண்ணியூற்று சி.கி.த.க. பாடசாலை
2. பி.நிராந்த், தரம் 5ஏ, கிளிநொச்சி மகா வித்தியாலயம்.
3. ஜெ.பாரிஷ், பாலர் வகுப்பு, புனித சூசையப்பர் முன்பள்ளி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
4. எஸ்.எச். ஹுஜான், தரம் 2பீ, அல் அஸ்ஹர் வித்தியாலயம், ஏறாவூர்.
6. துஷார் துஷ்யந்தன், தரம் 4, கொழும்பு இ.க. இரத்மலானை.

## கூடா நட்பின் பலன்...



முன்னொரு காலத்தில் வங்கதேசத்தின் ஒருபகுதியை இந்திரஜித் என்ற மன்னன் ஆண்டுவந்தான். இவன் புத்திக்கூர்மையும், விவேகமும் இல்லாதவன்.

ஒரு சமயம் மன்னன் மாலைவேளையில் மாறுவேடமணிந்து நகர்வலம் வந்துகொண்டிருந்தான். குரங்காட்டி ஒருவன் தெருவில் குரங்கை வைத்து வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தான்.

"போருக்குப் போவாயா இராமா?"

"ஆமா" என்பதுபோல் குரங்கு தலையை ஆட்டியது.

"கத்திச் சண்டை போடுவாயா இராமா?"

அதற்கும் தலையை அசைத்தது.

"எங்கே போட்டுக் காண்பி" என்றபடி குரங்கின் கையில் ஒரு மூங்கில் குச்சியைக் கொடுத்தான். அது, அதை வாங்கிக்கொண்டு பாய்ந்து, பாய்ந்து குதித்துக் குதித்து, இங்குமங்கும் ஓடி, குச்சியைச் சுழற்றி சண்டை செய்வது போல் நடித்தது. பார்த்தவர்கள், கொல்லென நகைத்தனர்.

"உன் மாமியார் வீடு எங்கே இருக்கு இராமா?"

ஒரு கையை உயர்த்தி கிழக்குத் திசையை நோக்கிக் காட்டியது.

"மாமியாரை உனக்குப் பிடிக்குமா?"

பிடிக்காது என்பதுபோல் கையை ஆட்டியது.

"உன் பெண்டாட்டி அடிச்சா எப்படி அழுவே?"

அழுது காண்பித்தது.

மக்கள் கைதட்டி மகிழ்ந்தனர்.

இதையெல்லாம் மறைந்திருந்து பார்த்த மன்னன் இந்திரஜித்திற்கு அந்தக் குரங்கை மிகவும் பிடித்துவிட்டது.

வேகமாக அரண்மனைக்குச் சென்று தன் அமைச்சரை அனுப்பி, அந்தக் குரங்காட்டி கேட்கும் விலையைக் கொடுத்து அதை வாங்கி வரும்படி சொன்னான்.

நூறு வராகனுக்கு அமைச்சர் அந்தக் குரங்கை வாங்கிவந்தார்.

குரங்கைக் கண்டதும் மன்னனுக்கும் மகிழ்ச்சி பொங்கியது.

அரண்மனைத் தையற்காரர்களும், பொற்கொல்லர்களும் வரவழைக்கப்பட்டனர். குரங்கிற்கு விதவிதமான வண்ண ஆடைகள் தைக்கப்பட்டன. பலவித அணிகலன்கள் செய்யப்பட்டன.

அவற்றைக் குரங்கிற்கு அணிவித்து மன்னன் மகிழ்ந்தான். ஒரு மாதத்திற்குள் குரங்கு மன்னனிடம் நெருங்கிப் பழகிவிட்டது.

எப்போதும் அது அரசனிடமே இருக்கும். அதற்கும் ஒரு சிம்மாசனமும், கிரீடமும், செங்கோலும் செய்யப்பட்டன.

மன்னனின் அரியாசனத்திற்குப் பக்கத்தில் தனிச் சிம்மாசனத்தில் அமர்த்தப்பட்டது.

சபை நடக்கும்போது அமைதியாக இருக்கும். மன்னன் செல்லும்போது அவன் தோளில் ஏறி உட்கார்ந்துகொள்ளும்.

மன்னனைப் புகழ்ந்துபாடி பரிசு வாங்க வரும் புலவர்கள் முதலில் குரங்கைப் புகழ்ந்து பாடிய பின்னரே தன்னைப் பாடவேண்டுமென்று மன்னன் ஆணை பிறப்பித்திருந்தான்.

மன்னனை யாரும் தொட்டுவிட்டால் குரங்கிற்குக் கெட்டகோபம் வந்துவிடும். அவர்களைக் கடித்தக் குதறாமல் விடாது. ஒருசமயம் புலவர் ஒருவர் அரசனிடம் பரிசு வாங்கும்போது அவன் கைகளைத் தொட்டு முத்தமிட்டான். மன்னனைப் புலவர் அடிக்கிறார் என்று தவறாகப் புரிந்துகொண்ட குரங்கு குபீரென்று தாவி புலவரைக் கடித்தது. அலறியபடியே புலவர் தப்பித்தோம் பிழைத்தோமென்று அவையைவிட்டு ஓடினார்.

மன்னன் கைகொட்டி நகைத்தான். அவையோர் நாணமடைந்தனர்.

முட்டடுக்குணமும் பிடிவாதமும் உடைய மன்னனுக்கு யார் அறிவுரை கூறுவது என்று கொண்டனர்.

ஒருநாள் மன்னன் தன் பரிவாரங்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். குரங்கும் கூடச் சென்றது.

அன்று வேட்டையாடிய களைப்பால் மன்னன் கூடாரத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

குரங்கு அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தது. கூடாரத்திற்கு வெளியே காவலர்கள் நின்றிருந்தார்கள். குரங்கு, அரசன் மேல் ஒரு ஈ வந்து உட்கார்ந்ததைப் பார்த்து விரட்டியது. ஆனால், ஈயோ மறுபடியும் மறுபடியும் அரசன் மேல் வந்து உட்கார்ந்தது.

ஈயை விரட்டி விரட்டி அயர்ந்துபோன குரங்கிற்குக் கடுங்கோபம் வந்தது. பற்களை நறநறவென்று கடித்துக்கொண்டே மன்னனின் உடைவாளை உருவியது. இப்போது ஈ மன்னனின் முகத்தில் வந்து உட்கார்ந்தது. குரங்கு தன் இரு கைகளாலும் வாளைப் பிடித்துக்கொண்டு குறிபார்த்து ஒரு போடு போட்டது. ஈ பறந்துவிட்டது.

மன்னனின் அலறல்கேட்டு காவலர்கள் ஓடிவந்தனர். அரசன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

அரண்மனை வைத்தியர்கள் மிகுந்த பிரயாசைப்பட்டு அரசன் உயிரைக் காப்பாற்றினார்கள்.

குரங்கு காட்டில் விடப்பட்டது.

கூடா நட்பின் பலனை மன்னன் உணர்ந்துகொண்டான்.

நீதி: பலநாள் பழகினும் சிறியோர் கேண்மை
நீங்குதல் பசுபோல் கோடு நல் லதே.
(நீதிநெறி விளக்கம்)

## விநோதச் சக்கரம்

மொத்தம் 16 அடைப்புகளைக் கொண்ட கீழேயுள்ள சதுரத்தைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 96 | 11 | 89 | 68 |
| 88 | 69 | 91 | 16 |
| 61 | 86 | 18 | 99 |
| 19 | 98 | 66 | 81 |

இச்சதுரத்தில் உள்ள அடைப்புக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் எண்களை நீளப்பாட்டிலோ, குறுக்காகவோ, மூலையாகவோ கூட்டினால் 264 வருவதைக் காண்பீர்கள். அதுமட்டுமல்ல இச்சதுரத்தைத் தலைகீழாக திருப்பிய பின்னரும் இவ்வாறு நீளப்பாட்டிலோ, குறுக்காகவோ, மூலையாகவோ கூட்டினால் ஒரே இலக்கத்தைப் பெறக் கூடியதாக இருக்கும். இது விநோதமல்லவா.

'முயன்று பாருங்கள்' விடை இதோ!

கடந்தவாரம் வெளியான முயன்று பாருங்கள்! புதிருக்கான விடை இதுதான்:-

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 12 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |


## சிறுவர் கைவண்ணம்



ஜெ.செ.பாத்திமா மரியம், தரம் 3 செவ் ஸைனால் மகா வித்தியாலயம், புத்தளம்.



சி.நிரோசன், தரம் 9B, சென் மெரீஸ் பேட்டை தமிழ் மகாவித்தியாலயம், மேயாய்.



ராகுல், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, கொழும்பு 15.



ஜெ.யாழினி, புனித சூசையப்பர் முன்பள்ளி, வட்டக்கச்சி.




# தடுமாறாத நடைக்கு தரமான காலணிகள்

நடப்பதற்கு வசதியாகவும், கால்களுக்கு வலியை ஏற்படுத்தாத வகையிலும் காலணிகள் இருப்பது மிகவும் அவசியம். பாதங்களை விட பெரிய அல்லது சிறிய காலணிகளால் கால்களுக்குப் பாதிப்பு ஏற்படும் தெரியுமா? இது மட்டுமல்ல. அவை நமது நடையையே மாற்றி விடும். அத்தோடு கால் மற்றும் இடுப்பின் தசைநார்கள் மீது அதிக அழுத்தத்தை ஏற்படுத்தி சிறிய வயதிலே இடுப்பு வலி, முதுகு வலி, முட்டி வலி என்று கொண்டுபோய் விடும்.

நவநாகரிக காலணிகள், கால்கள் தடம் புரளவும், சுளுக்கு ஏற்படவும் வழிவகுத்துவிடும். காலணிகளில் உள்ள 'குஷன்' உங்கள் கால்களை மட்டும் அல்லாமல் குதிக்கால் முட்டியையும் தாக்குகிறது. பணம் கொடுத்து வாங்கும் காலணிகளை எப்படி வாங்க வேண்டும் என்பது பற்றிய ஆலோசனைகள் அவசியம்.

**காலணியின் ஆயுட்காலம்**

ஒரு செருப்பு வாங்கும் போதே அது எத்தனை நாளுக்கு வரும் என்பதைக் கணித்து வாங்குவது புத்திசாலித்தனம்.

பார்வைக்கு அழகாகத் தெரியும் காலணிகள் எல்லாம் நீண்ட நாள் உழைக்கும் என்று கூற முடியாது. குறிப்பாக நவநாகரிகப் பெண்கள், இந்தக் காலணி நமது காலுக்குச் சரிவருமா என்று யோசிக்க வேண்டும். அதன் உட்புற அமைப்பு மற்றும் அறிவியல் ஆதாரத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். பாதங்களின் அமைப்புக்கேற்ப காலணிகள் வாங்க வேண்டும். காலணிகளை அணிந்து, சில அடி தூரம் நடந்து பார்த்து வாங்க வேண்டும்.

**குதிக்கால் உயர்ந்த காலணிகள்**

குதிக்கால் உயர்ந்துள்ள காலணிகள் பெரும்பாலும் பாதங்களின் அமைப்புக் கேற்ப இருக்காது. பென்சில் போன்ற குதிக்கால் உயர்ந்த காலணியில் குதிக்கால் மற்றும் விரல்களின் கட்டுப்பாடு மிகவும் பாதிக்கும். இதன் விளைவாக பாதங்களின் உள்ளங்கால் மற்றும் குதிக்காலுக்கு கண்டிப்பாக பாதிப்பு ஏற்படக் கூடும். சிறிதளவு கால் வழுக்கினாலும், பெரிய காயம் ஏற்படக்கூடும். 90 வீதம் பேருக்கு உள் காயம் (தசை நார் பிசகுதல், எலும்பு முறிவு) போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இப்படி பல பேருக்கு நடந்ததுண்டு.

இந்த வகைக் குறைபாடு குணமாக 2 வாரம் முதல் 3 மாதங்கள் வரை ஆகும். சிகிச்சை செலவு ஒருபுறமிருந்தாலும் மன உளைச்சல் வேறு.

**டிசைனர் காலணிகள்**

ஒரு காலத்தில் காலணி என்பது தோலால் மட்டுமே செய்யப்பட்டு வந்தது. ஆனால் இப்போது பிளாஸ்டிக், ரெக்சின் என்று பல வகைகளில் வருகின்றன. டெனிம், ஸ்வெட், பிளாஸ்டிக், இரப்பர், கண்ணாடி போன்ற செருப்பு என்று பல வகைக் காலணிகள் உள்ளன. இருப்பினும் தோல் செருப்பே சிறந்தது. குதிக்கால் உயர்ந்த, தாழ்ந்த, பென்சிலின் கூர்மை போன்ற உயரமான காலணிகள், நடைபாதை போன்ற உயரமான காலணிகள் என்று பல வருகின்றன. ஏதோ நடைபாதை போல் ஏறி நிற்பது போன்று வரும் காலணிகள் உங்கள் முதுகு மற்றும் தண்டுவடத்துக்கு அழுத்தம் தராது. இதுவே உங்களுக்குச் சிறப்பான தோற்றத்தையும் அளிக்கும். ஆனால் மிகவும் குதிக்கால் உயர்ந்த காலணிகள், அதாவது பென்சில் போன்ற கூர்மையான அடிபாகம் கொண்ட காலணிகள் அணிவதைத் தவிர்க்கவும். இவற்றை அணிந்து நிற்பதால், நடப்பதால் முதுகு மற்றும் தண்டவடத்தில் வலி ஏற்படும். கால் விரல்களுக்கும் அழுத்தம் ஏற்படும். விளைவு முதுகு, இடுப்பு மற்றும் தண்டுவடத்தில் வலி ஏற்படும்.

அன்றாடப் பயன்பாட்டுக்கு தக்கபடியே காலணிகள் வாங்கவும். ஃபேஷனான காலணிகளைத் தவிர்க்கவும். ஏனெனில் காலணி என்பது அதன் அழகுக்காக அல்ல; மாறாக பாதங்களின் அமைப்புக்கு ஏற்ப வாங்க வேண்டியது



அவசியம்.

**எச்சரிக்கைகள்**

* முன்புறம் உறுதியான மற்றும் அகலமான அடிப்பாகம் உள்ள காலணிகளை வாங்க வேண்டும்.

காலணியைக் கழற்றிய பிறகு பாதங்களின் உள்ளங்கால் அல்லது விரல்களின் கீழே ஏதாவது அழுத்தம் போன்ற அடையாளம் இருப்பின், உங்கள் காலணியின் உள்பாகம் சரியில்லை என்று பொருள். அதனை உடனே மாற்ற வேண்டியது அவசியம்.

* வெல்க்ரோ எனப்படும்- காலணியின் மேற்புறம் இழுத்து ஒட்டும் தன்மையுள்ள- காலணிகளே நல்லவை. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு இந்த வகையான காலணியே சிறந்தது. ஏனெனில் இவற்றை அணிவது, கழற்றுவதும் எளிது. அத்தோடு இந்த வகைக் காலணிகளில் கால் தசைகள் இறுகும் பிரச்சினைகள் இருக்கா.

* அறிவியல் என்ன சொல்கிறதென்றால், 'சரியான காலணி என்பது தரை அளவை விட அதிக உயரத்தில் இருக்கக் கூடாது' என்பதுதான்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## இரு கால்களும் ஒரே மாதிரி இருக்காது

காலணி வாங்கும்போது பாதங்களின் வசதியைப் பார்த்து வாங்க வேண்டியது அவசியம். இரு பாதங்களும் ஒரே மாதிரி இருக்காது. வலது, இடது பாதங்களின் அமைப்பு மற்றும் அளவில் சற்று வித்தியாசம் இருக்கும். ஆகவே, பாதத்தின் அளவுக்கு ஏற்பவே காலணி வாங்க வேண்டும்.

# பெண்




# முகம் வசீகரம் பெற அருமையான யோசனைகள்

எளிதில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே முகத்தை அழகு படுத்திக் கொள்ளலாம்.

பெண்களுக்கு முக அழகுதானே மிக முக்கியம்?

பாதாம் பருப்பை பாலில் அரைத்து இரவில் முகத்தில் தொடர்ந்து பூசி வந்தால் கருமை அகலும், முகம் பளபளக்கும்.

முட்டையின் வெள்ளைக்கரு 7 கரண்டி, தேன் கால் கரண்டி, மாதுளைச் சாறு அரைக் கரண்டி ஆகிய மூன்றையும் கலந்து முகத்தில் அரைமணி நேரம் கழித்து கழுவினால் முகத்தில் உள்ள எண்ணெய்ப் பசை நீங்கும். முகம் பளபளக்கும்.

பெரும்பாலான இளம் பெண்களுக்கு முகப்பரு பெரும் பிரச்சினையாக இருக்கும். பூண்டை அல்லது கருந்துளசியை அரைத்துப் பூசினால் பருக்கள் மறையும். சீரகத்தை அரைத்துப் பூசினாலும் முகப் பருக்கள் காணாமல் போகும். கஸ்தூரி மஞ்சள் அரைத்து கொஞ்சம் வெண்ணெயும் சேர்த்து குழைத்து முகத்தில் பூசி 5 நிமிடங்களுக்கு பின் கழுவி விட வேண்டும். இப்படி செய்தாலும் பருக்கள் மறைந்து விடும்.

முகப் பருவினால் கரும்புள்ளிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஜாதிக் காயை அரைத்துப் பூசினால் கரும்புள்ளிகள் மறையும்.

**உதடுகள் வசீகரமாக இருக்க வேண்டாமா?**

முட்டையின் வெள்ளைக்கரு, பாதாம் பவுடர், பால் ஆகிய மூன்றையும் கலந்து பூசி காய்ந்த பின் வெந்நீரால் கழுவ வேண்டும். இதனால் உதடு வசீகரம் பெறும்.

ஜாதிக்காயை சிறிது பசும்பால்விட்டு அரைத்து மைபோல் குழைத்து இரவில் படுக்கப் போகும் முன்பு கண்களைச் சுற்றி தடவிவர வேண்டும். இதனால் கண்கள் குளிர்ச்சி அடையும். ஒளிமிகுந்த கண்களையும் பெறலாம். *




# கீரையை விரும்பி சுவைக்கச் செய்ய...!

செடியின் இலைகள் நம் உடலுக்குத் தேவையான சத்துக்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையாக இருப்பதோடு அவற்றைச் சேமித்து வைக்கும் கிடங்குகளாகவும் உள்ளன.

இலைகளில்தான் முக்கிய சத்துக்களான புரதம், மாச்சத்து, கொழுப்புச்சத்து, உயிர்ச்சத்து, தாதுப் பொருட்கள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

இலைகளின் கலங்களில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்து, பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்கள் மிக அதிகமாக சேகரிக்கப்படுகின்றன.

கீரைகளும் இலை வகைதானே? அவற்றில் இந்தச் சத்துக்கள் இல்லாமலா போய்விடும்? அனைத்து சத்துக்களும் கீரையில் உள்ளன. கீரையை நாம் சாப்பிடும் போது அனைத்து சத்துக்களும் அப்படியே நம் உடலில் சேர்ந்து விடுகின்றன. அவை நம் உடலுக்கு அளிக்கும் நன்மைகள் பலப்பல.

இரத்தத்தை சுத்தப்படுத்தவும், இரத்தம் உடலில் உற்பத்தியாகவும் கீரையில் உள்ள சத்துக்கள் உதவுகின்றன. இரத்தத்தில் உள்ள நோய்க் கிருமிகளையும் ஒழித்துக் கட்டுகின்றன.

கீரைகளில் உள்ள காரத் தன்மை அற்புத ஆற்றல் கொண்டது. அது உடலில் உள்ள, புளிப்புத் தன்மை கொண்ட கழிவுப் பொருட் களை உடனுக்குடன் வெளியேற்றுவதற்கு துணைபுரிகிறது. புளிப்புத் தன்மை உடலில் தங்கி விட்டால் பல நோய்களை அது உண்டாக்கும். இதை போக்க கீரை உதவுகிறது.

'பச்சையம்' என்ற உயிர்ச்சத்து கீரைகளில் நிறைய உள்ளது. இது உடலுக்கு பல நன்மைகளைச் செய்கிறது. இதனால்தான் கீரைகள் காய்கறிகளை விட உயர்வாகக் கருதப்படுகின்றன.

கரேட்டினிலிருந்து ரெட்டினாய்க் என்ற அமிலத்தை நம் உடலால் தயாரித்துக்கொள்ள முடியும். இந்த அமிலம் உடலில் போதுமான அளவு இருந்தால் எங்கெங்கே உடல் கலங்களில் புற்றுநோய் தோன்றுவதற்கான அறிகுறிகள் உண்டோ அங்கங்கே இந்த அமிலம் விரைந்து சென்று அவற்றை அழித்து விடும். இந்த அமிலம் கீரைகளில் தாராளமாக உள்ளது.

எனவே, கீரை நமது அன்றாட உணவில் இடம்பெற வேண்டும் என்பது புரிகிறதல்லவா?

ஆனால், தினமும் கீரையா என்று வீட்டில் பெரியவர்களே முகம் சுளிப்பார்கள். குழந்தைகளுக்குக் கேட்கவா வேண்டும்? அவர்களிடம் எல்லாம் கீரையின் மகிமையைப் பற்றி விளக்கிச் சொல்லி புரிய வைக்கத் தேவை இல்லை. அதற்கு மாறாக கீரையை தாளித்தலிலேயே மாற்றங்களை செய்து, சுவையையும், மணத்தையும் கூட்டி, எல்லோரையும் கீரையை விரும்பி சாப்பிட வைக்கலாம்.

கீரையை மசித்து இறக்கிய பின் வழக்கமான தாளிப்பிற்குப் பிறகு, தேங்காய் எண்ணெய் ஒரு ஸ்பூன் சேர்ந்தால் சுவையும் மணமும் கூடும்.

உள்ளி ஒன்றை மெல்லியதாக சீவி, வழக்கமான தாளித்துடன் சேர்க்க வேண்டும்.

வற்றல் மிளகாய்க்குப் பதிலாக, தயிர் மிளகாய் தாளிப்பில் சேர்க்கலாம். ஆனால் தயிர் மிளகாயில் உப்பு இருப்பதால் கீரைக்கு உப்பைக் குறைக்க வேண்டும்.

கடுகு, உளுந்தம்பருப்பு தாளித்து, கருவேப்பிலை சேர்த்து, சிறிது மிளகாய் பொடியும், பெருங்காயப் பொடியும், சேர்க்கலாம். கறிவேப்பிலை சேர்த்த பிறகு மிளகாயப் பொடி, பெருங்காயப் பொடி சேர்த்தால் கருகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

தாளிப்பில் கருவேப்பிலை சேர்த்த பின் சிறிது தனியாகச் சீரகப்பொடி சேர்க்கலாம்.

கீரையில் கடைசி தாளிப்பில் கருவடாம் பொரித்துப் போடுவது போல், 'கார்ன் ப்ளேக்ஸ்' பொரித்து கலந்து பரிமாறினால் குழந்தைகள் மீண்டும் மீண்டும் வாங்கிச் சாப்பிடுவார்கள். தாளிப்பில் கறி வேப்பிலை சேர்த்த பின் சிறிது பாஜி மசாலாப் பவுடரையும் சேர்க்கலாம்.


எண்ணெயில் கடுகு வெடித்ததும், இரண்டு கரண்டி ஊற வைத்து நீர் வடித்த பாசிப்பருப்பு, கீறிய பச்சை மிளகாய் சேர்த்து நன்கு வதக்கிச் சேர்க்க கீரை மணமாக இருக்கும். சுவையும் தூக்கலாக இருக்கும். தாளிப்பில் நிலக்கடலை பருப்பு சேர்த்தால் இன்னும் சுவை கூடும்.

தாளிதம் செய்த பின் கீரையைக் கொதிக்க வைத்தால், மணமும், ருசியும் குறையும். எனவே கடைசியாகத் தாளிப்பு செய்ய வேண்டும்.

இந்த முறைகளைக் கடைப்பிடித்துப் பாருங்கள். பின்னர் தெரியும் கீரையின் அருமை. *

# மலையக இலக்கிய கர்த்தாக்கள் தொகுதி-1






இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகமும் ஸ்ரீலங்கா சிந்தனை வட்டமும் இணைந்து 'மலையக இலக்கிய கர்த்தாக்கள்' தொகுதி (1) - எனும் நூலினை வெளியிட்டிருக்கிறார்கள். எழுத்தாளரும் மூத்த நூலகவியலாளரும், பன்னூலாசிரியருமான என்.செல்வராஜா இதனைத் தொகுத்து வழங்கியுள்ளார். இலண்டன் சுடரொளியில் பிரசுரமான மலையக இலக்கிய கர்த்தாக்கள் பற்றிய சில ஆக்கங்கள் தொகுதி ஒன்றில் உள்ளடக்கமாகியுள்ளன.

நூலின் ஆக்கக்கர்த்தாவான என்.செல்வராஜா அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆனைக்கோட்டை எனுமிடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாட்டின் அரசியல் பிழம்பின் காரணமாக குடும்பத்துடன் புலம்பெயர்ந்து இன்று ஐக்கிய இராச்சியத்தை வாழ்விடமாகத் தரித்துக்கொண்டவர்.

1981-இல் படைப்புலகில் கால்பதித்த இவர் இதுவரை 22 புத்தகங்களைத் தமிழ் இலக்கிய உலகிற்குப் படைத்துத் தந்துள்ளார்.

'நூல்தேட்டம்' புத்தகத் தொடர் இவர் வழங்கியுள்ளவற்றில் - தொகுப்புகளில் - சிகரமாகும். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்தும் பணியினை ஆரம்பித்து இதுவரை நான்கு தொகுதிகளை வெளியிட்டிருக்கிறார். ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் நூல்கள் என்ற முறையில் இதுவரை நான்காயிரம் நூல்களைப் பதிவு செய்துள்ளார். இப்பணி 5,6 என தொடர்ந்தவண்ணமே உள்ளது.

இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்துவது மட்டுமின்றி, மலேசிய, சிங்கப்பூர் படைப்பாளிகளின் 'நூல்தேட்டம்' தொகுதி ஒன்றினை வெளியிட்டுள்ள பெருமையையும் ஈட்டிக்கொண்டுள்ளார்.

இத்தகைய சீரிய, சிறப்பான, தன்னலமற்ற பணியை ஆற்றிய ஒருவரின் ஆக்கங்களை உள்ளடக்கமாகக் கொண்டே 'மலையக இலக்கிய கர்த்தாக்கள், தொகுப்பு- ஒன்று' மலர்ந்துள்ளது.

**கே.விஜயன்**

இலண்டன் சுடரொளி சஞ்சிகையின் ஸ்தாபகரும், பிரதம ஆசிரியருமான ஐ.தி.சம்பந்தனின் 'மலையக தமிழ் எழுத்தாளர்களின் வளர்ச்சியும், எழுச்சியும், ஆக்கமும்' மற்றும் மழவரையன் விஜயபாலன், தொகுப்பாசிரியர் என்.செல்வராஜா ஆகியோரின் அணிந்துரை, முன்னுரை ஆகியவையும் 'பத்திரிகையாளர் கோ.நடேசையர் மலையக மக்களின் விடிவெள்ளி', 'கல்ஹின்னவில் தமிழ் மன்றம் வளர்த்த எஸ்.எம். ஹனிபா', 'மலையக மக்களின் புரட்சிக்குரல் அமரர் இர.சிவலிங்கம்', 'மலையகத்தின் மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை', 'மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவாவும், அவரது கலை இலக்கியப் பயணமும்', 'மலையக பதிப்புலகத்தில் ஒரு சிந்தனை வட்டம் - கலாபூஷணம் பி.எம்.புண்ணியாமீன்', 'புலம்பெயர்ந்தும் மலையக இலக்கியத்தை மறவாத மாத்தளை சோமு' - சாரல்நாடன் , 'மலையக விழிப்புணர்வின் ஓர் அறுவடை', 'மலையக மனிதர்கள்; தெளிவத்தை ஜோசப்', 'துரைவி பதிப்பகமும் அமரர் துரை விஸ்வநாதனும்', 'மலைவிளக்காகத் திகழ்ந்த இலக்கியச் சுரங்கம் கே.கணேஷ்' - எனும் தலைப்புகளிலான ஆக்கங்களும் நூலில் இடம்பிடித்துள்ளன.

மொத்தமாக பதினொரு படைப்பாளிகள் பற்றிய விவரக்குறிப்புகள் நூலில் உள்ளன. இக்கட்டுரைகள் அனைத்தும் லண்டன் சுடரொளியில் பிரசுரமானவை. சஞ்சிகையுடன் அத்தகவல்கள் முடங்கிவிடாமல் அவற்றை நூலுருவாக்கியமை பெருஞ்செயலாகும்.


ஈழத்து இலக்கியத்தின் ஒருபெரும் பகுதியாக, அங்கமாக அமையக்கூடியது மலையக இலக்கியம். அதன் முன்னோடிகள் யார், யார் என்பது பெரும் தேடலுக்குரியதோர் அம்சமாகும். அத்தேடல் முழு அளவில் இடம்பெறவில்லை என்ற குறைபாடு நிலவுகின்றபோதும் இந்நூலில் அடங்கியுள்ள கர்த்தாக்களின் பிரயத்தனங்களால் பல அடிப்படை அம்சங்கள் வெளிக்கிளர்ந்த வண்ணமுள்ளன என்பதைக் கட்டுரைகள் எடுத்துக்காட்டுகின்றன.

கோ.நடேசய்யர், சி.வி.வேலுப்பிள்ளை, கே.கணேஷ், அமரர் இர.சிவலிங்கம் போன்றவர்கள் குறித்த வரலாறுகள் பற்றிய தகவல்கள் பெருமளவில் வெளிப்பட வேண்டிய நிலையுள்ளது. படைப்பிலக்கிய ஆற்றல், பங்களிப்பு என்பன மட்டுமல்லாது மலையக மக்களின் வாழ்வியலோடும் சமூகப் போராட்டங்களினூடும் அவர்கள் எவ்வாறு நகமும் - சதையுமாக இரண்டறக் கலந்துவிட்டிருந்தனர் என்ற அம்சம் இன்றைய மலையக இளைய சமூகத்தினர் மத்தியில் விரிந்து கிடக்க வேண்டியவொன்றாகும்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையை வெளிஉலகம் அறிதல் வேண்டும் என பாடுபட்ட முற்போக்குச் சிந்தனையாளர்களில், இலக்கிய வாதிகளில் கோ.தண்டராம நடேசய்யர் (1892-1947) முக்கியமானவர். மலையக தொழிற்சங்கம், அரசியல், இலக்கியம் எனப் பரந்துபட்ட அளவில் கோ.நடேசய்யரின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

மலையக மக்களின் அவலவாழ்வியல் குறித்து தமிழிலும் அப்பால் ஆங்கில மொழியிலும் ஆக்க இலக்கியம் படைத்தவர்களாக அழகு சுப்பிரமணியம், டி.இராமநாதன், ராஜா புரக்ரர் ஆகியோர் விளக்கினார்கள். இவர்களுள் கவிஞர், நாவலாசிரியர், தொழிற்சங்கவாதி, நாடாளுமன்ற உறுப்பினர் என சி.வி. வேலுப்பிள்ளை திகழ்ந்தார்.

சமூகப்பற்றுள்ள போராளியான அமரர் இர.சிவலிங்கம் சிறந்த கட்டுரையாளரும் பேச்சாளருமாவார். மலையக இளைஞர்களிடையே 'மலையகம்' என்ற இன அடையாளத்தையும், மலையக மக்கள் தனியான வரலாற்றுப் பாரம்பரியம் மற்றும் கலை, கலாசார விழுமியங்களையும் கொண்ட ஒரு தேசிய இனம் என்ற உணர்வினையும் ஏற்படுத்த அயராது பாடுபட்டவர் அவர்.



இத்தகைய மலையக இலக்கியத்தின் மாபெரும் தூண்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் அடங்கியவையாக இக் கட்டுரைகள் துலங்குகின்றன. சமகால கர்த்தாக்கள் குறித்த தகவல்கள் பெரிதும் பயனுள்ளவை. இவர்களின் செயற்பாடுகளே இந்த மூலவர்கள் குறித்த வரலாறுகள் வெளிவருவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்துள்ளன. எழுத்தாளர்களாகவும் பத்திரிகையாளர்களாகவும் திகழ்கின்ற இவர்கள் ஒரு பெரும் சமூகத்தின் இயக்கத்தை, வாழ்வியலை இலக்கியத்தின் துணையுடன் நகர்த்திச் செல்பவர்களாக இருக்கின்றனர்.

இவையாவும் ஒரு பெரும் வரலாற்றினை உசாத்துணையாக அமையவல்ல குறிப்புகளே.

நூலகவியலாளர் என்.செல்வராஜா ஐ.பி.சி.வானொலியில் காலைக் கலசம் நிகழ்ச்சியில் நிகழ்த்திய இலக்கிய உரைகள் இலண்டன் சுடரொளி சஞ்சிகையில் கட்டுரைகளாகப் பிரசுரமாகி இன்று நூல் வடிவில் திகழ்கின்றமை பாராட்டுவதற்குரிய செயற்பாடாகும்.




## கலைகள் யாவிலும் நல்லவராம் ஆளைக் கவிழ்ப்பதில் வல்லவராம்

''என்ன இது பிருஷ்டத்துலே ஒதை வாங்குன மாடுபோல 'முசுமுசு'ன்னு வெறைச்சிப்போய் நிக்குறியே?''

''கண்டும் காணாமல் போறார்''

''ஆரு?''

''பேப்பர்காரரு''

''அப்படின்னா? கடை வழியா பேப்பர் போடுரவரா, இல்லே வீடுவழியா பேப்பர் பேப்பர்ன்னு கத்தித் திரியிறவரா?''

''ஆத்தா! ஆத்தா! அவரு ஒரு பத்திரிகையாளர்''

''அப்புடிப்போடு. அதுதான் வித்வகர்வம். நீர் எழுத்தாளன். அவரு பத்திரிகைக்காரன். நீரு என்னத்தை எழுதினாலும் அவரைக் கெஞ்சணுமில்லே.''

''ஆத்தா! கலைஞன், எழுத்தாளன், பத்திரிகையாளன் இவுக எல்லாம் ஆருன்னு நெனைக்கீங்க?''

''நெசத்தைச் சொன்னால் சமூகப்பணியாளர்கள் ஏதோ வகையிலே சமூகத்திற்கும் மக்களுக்கும் நல்லதைச் செய்யுவாங்க''

''கிழிஞ்சுது போ. பெருசாதான் சொல்லுதியே''

''அட, எம்லே இப்புடி அலுத்துக்கிறியே. நீயும் ஒரு எழுத்தாளன். உனக்கும் சேர்த்துல்லே பெருமையைத் தாரேன்.''

''நெசம்தான், நெசம்தான். ஆனா என் மனசுலே என்ன தோன்றதுன்னா நீங்க இப்புடி புகழுகிற இந்த சமூகசேவையாளர் கோஷ்டியிலே அதிலேயும் நம்ம தமிழ்மொழிக் கூட்டத்துலே எண்பது சதவீதமானவங்க சும்மா டமாராகாரங்கதான். ஏன் சொல்லுதேன்னா இப்ப இந்த குவாட்டர்ஸே எடுத்துக்குவேமே. இதை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவுக கட்டிக்குடுத்தாங்க. அவுக கலைஞர்கள் மேலே ரொம்பப் பிரியமுள்ளவங்கன்னு எல்லாருக்கும் தெரியும். நூத்துக்கணக்கான வீடுகளை இங்கே கட்டன அவரு இந்த இடத்துலே ஒவ்வொரு பகுதிக்குள்ளேயும் ஒரு பத்திரிகையாளன், எழுத்தாளன், கலைஞன் இருக்கிறமாதிரி திட்டம் போட்டு வீடுகளை கொடுத்தாரு. ரெண்டு இன கலைஞர்களும் சமதையா இருக்க வழி பண்ணாரு தெரியுமா. அப்புடிதான் இங்கே இருக்கோம்.''

''அடிச்சக்கை. நெசமாதான் சொல்லுதியலா?''

''பொய்யா சொல்லுதேன். சிங்கள கலைஞர்கள் பேரிலே 'மில்டன் பெரேரா வத்தை', 'ஜோதிபால வத்தை'ன்னு பேருக கூடக் கெடக்கே. அவுக எல்லாம் போய் மேலோகம் சேர்ந்துட்டாலும் அவுக தலைமுறை வாழ்ந்துன்னு இருக்கு. அவுக எல்லாம் ஒன்றுகூடி பேசிதான் மூத்த ஆளுக பேரை வீதிக்கு வீதி போட்டுக்கிட்டாங்க. ஆனா நம்ம ஆளுக ஆளுக்காள் சந்திச்சாலும் கூட பிருஷ்டத்தை காட்டித் திரும்பிட்டில்லே போறாங்க. அதான் வெறைச்சிப்போய் நிக்கேன்.''

தமிழன் என்றொரு இனமுண்டு - தனியே
அவர்க்கொரு குணமுண்டு.
கலைகள் யாவினும் நல்லவனாம்
ஆளைக் கவிழ்ப்பதில் வல்லவனாம்.

## பிறவாமை வேண்டும் பிறப்புண்டேல் 'விதியை' மறவாமை வேண்டும்

கம்யூனிஸ்ட்டான ஓர் எழுத்தாளர் சொன்னார்.

''என் தோப்பனார் மெண்டலாகிட்டாரோன்னு தோன்றது''

''அடப்பாவி ஏன் அப்பிடி பேசுரே?''

''பின்ன என்னங்க எப்பப் பார்த்தாலும் 'மறுஜென்மம் மறுஜென்மம்'னு பொலம்பின்னே இருக்கார்''

''மறு ஜென்மத்துலே இதே குடும்பத்துலே பிறக்கனுமின்னு நெனச்சு பொலம்புராரா, இல்லே கூடாதுன்னு பொலம்புராரா?''

''இதே குடும்பத்துலே பொறக்கனுமின்னுதான்''

''கர்மம் கர்மன்டா. உங்கள் மேலே எவ்வளவு பாசம் இருக்குமுன்னா இப்புடி பொலம்புவாரு. இதைப் புரிஞ்சிக்காம மெண்டல்னு பினாத்திண்டிருக்கியே. பாசம் முத்தினாலும், பக்தி மிஞ்சினாலும் இப்புடித் தாம்லே. அவாள் என்ன பண்ணுவா, என்ன பேசுவாவங்கிறதே புரிஞ்சுக்கவே முடியாது. 'அறிவுமணி சான்றோர்க்கு அணி'ன்னு கேள்விப்பட்டிருக்கியா? சங்ககாலப் பழமொழி. வரகுண பாண்டியன் மன்னன் ஆட்சிக்காலத்துலே நடந்ததாச் சொல்லுவா. ஒரு கோயில் வாசலிலே எண்ணெய் எடுக்க எள்ளு காயப்போட்டிருந்தாங்க. அந்த வழியா போன ஒரு சிவனடியார் சட்டென குனிஞ்சு ஒரு புடி அள்ளி 'லபுக்'குன்னு வாயுக்குள்ளே போட்டு நச்சு நச்சுன்னு சப்பின்னே நடந்தார். ஆஹா சிவ அபசாரம் நடந்துட்டுதேன்னு பூசகர் தலையிலே அடிச்சுக்க காவலர்கள் திபுதிபுன்னு ஓடி சிவனடியாரைப் புடிச்சு மன்னர் முன்னாலே கொண்டுபோய் நிறுத்திப்புட்டாங்க. 'கோயில் எள்ளைக் களவாடி துன்னுட்டாருங்கிறது' குத்தச்சாட்டு. அதுக்குப் பிறகு கதை எப்படிப் போனது எண்டு பாரும்.

மன்னர் பார்த்தார். ஆஹா சிவப்பழமாகவல்லவா இருக்கார்? இவர் இப்புடிச் செய்வாரான்னு யோசனை பண்ணினார்.

''ஆமா! ஏன் கோயில் எள்ளைத் திருடினீர்?' சிவ அபராதமாயிற்றே''

''மன்னா! அது நேக்கும் தெரியும்''

''தெரிந்துமா?''

''இந்த ஊர் நேக்கு பிடித்திருக்கிறது. இந்தக் கோயிலில் காளையாகப் பிறந்து அங்குள்ள செக்கை இழுத்து கோயில் பணிசெய்யவேண்டும் என்பதுதான் நேக்கு ஆசை. சிவ அபராதப்படி அந்தத் தண்டனைதான் கிடைக்கும். அதனால்தான் எள்ளைத் திருடி வாயில் போட்டேன்'' என்றார் அவர். மன்னன் மலைத்துப்போனான்.

''எங்கே வாயைத் திற'' என்றான்.

ஆஹா! மன்னர் எள்ளைச் சப்பியப் வாயில் குத்தப்போரார் எள்ளை சுவை பார்த்த நாவை புடுங்கப் போரார்ன்னு சபையே மலைச்சுப்போய் பார்த்துன்னு இருக்கு. மன்னனோ அவர் வாயிற்குள் எட்டிப்பார்த்து அவர் நாவில் ஓர் எள்ளு ஒட்டிக்கிடப்பதையும் கண்டு சட்டென அதை எடுத்து தன்வாயில் போட்டுச் சப்பினான்.

''ஐய்யய்யே! என்ன இது அசிங்கம்?'' சபை அங்கலாய்த்தது. மன்னன் புலம்பினான்.

''மஹா ஜனங்களே! இந்த நாடு எனக்குப் பிடித்திருக்கிறது. நான் மறு ஜென்மத்திலும் இங்கேதான் பிறக்கவேண்டும். இதே கோயிலில் காளையாகப் பிறந்து செக்கிழுக்கவேண்டும்...''

இப்படித்தான் கதை போனது என்பதும் கம்ப்யூட்டகாரர் ஒரேயடியாக மாறிப் போனார்.

''ஆஹா பக்தியின் முக்தியே முக்தி. என் தோப்பனார் வாழ்க''

# பத்தன் பதில்கள்



பி.வரன்,
நாயன்மார்கட்டு.

**கேள்வி:** திருவிழாவில் கூட்டம் எதற்கு? கும்பிடவா?

**பதில்:** பல சமயங்களில் 'கூடுவதற்கு'!

கே.ஈஸ்வரன்,
நல்லூர்.

**கேள்வி:** கோயில்களில் கூடும் பக்த கோடிகள் குறித்து.....?

**பதில்:** பக்த கோடிகளுக்கு மத்தியில் பக்த கேடிகளும் நிறைந்து காணப்படுகின்றனரே...!

எம்.பளீஸ்,
பேருவளை.

**கேள்வி:** தாய் பெரிதா? தாரம் பெரிதா?

**பதில்:** உன்னைச் சுமந்தவள் உயர்ந்தவளா, உனக்காகச் சுமந்தவள் உயர்ந்தவளா என்று உமது மனதையே கேட்டுக் கொள்ளும்.

வி.திவ்யா,
இளவாலை.

**கேள்வி:** ஆசை அடங்குவது எப்போது..?

**பதில்:** ஆள் கட்டையில் ஏறும்போது!

எல்.பாருக்,
மருதமுனை.

**கேள்வி:** 'இல்லாள்' என்றால் இல்லத்தை ஆள்பவளா?

**பதில்:** இல்லவே இல்லை, எப்போதும் இல்லத்தில் 'இல்லை'ப் புராணம் பாடுபவள் என்பதால்தான் அவள் இல்லாள்.

என்.ஹனீபா,
திருகோணமலை.

**கேள்வி:** பெண் புத்தி பின் புத்தியாமே! உண்மையா?

**பதில்:** ஆமாம், எப்போதும் 'பின்' (ஊசி) போல அது குத்தும். அதனால் அது 'பின்' புத்திதான்.

திருக்கேதீஸ்,
வியாங்கொடை.

**கேள்வி:** மங்கையர் மனதின் ஆழத்தை அளவிட முடியுமா?

**பதில்:** நரி வால் கொண்டு கடல் ஆழம் அளக்கும் வேலை அப்பனே இது...!

வி.குமரன்,
பாலையூற்று.

**கேள்வி:** பெண்களை அரிவையர் என்பது ஏனோ...?



**பதில்:** ஆண்களை அரித்தெடுப்பதால் அப்படிப் பெயரோ...!


இ.குமரன்,
பாலையூற்று.

**கேள்வி:** வழக்கமாகப் பெண்கள் தான் நடனமாடுவார்கள். ஆனால் 'ஆடவர்' என்று ஆண்களையல்லவா அழைக்கின்றார்கள்?

**பதில்:** அது முற்றிலும் சரியானதே. வீட்டில் பெண்களின் உத்தரவுகளுக்கு அமைய ஆடுபவர்கள் ஆண்கள்தானே...! ஆகவே அவர்கள் ஆடவர்தாம்!

பீ.மார்க்,
வவுனியா.

**கேள்வி:** விஞ்ஞானத்தால் ஆபத்தா பித்தா?



**பதில்:** ஆம்பிளையின் பங்களிப்பு இல்லாமலேயே ஆள் உருவாகும் மர்மத்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்று அறிவித்து ஆண்களின் வயிற்றில், புளியைக் கரைக்கிறார்களே...!

வி.சாந்தினி,
வெள்ளவத்தை.



**கேள்வி:** பித்தா! நேரத்துடன் திருமணம் செய்து இளமையை வீணே தொலைப்பதில் எனக்கு உடன்பாடில்லை. நாற்பது வயது தண்டும் வரைக் காத்திருக்கப் போகிறேன். உங்கள் 'அட்வைஸ்' என்னவோ...?

**பதில்:** நாய்க் குண வயது வரும் வரைக் காத்திருக்கப் போகின்றீர்களா? கவனம். குமர் வற்றிக் குரங்காகி விட்டால் அப்புறம் ஒரு நாயகனும் அல்ல, நாயும் ஏறெடுத்துப் பார்க்காது!

ஆர்.விவேகா,
உரும்பிராய்.

**கேள்வி:** திருமணம் சுவையா? இல்லை சுமையா?

**பதில்:** சுவையான சுமை.

ஆர்.டேவிட்,
உப்புவெளி.

**கேள்வி:** பித்தா! 'பெண் என்றால் பேயும் இரங்குமாமே'?

**பதில்:** இனம் இனத்துக்காக இரங்குவதில் என்ன ஆச்சரியம்...!

ப. கோகிலா,
பதுளை.

**கேள்வி:** கண்ட இடத்தில் மேயும் புத்தி ஆண்களுக்கு எப்படி வந்தது?

**பதில்:** சேற்றைக் கண்டால் மிதித்து, தண்ணீரைக் கண்டால் கழுவித் தப்பிக் கொள்ளும் பரவணிப் பழக்கம் ஆணினத்துக்குப் பரம்பரையாக வரும் பிறப்புரிமை.

ஷர்மிளா,
உயன்வத்தை.

**கேள்வி:** எனது காதல் விவகாரம் இப்போது நீதிமன்றத்தில். மூடிய அறைக்குள் நம் இருவருக்கும் மட்டும் தெரிந்த விடயத்துக்கு சாட்சியம் கேட்கிறார்கள்...!

**பதில்:** கடலில் கப்பல் போன தடத்தைக் காட்டும்படி கேட்கும் கோரிக்கை இது.

கே. குணா,
அங்குலான.

**கேள்வி:** 'ஒத்துழையாமை' இயக்கத்தை முதலில் ஆரம்பித்தவர் காந்திஜியா?

**பதில்:** இல்லையே. கணவன்மாரைத் தம் சொற்படி ஆட்டுவிக்க சரித்திர



காலம் தொட்டே மங்கையர் பயன்படுத்திய படுக்கையறைத் தந்திரமே இதுதான். முதலில் தலையணை மந்திரம். சரிவரா விட்டால் பின்னர் ஒத்துழையாமைத் தந்திரம். இந்த இரண்டுக்கும் மசியாத - மடங்காத - மாவீரர்கள் வெகு குறைவு.

---

## தடுமாறாத....

(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் காலணியானது உங்கள் பாதங்களின் எலும்புகள் மற்றும் இணைப்புகளுக்கு எந்த அதிர்வையும் தராமல் பராமரிக்கும். காலணிகளின் உள்புறம் குஷன் போல் இருந்தால் அது பாதங்களுக்கு ஓய்வளிக்கும்.

* முன்புறம் கூர்மையாக உள்ள காலணிகளை வாங்காதீர். இதனால் கால் விரல்கள் ஒன்றையொன்று இறுக்கிப் பிடித்த நிலையிலிருக்கும். காற்று புகவும் வாய்ப்பிருக்காது. முன்புறம் சற்று அகலமாக விரல்கள் கண்ணுக்குத் தெரியுமளவில் காலணிகள் வாங்க வேண்டும்.

* காலணியை அணிந்த பிறகு தங்கள் பெருவிரல், சிறுவிரல் மற்றும் குதிக்கால் எந்த வித அழுத்தத்துக்கும் உள்ளாகாமல் இருக்கின்றனவா என்பதைக் கவனமாக பார்க்க வேண்டும்.

* சிறந்த காலணி வாங்க இதோ ஒரு அருமையான யோசனை! ஒரு வெள்ளைக் காகிதத்தில் உங்கள் பாதங்களை வரைந்து கொள்ளவும். இதனை வாங்கும் காலணியின் உள்ளே அப்படியே வைக்கவும். அது எங்கும் வளையாமல் அப்படியே இருந்தால், உங்களுக்குச் சரியான காலணி கிடைத்துவிட்டது என்று அர்த்தம்.

* நாள் முழுவதும் நடப்பதால், வேலை செய்வதால் கால் சற்று வீங்கி இருக்கும். ஆகவே, காலணிகளை எப்போதும் மாலைவேளையிலேயே வாங்கவும்.

### குழந்தைகளுக்கான காலணிகள்

குழந்தைகள் வளர்வதால் அவர்களின் காலளவும் மாறும். ஆகவே அவர்களுக்கு அடிக்கடி காலணி வாங்க வேண்டி இருக்கும். இந்த பிரச்சினையிலிருந்து விடுபட சிலர் அவர்களுக்கு பெரிய காலணி வாங்குவார்கள். ஆனால், இது அவர்களின் காலுக்கு நல்லதல்ல.

பாதங்களை விட பெரிதான அல்லது சிறிய காலணிகள், நடக்கும் போது பாதங்களுக்கு முழுமையான வசதியைத் தரா. இதனால் குழந்தைகள் நடை மாறக்கூடும். மற்றொரு விசயம் இதனால் கால் வழுக்கிவிடும் ஆபத்தும் உள்ளது. ஆகவே அவர்களுக்கு அவ்வப்போது- அதாவது பாத அளவு ஏற்ப - காலணிகள் வாங்குவது அவசியம்.

### உடற்பயிற்சியும் அவசியம்

சீரான உடற்பயிற்சியானது பாதங்களின் தசை நார்களுக்கு உறுதியளித்து பாதங்களின் நோய்களை அகற்றும். பகலில் 2 முறை 10 - 10 நிமிடங்கள் வரை சாதாரண உடற்பயிற்சி செய்வது பாதங்களுக்கு ஆரோக்கியம்.

* கால் விரல்களை ஆதாரமாகக் கொண்டு உங்கள் பாதங்களின் குதிக்காலை மேலே தூக்கவும். பிறகு முழு பாதத்தையும் தரை மீது வைக்கவும். இவ்வாறு இரண்டு மூன்று செய்யவும்.

* கால் விரல்களை முதலில் ஒன்று சேர்த்து, பிறகு, மெதுவாக பரப்பவும். இவ்வாறு இரண்டு முறை செய்யவும்.

* கால் விரலை மேலும் கீழுமாக அசைக்கவும்.

### பாதம் பராமரிப்பு

'பெடிக்யூர்' எனப்படும் பாத பராமரிப்பின் மூலம் பாதங்களில் இறந்த செல்கள் அகற்றப்பட்டு புத்துயிர் கிடைக்கும். இதனை உங்கள் வீட்டிலேயே கூட செய்து கொள்ளலாம். அல்லது அழகு நிலையத்திலும் செய்து கொள்ளலாம்.

சில அழகு நிலையங்களின் சுற்றுச்சூழல் சுத்தமாக இருக்காது. 'பெடிக்யூர்' செய்த பிறகு பாதங்களில் பூஞ்சை நோய்த் தொற்று அல்லது பிற வகை சரும நோய்கள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

### பாதங்களில் துர்நாற்றம்

வானிலை ஈரப்பதமாக இருக்கும் காலங்களில் பாதங்களில் ஒரு வித துர்நாற்றம் வீசும் பிரச்சினை ஏற்படக்கூடும்.

இதிலிருந்து தப்பிக்க சில வழிமுறைகள்:

* காலணி மற்றும் காலுறை ஆகியவற்றைத் தொடர்ந்து 6 மணி நேரத்துக்கு மேல் அணியாதீர். வேலை செய்யும்போது அவ்வப்போது அவற்றைக் கழற்றி வைப்பது நல்லது.

* துர்நாற்றத்திலிருந்து விடுபட பாதங்களுக்கு 'டியோடரன்ட்' பயன்படுத்தலாம்.

* மழைக்காலத்தில் காலணி நனைந்து விடும். அதனால் வீட்டுக்கு வந்ததும், காலணிகளை காற்றில் உலர வைக்கவும், வெயிலில் வைத்துக் கூட காயவைக்கலாம்.

* ஈரப்பதத்தால் காலணிகளில் பூஞ்சை படக்கூடும். இதன் காரணமாகவும் கால்களில் துர்நாற்றம் வீசும். ஆகவே, காலணிகளை காயவைத்த பிறகே அணிந்து கொள்ளவும்.

* நீரிழிவு நோயாளிகள் தங்கள் காலணி விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவும். ஏனெனில் அவர்களின் பாத நரம்புகள் சரிவர வேலை செய்யா. பாதிக்கப்பட்ட நரம்புகளால் பாதங்களின் வடிவம் மற்றும் அளவில் வித்தியாசம் தென்படும்.

ஆகவே நீரிழிவு நோயாளிகள் பாதுகாப்பான காலணிகளை வாங்கி அணிவதே நல்லது. அதோடு நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரையின் அளவு அதிகமானால் பாதங்கள் வீங்கிவிடக்கூடும். அப்போது உடனடியாக காலணியை மாற்றி விட வேண்டும்.

ஏனெனில், மோசமான காலணிகளால் ஆறாத காயங்கள் ஏற்படக் கூடும். பிறகு, சரிவர சிகிச்சை அளிக்காவிட்டால் கால்களையே வெட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

உங்கள் கால்களில் ஆணி, பித்த வெடிப்பு என்று எந்த ஒரு வலி இருப்பினும், உடனே மருத்துவரை அணுகுவது நல்லது.

நமது உடலின் முழு எடையையும் தாங்குகிறது நமது பாதங்கள். அந்த பாதங்களுக் கேற்ற காலணிகளை கவனமுடன் பார்த்து வாங்கினால் தேவையற்ற பிரச்சினைகளிலிருந்து தப்பிக்கலாமல்லவா?

---

## பொட்டம்மான்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சமயத்தில், நாராயணனின் இந்த நிபந்தனை விதிப்பைத் தமிழர் தரப்பு 'ஸீரியஸாக' கவனத்துக்கே எடுத்துக்கொள்ளாது என்பதும் தெளிவு. இவ்விவகாரங்களை ஒட்டி ஒரு கொசுறுத் தகவலும் உண்டு. இந்திய உயரதிகாரிகள் - சம்பந்தர் சந்திப்பின்போது கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டமை குறித்து இந்தியத் தரப்பின் அதிகாரிகள் பின்னர் தங்களுக்குள்ளேயே கவலைப்பட்டு விசனித்துக்கொண்டார்கள். மூத்த தமிழ் அரசியல்வாதியான சம்பந்தருடன் - அதுவும் அவரது இனம் நொந்து, நொடித்து, வேதனையில் இருக்கும்போது -- தாம் காட்டமாக அவரோடு மோதி விவாதித்தமை குறித்து நாராயணன் தமது சக அதிகாரிகளுடன் மனம் நொந்துகொண்டாராம். அதனையடுத்து கொழும்புக்கான இந்தியத் தூதர் அலோக் பிரசாத்தை அழைத்த நாராயணன், எப்படியாவது சம்பந்தரைச் சந்தித்து தாஜா செய்து, சமாளித்து, அவரை சாந்தப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டாராம்.

அதன்படி, இந்திய உயர்மட்டக்குழு கொழும்பை விட்டுப் புறப்பட்டதும் சம்பந்தரை மீண்டும் ஒரு சந்திப்புக்கு அழைத்து, அவருடன் நட்புறவுடன் உரையாடி சமரசம் செய்து சமாளித்தாராம். கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத். ✱

## ஈழத்தில்....

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"வீரமைந்தர் வேலொடும் தோன்றுக வேங்கையென்று பெயர்பெற வாழுக"

எனப் பாடினார் கவிஞர். அவர் பாடியபடியே வேங்கைகள் தோன்றினார்கள், அவர்களின் போராட்டம் பற்றியும் கவியரசர் கனவு கண்டார்.

"ஏ ஓய் தமிழா ஏ ஓய் தமிழா!
எழில், கலை, காதல் ஒதுக்கி
முடிவை!
நாடெனும் வாளொடு மூட்டுக
போரை!
அழிந்த தில் இப்பணிக் கழிவதே
பெருமை!
வீடணக் குழாத்தை வேரோடு
சாய்ப்பாய்!
குருதியில் குளிப்பாய் கொற்றவர்
ஆண்ட
திருவினை நாட்டை மீட்பதில்
அழிவாய்!"

அவர் கனவு அப்படியே பலித்தது. குருதியில் குளித்தவண்ணம் புலிகள் தங்கள் திருநாட்டை மீட்கப் போராடி வருகிறார்கள். எழுபதுகளின் இறுதியில் பிரபாகரன் தலைமையில் தமிழ இளைஞர்கள் ஆயுதம் தூக்கினார்கள் இருபது ஆண்டுகளில் அந்தப் போராட்டம் வளர்ந்து உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த 20 ஆண்டு காலத்தில் இந்தப் போராட்டம் எத்தகைய மகத்தான வெற்றிகளை ஈட்டியிருக்கிறது என்பதைக் கவிஞர் இன்று இருந்து பார்த்திருந்தால் எவ்வளவு மனம் பூரித்திருப்பார் என்பதை என்னால் உணர முடிகிறது. தம்பி பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் நடத்திவரும் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டத்தைப் பற்றி ஒரு வீரகாவியமே இயற்றியிருப்பார் என்பதில் ஐயம் இல்லை. ✱

# வாக்குகள் சிதறும் ஆபத்து! முஸ்லிம் பிரதிநிதித்துவம் பறிபோகுமா?

வட மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் முடிவடைய முன்பதாகவே - இன்னும் 19 மாதங்கள் இருக்கத்தக்கதாக அரசின் தன்னிச்சையான தீர்மானத்தின் பேரில் அவை கலைக்கப்பட்டு - தேர்தலுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

அரசின் இத்தகைய நடவடிக்கையை முக்கிய எதிர்க் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை கடுமையாக ஆட்சேபித்து - கண்டனங்களை வெளியிட்டிருந்ததுடன் குறித்த மாகாண சபைகளின் கலைப்புக்கு எதிராக ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. நீதிமன்றமும் சென்றன. எனினும், தமக்கு சாதகமான தீர்ப்பை அந்த இருகட்சிகளிலும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

### பல அணிகள் போட்டி

இந்நிலையில் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க, அவ்விரு மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு வேட்பு மனுப்பத்திரங்களைக் கோரி - தேர்தலுக்கான திகதியையும் அறிவித்திருக்கிறார். எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இரண்டு மாகாண சபைகளுக்கும் மொத்தமாக 77 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் தேர்தலில் 2.241 வேட்பாளர்கள் குதித்துள்ளனர்.சிறுபான்மையினங்களைச் சேர்ந்தோரும் கணிசமானளவில் போட்டியிடுகின்றனர்.

எல்லாத் தேர்தல்களிலும் போலவே இம்மாகாண சபைத் தேர்தலிலும் முஸ்லிம் அணிகள் பலவும் ஏட்டிக்குப் போட்டியாகக் களத்தில் குதித்திருக்கின்றன. என்றாலும், கிழக்கிற்கு வெளியே முன்னர் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் இந்தளவு முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிட்டிருக்கவில்லை.

### தொடரும் பிரதிநிதித்துவம்

அப்போதெல்லாம் ஐ.தே.க., சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய பிரதான கட்சிகளில் ஓரிரு முஸ்லிம் வேட்பாளர்களும், முஸ்லிம் சமூகத்தின் ஏக கட்சியாகத் திகழ்ந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளனர்.

ஆனால் இம்மாகாண சபைத்



தேர்தலில் பல முஸ்லிம் கட்சிகள் போட்டியிடுவதோடு, தேசியக் கட்சிகள் பலவற்றிலும், சுயேச்சைக் குழுக்களிலும் அதிகளவான முஸ்லிம் வேட்பாளர்கள் வரிந்து கட்டிக்கொண்டு களமிறங்கியுள்ளனர்.

இதன் காரணமாக, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் அடிபட்டுப்போய் விடுமோ என்கின்ற அச்சம் எழுந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு மாகாண சபை முறைமை அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து இவ்விரு மாகாண சபைகளிலும் தொடர்ச்சியாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தே வந்துள்ளது. வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்திலும், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களிலும் குறித்த மாகாண சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் முஸ்லிம் உறுப்பினர்கள் அங்கம் வகித்திருக்கின்றனர்.

அத்துடன், வட மத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவை மாவட்டத்திலும், சப்ரகமுவ மாகாணத்திலுள்ள இரத்தினபுரி மாவட்டத்திலும் முஸ்லிம்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இருந்துள்ளது.

### கூலிக்கு மாரடிக்கும் கும்பல்

அவ்விரு மாவட்டங்களிலும் முறையே அப்துல் மஜீத், அபூசாலி ஆகியோருக்குப் பின் எவரும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படவில்லை. அதேவேளை, கேகாலை மாவட்டத்தில் மூன்றாவது முறையாகவும் முஸ்லிம் ஒருவர் எம்.பி.யாகத் தெரிவாகியுள்ளார். கபீர் காஸிம் என்பவரே இப்போதும் எம்.பியாகப் பதவி வகிக்கிறார். இவர் ரணில் விக்கிரமசிங்க அரசில் அமைச்சராகவும் பதவி வகித்திருக்கிறார்.

பொதுவாக சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களுக்கு நாடாளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகவே இத்தகவல்களை இங்கு குறிப்பிட்டோம்.

கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தல்களில் இரத்தினபுரி, பொலன்னறுவை மாவட்டங்களில் தமது

**அஸ்லம் எஸ்.மௌலானா**

பிரதிநிதித்துவத்தை முஸ்லிம்கள் பறிகொடுத்தமை போன்று, இம்முறை மாகாண சபைகளிலும் தமது பிரதிநிதித்துவத்தை இழந்து விடாமல் - அதனைக் காப்பாற்ற வேண்டும் என்பதை உணர்த்துவதும், வலியுறுத்துவதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பல்வேறு அணிகளாகப் பிரிந்து போட்டியிடும் முஸ்லிம் அரசியல் வாதிகள் தத்தம் லாபம்கருதிய செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருகின்றனர். தாம் நிச்சயம் படுதோல்வியடைவோம் என்று தெரிந்தும் சிலர் கூலிக்கு மாரடித்து - சமூகத்தைக் காட்டிக் கொடுக்க முற்பட்டிருக்கின்றனர்.

### உள்வீட்டுக் குத்து வெட்டு

இத்தகைய ஆபத்தான சூழ்நிலையை முஸ்லிம் பொதுமக்கள் உணர்ந்து செயற்படாத வரை, கூலிக்கு மாரடித்து - அரசியல் பிழைப்பு வாதம் நடத்தும் கும்பல்கள் சமூகத்தின் தலை விதியையே மாற்றி எழுதி விடும் என்பதை உறுதியாகக் கூற முடியும்.

இத்தேர்தலில் முஸ்லிம்களின் பிரதான கட்சியான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து யானைச் சின்னத்தில் போட்டியிடுகிறது.

அதே வேளை, ஐ.தே.கட்சியின் நேரடி அங்கத்தவர்களும் யானைச் சின்னத்தில் போட்டியிடுகின்றனர். இந்நிலையில் ஐ.தே.க. மற்றும் மு.கா. வேட்பாளர்களிடையே குத்து வெட்டுகளும் குழிபறிப்புகளும் நிச்சயம் இடம்பெறும். இதனால், இருதரப்பு முஸ்லிம் வேட்பாளர்களும் விருப்பு வாக்குகளில் பின் தள்ளப்பட்டு - எவரும் தெரிவாகாமல் போவதற்கே அதிக வாய்ப்பிருப்பதாக அஞ்சப்படுகிறது.

இதே போன்று, ஆளும் ஐக்கிய சுதந்திர முன்னணியிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் அரச சார்பு முஸ்லிம் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த முன்னணியிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் தமக்குள் பிளவுபட்டு - பின்தள்ளப்படலாம்.

அதேவேளை, வேறு சில கட்சிகளிலும், சுயேச்சை அணிகளிலும் முஸ்லிம் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

### கிழக்கு நிலைமை வேறு

அநுராதபுரம் மாவட்டத்தில் அமைச்சர் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸும், பொலன்னறுவை மாவட்டத்தில் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் தலைமையிலான உலமாக் கட்சியும் போட்டியிடுகின்றன.

பொதுவாக நான்கு மாவட்டங்களிலும் ரவுப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் ஐ.தே.க.யின் யானைச் சின்னத்தில் போட்டியிட, அதன் எதிர்க் கட்சிகள் அரச தரப்புடன் கூட்டுச் சேர்ந்தும் சில முஸ்லிம் கட்சிகள் தனித்தும் தேர்தலில் குதித்திருக்கின்றன.

இதனால், முஸ்லிம் மக்களின் வாக்குகள் கட்சி ரீதியாகவும், ஒரே அணிக்குள் விருப்பு வாக்கு ரீதியாகவும் சிதறடிக்கப்பட்டு - குறித்த மாகாண சபைகளில் கடைசியாக இருந்த பிரதிநிதித்துவங்களையும், முஸ்லிம் சமூகம் பறிகொடுத்து விட்டு கைசேதப்பட வேண்டிய பரிதாபகரமான சூழ்நிலை ஏற்படலாம் என்ற அச்சமும், கவலையும் முஸ்லிம் புத்திஜீவிகளிடையே எழுந்துள்ளன.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரை நாடாளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் முஸ்லிம்கள் பல அணிகளாகப் பிரிந்து போடியிடுகின்ற போதிலும் பிரதிநிதித்துவங்களில் பெரிதாகப் பாதிப்பு ஏற்படுவதில்லை.

### ஒன்றுபடுவதே வழி

ஆனால், கிழக்கு மாகாணத்திற்கு வெளியே முஸ்லிம்கள் செறிவாக அல்லாமல், மாற்று இனத்தவர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறுபான்மையினராகவே வாழ்கின்றனர்.

இந்தநிலையில் முஸ்லிம்கள் தாம் கொண்டுள்ள குறைந்தளவு வாக்குகளை ஒட்டு மொத்தமாக ஏதாவது ஓர் அணிக்கு அளிப்பதன் மூலமே தமது பிரதிநிதித்துவத்தை வென்றெடுக்க முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். ✱

---

## பனையால் விழுந்த படைகளும் ...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேசத்தின் கவனம் இலங்கையில் குவிகின்ற இத் தருணத்தில் நடத்துதல் என்பவற்றை இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப் புலிகள் முயலலாம். சார்க் மாநாட்டுக் காலப்பகுதியில் தலைநகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் தாக்குதலை எதிர்ப்பார்க்கும் பயத்தை அல்லது பதற்றத்தைப் படையினரிடம் தொற்ற வைப்பதன் மூலம் பெருமெடுப்பிலான கைது நடவடிக்கை போன்ற, மனிதவுரிமை மீறல் விடயங்களை நோக்கிப் படையினரைத் தூண்டிவிடவும் முடியும். இதன் மூலம் ஏற்கனவே மனிதவுரிமை விடயத்தில் தோற்றுப் போன நாடாக இருக்கும் இலங்கைக்கு அதிக நெருக்கடிகளை ஏற்படுத்த இயலும்.

### இந்திய அடுக்கடையில் இலங்கையின் பாதுகாப்பு

சார்க் மாநாட்டையொட்டிய இந்தியப் பிரதமரின் வருகையின் மூலம் இன்னுமொரு பிரச்சினைக்கும் இலங்கை அரசு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. இந்தியப் பிரதமரின் பாதுகாப்பிற்கென கறுப்புப்பூனைப் பாதுகாப்பு அணியுடன் கடற்படை, விமானப்படை, இராணுவம் என்பவற்றைச் சேர்ந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான இந்தியப் படையினர் (இவர்களின் எண்ணிக்கை குறித்து முன்னுக்குப் பின் முரணான தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன) இலங்கைக்கு வரவுள்ளனர்.

சார்க் மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் இலங்கைத் தலைநகரின் கடல் மற்றும் வான் பாதுகாப்பை இவர்கள் கையேற்கவுள்ளனர் எனத் தெரிகின்றது. இந்தியப் படையினரின் பணி சார்க் மாநாடு முடிந்த பின்னரும் தொடருமா என்ற சந்தேகமும் எல்லோரிடமும் எழுந்துள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால் இறையாண்மையுள்ள ஓர் அரசு தன்னுடைய பாதுகாப்பை இன்னொரு நாட்டுடன் அடகு வைப்பதை சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பது கேள்விக்குறியே.

குறிப்பாக பௌத்த - சிங்களச் சிந்தனையில் ஊறிய ஜே.வி.பி. ஹெல உறுமய என்பவற்றினதும் ஏனைய கட்சிகளினதும், தென்னிலங்கை மக்களினதும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியேற்படலாம். இது ஏற்கனவே கொதித்துக் கொண்டிருக்கின்ற இலங்கை அரசியலை இன்னும் சூடேற்றி விடும். அது அரசின் இருப்புக்கே ஆபத்தானதாக முடிந்துவிடவும் கூடும்.

சார்க் மாநாட்டின் மூலம் இக்கட்டான நிலைக்குள் சிக்குண்டிருக்கும் இலங்கை அரசுக்கு சாதகமான வழிகள் மிகக் குறைவானவையாகவேயுள்ளன. இந்தச் சவால்களை எதிர்கொண்டு, களமுனை மேலாதிக்க நிலையை பேணிக்கொண்டு, சார்க் மாநாட்டை எவ்வித இடையூறுகளுமின்றி அரசும், படைத்தரப்பும் எவ்வாறு நிகழ்த்திக் காட்டப் போகின்றன என்பதே இப்போது எல்லோர் முன்னாலுமிருக்கின்ற வினாவாகும். ✱

## சொற்சிலம்பம் போட்டி இல. 322

சொற்சிலம்பம் 322 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித் தினம் ஜூலை 20 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 27 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 320 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.322

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | ■ | 9 | |
| 10 | | | | ■ | 11 | | ■ |
| ■ | 12 | | ■ | 13 | | | 14 |
| 15 | | ■ | 16 | | | ■ | |
| | ■ | 17 | | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | ■ | 23 | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.320

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 த | 3 க | ம் | ■ | 4 ப | 5 கு | 6 தி |
| 7 ர | க | ளை | ■ | 8 ப | ரு | க் | கை |
| 9 த | ரு | த் | 10 த | ல் | ■ | க | ■ |
| ம் | ■ | 11 த | லை | ■ | 12 சா | ல் | 13 பு |
| ■ | 14 ப | ல் | வி | 15 த | ம் | ■ | த் |
| 16 த | ரு | ■ | 17 தி | ரு | ■ | 18 பா | தி |
| 19 கு | த் | து | ■ | 20 ம | 21 கா | ■ | ர |
| 22 தி | தி | ■ | 23 மு | தி | ய | வ | ர் |

## சொற்சிலம்பம் போட்டி இல. 322

### இடமிருந்து வலம்

1. அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர்.
4. தலைமுறை.
7. சத்தியவான் உயிர்காத்த மனைவி.
9. சவுக்கு.
10. மேல் மாகாணத்தில் ஒரு மாவட்டம்.
11. பாரமான/அதிக.
12. கட்டு.
13. வயலின் எல்லையில் அமைப்பது.
15. தடுத்து நிறுத்தும் சொல்/வழியில் மறிக்கும் சொல்.
16. மணம்.
17. ஒரு தோல் வாத்தியம்.
18. இதன் முனைக்கு நேர் ஏதுமேயில்லை.
19. கிரீடம்/முடி.
21. அருந்த/குடிக்க
22. செல்வம்.
23. இணைதல்/ ஒன்று சேருதல்/ உடலால் கூடுதல்.

### மேலிருந்து கீழ்

1. உலகை அதிர வைக்கும் ஒரு தீவிரவாதத் தலைவனின் முன் பெயர்.
2. பயன்படுத்தல்/உபயோகித்தல்.
3. மத்திய மாகாணத்தில் ஒரு மாவட்டம்.
4. பிழை அல்ல.
5. எரியும் நிகழ்வு.
6. திக்கு.
8. வரி.
11. கை
13. செழுமை/சீர்ப்பொலிவு
14. விடிதல்.
15. இதைத் தேடித்தான் வாழ்க்கை. ஆனால், பலருக்கு இது கிடைப்பதில்லை.
16. தேகம்
17. தாண்டு.
18. பிடிக்க/தாங்கிக்கொள்ள.
20. சிஷ்யனுக்கு வழிகாட்டி.
21. நெஞ்சு / மார்பு.

## சொற்சிலம்பம் போட்டி இல. 320

1. அ. பத்மலோசனா,
51 ஏ, மேபீல்ட் லேன்,
கொழும்பு -13.
2. மு.சுலோச்சனா,
6/6,விக்டோரிய கோட், 54,
சென்லோறேன்ஸ் றோட்,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
3. பி. அஞ்சலிக்கா,
194, முதலாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

### பாராட்டுப் பெறுவோர்

1. பா.லசந்தபிரியன், கொழும்பு - 13.
2. ப.நாகேஸ்வரி, கல்கிசை.
3. திருமதி ப.இராசையா, முல்லைத்தீவு.
4. சி.நீரஜா, மட்டக்களப்பு.
5. ஜெ.ஏஸ்.பாத்திமாமுஹுசாஸ், புத்தளம்.
6. த.ரஜிதாரன், திருகோணமலை.
7. சி.சண்முகலிங்கம், தெஹிவளை.
8. இ.சுதர்சினி, செங்கலடி.
9. பாத்திமா பஹீமா, மாத்தறை.
10. மங்களம்மனோரஞ்சன் கல்முனை-02.
11. சுமிதா சிவசுப்பிரமணியம். கொழும்பு - 15.
12. சி.நீரஜா முட்டக்களப்பு
13. த.நாகையா, கல்முனை.
14. எஸ்,ஆதிலக்ஷ்மி, எல்ல.
15. சு.திலிபன், வவுனியா.

---

வடிவ...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருந்தான். கலத்தின் சிறிய கரம் ஒன்று வெளிக்காற்றை வாங்கிக்கொண்டது. பற்பல சென்ஸர்கள் செயல்பட்டு இரசாயனக் கலங்களும் பௌதிக அளவெடுப்புகளும் தொடங்கின.

இறுதியில் ரிப்போர்ட் வந்தது.

பிராணவாயு எழுபது சதம்.

ஈரப்பதம் மூன்று சதம்.

வெப்பம் மூன்று டிகிரி.

ஜி சக்தி புள்ளி ஆறு ஐந்து...

''சபாஷ்! கொஞ்சம் குளிரும். கொஞ்சம் குதித்து நடக்கவேண்டியிருக்கும். ஸ்பேஸ் ஸுட்டைக்கூட எடுத்துரலாம் போல இருக்கே!'' என்றான் ராஜன்.

''அவசரப்படாதே. முதல்ல இறங்கலாம்.''

''பஃபர் கதவைத் திற. ஸ்டாண்ட் போடு. நான் முதலில் இறங்கறேன். முப்பது செகண்ட் விட்டே நீ வா. ரேடியோ தொடர்பை விட்டுவிடாதே.''

முதல் கதவு திறந்து மூடி, பின் இரண்டாம் கதவு திறந்து வெளியே படிகள் சரிய ஆத்மா தன் விண்வெளி உடையின் சற்றே அசௌகரியத்தில் மெல்ல இறங்கி அஸ்ட்ராவில் கால்வைத்தான். அழுத்திப் பார்த்தான். கடினமாகத்தான் இருந்தது தரை. மற்றொரு தப்படி பரிச்சயமில்லாத மெல்லிய ஆகர்ஷணத்தில் பந்து போல் எவ்வி, சுதாரித்துக்கொண்டான். அவசரப்படாதே, மெல்ல நட! நடந்தான். இந்த நடையைச் சற்று நேரத்தில் பூமியில் எல்லாரும் டி.வியில் பார்ப்பார்கள். சற்று வேடிக்கையாக இருக்கும். மிதப்பான குதித்துக் குதிக்கும் நடை. கனவுக் காட்சிபோல அலை பாய்ந்த நடை.

திரும்பி ராஜன் இறங்குவதைப் பார்த்தான்.

''ராஜன், ரேடியோ செக்.''

''ஓ.கே. க்ளியர்.''

''பின்னால் சமதூரத்தில் வா. குறைக்காதே. நான் நின்றால் நில். நடந்தால் நட.''

''ராஜன்.''

இந்தப் பிரம்மாண்டமான அவை என்ன? கட்டடங்கள்தாம். அவற்றுக்கு முன் மிகச் சிறிதாக உணர்ந்தான். ஒரே சீராக நீட்ட நீட்டமாக மௌன மௌனமாக! ஆம், மௌனம். காற்றுச் சலனம் இல்லை. நாதம் இல்லை. மிகப் பெரிய மௌனம். இரைச்சலற்ற இரைச்சல்.

தெருக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வடிவங்கள்தான் தாறுமாறாகப் பதிந்திருந்தன. அங்கொன்று இங்கொன்று மிக அருகே இரண்டு. சில பெரியவை. சில இன்னும் பெரியவை. அவை என்ன?

அவற்றுக்குள் என்ன இரகசியங்கள் அடங்கியிருக்கின்றன? எப்படி அறிவது? உயிர் வடிவம் இங்கே நிச்சயம் இருந்தாக வேண்டும். அதற்கான சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் எப்படி இருப்பார்கள்? அவர்கள் பாஷை என்ன? அவர்கள் பேச்சு வடிவம் என்ன? ஓசையா, சமிக்ஞையா? எக்ஸ்ரேயா? எலக்ட்ரான் நடனங்களா? துகள்களா? வர்ணக் காற்றுகளா? எண்ணச் சலனங்களா? ஒன்றுமே சொல்ல முடியாது. அவர்கள் ஏன் மௌனமாக இருக்கிறார்கள்? எல்லாரும் எங்கே? ஒளித்துக்கொண்டு இருக்கிறார்களா? இல்லை பேசுகிறார்களா? எட்டிப் பார்க்கிறார்களா? பேச்சு எனக்கும் கேட்குமா? பார்வை என்றால் கண்ணால் பார்த்தலா? காலால் உணர்தலா? கண்? கால்? இவையெல்லாம் மனிதஅங்கங்கள். அவர்களுடைய அங்கங்கள் எப்படி இருக்கும்?

''ஆத்மா, எவ்வளவு தூரம் போக உத்தேசம்?''

''அரைமணி.''

''ஒன்றுமே நிகழவில்லையே!''

''எப்படிச் சொல்ல முடியும்? நம்மால் உணரமுடியவில்லை, அவ்வளவுதான்.''

பயம் இல்லை. இந்த விநோத பூமியில் ஏதோ ஒரு வசீகரம் இருக்கிறது.

''முதலில் அந்தக் கட்டடம் போல் இருப்பதைக் கிட்டத்தில் பார்க்கலாம். ஏதாவது வாசல் தெரிகிறதா பார்க்கலாம்.

''சரி.''

அண்மையில் கட்டடம் சற்றே சொரசொரவென்று இருந்தது.

தூரத்திலிருந்து தெரிந்த ஒழுங்கு இல்லை. மேலும் கீழும் பார்த்தான். ம்ஹூம். ஓர் இடத்திலாவது பிளவோ பிரிவோ இல்லாத சுமார் இருநூறு அடிச் செங்குத்து. இது என்ன? உலோகமா, பாலிமர் கூட்டுப் பொருளா? இயற்கையா, செயற்கையா என்ன? எதற்காக இந்தச் சொரசொரத்த ஒழுங்கு?

சுற்றி வந்தான். பின்புறம் முன்புறம் பக்கவாட்டில் எல்லாம் ஒன்றே. எந்தப் பக்கத்திலும் வாசல் இல்லை.

''ஆத்மா கவனித்தாயா?'' என்றான் ராஜன்.

''என்ன?''

''மாறுதல். நாம் வரும்போது பார்த்த அமைப்பு இப்போது சற்று வேறுபட்டு இருக்கிறது. கட்டடங்கள் சற்று மாறியிருக்கின்றன.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''தூரத்திலிருந்து பார்த்தபோது அந்தக் குட்டிக் கட்டடம் பெரிய கட்டடத்திற்கு இடப் புறத்தில் இருந்தது. இப்போது சற்று முன் தள்ளி இருக்கிறது.''

''எனக்கு அப்படித் தெரியவில்லை.''

''எனக்குத் தெரிகிறது.''

''பிரயாணக் களைப்பில் இப்படி ஒரு பர்ஸ்பக்டிவ் ஏமாற்றம் நிகழ்வதுண்டு. கற்பனை செய்யாதே எதையும்.''

''இல்லை ஆத்மா. ஒரே இடத்தில் நின்று பார். கட்டடங்கள் லேசாக மாற்றி அமைத்துக்கொள்வது போலத் தோன்றுகின்றது.''

''ராஜன்! நீ சொல்வது நிஜமா இருக்கலாம். மாறுதல் இருந்தால் மிக மெலிதான மாற்றம்போல் தோன்றுகிறது. தரையின் வடிவத்தில் ஏதாவது இயக்கங்களாக இருக்கலாம்.''

''ஆத்மா மேலே பார்!''

ஆத்மா நிமிர்ந்து பார்த்தான். ராஜன் குறிப்பிட்ட இடத்தில் ஒரு சிறிய நீண்ட சதுரப் பிளவுபோல் தெரிந்தது.

''சபாஷ்! அதுதான் வாசல். அவ்வளவு உயரத்தில் வாசல் வைத்திருக்கிறார்கள்.''

''என்ன செய்யலாம்?''

''நீ கலத்திற்குச் சென்று பர்ஸனல் எலிவெட்டர் பாக்கேஜ் கொண்டுவா.''

''எடுத்து வந்திருக்கிறேன், எதற்கும் உபயோகப்படும் என்று!''

''நல்லது! என் அருகில் வா! என் முதுகில் அதைப் பொருத்து.''

ராஜன் அந்தச் சிறிய ரொக்கெட் இன்ஜினை அவன் முதுகில் பொருத்த அதன் கண்ட்ரோல் கேபிள் இணைப்பை தன் மணிக்கட்டில் பொருத்திக்கொண்டான்.

''ஆத்மா! ஜாக்கிரதை.''

''கவலைப்படாதே, அபாயமென்றால் திரும்பிவந்துவிடுவேன்.''

'அப்' பட்டனைத் தட்டினான். முதுகில் அதிர்வுகள் தெரிய சுலபமாக அவன்.

''என்ன செய்யப்போகிறாய்?''

''மேலே சென்று பார்க்கப்போகிறேன்.'' மேலே எழுப்பப்பட்டு மிதந்தான். திறமையாக இடம், வலம், மேல், கீழ் பட்டன்களை இயக்கி அந்த நீண்ட சதுர வாசலுக்கு வந்தான். பத்தடிக்கு ஐந்தடி இருந்தது. உள்ளே இருட்டாக இருந்தது. மண்டை டோர்ச்சை இயக்கினான். ஒளிவட்டம். என்ன என்னவோ சதுரங்கள் தெரிந்தன. மேலே கரும் பச்சையாக ஜெலி போல இருந்தது.

''என்ன தெரிகிறது?''

''இதுதான் பிரதான வாசல் போலத் தோன்றுகிறது. இருட்டாக இருக்கிறது. உள்ளே செல்லவா?''

''அதிக தூரம் வேண்டாம்... ரேடியோ தொடர்பு... ஆத்மா ஆத்மா, லுக் அவுட்!'' ராஜன் படபடத்தான்.

''என்ன ராஜன்?''

''பின்னால் பார், பின்னால் பார்!''

ஆத்மா திரும்பினான்.

கட்டடத்தின் இடப்புறத்தில் பொதிந்திருந்த ஏதோ ஒன்று மெல்ல நீண்டு அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. ஒருகணம் குழப்பநிலையில் தப்பான பட்டனை அழுத்திவிட, ரொக்கெட் அவனை நேராக அந்த நீட்டலின் முனையில் இருந்த ஒரு பிளவுக்குள் செலுத்திவிட, அதன் பிடிப்பில் அகப்பட்டுவிட்டான். இப்போது நான்கு பட்டன்களும் செயல்படவில்லை.

''ஆத்மா! ஆத்மா! எங்கே இருக்கிறாய்?''

''ராஜன், ஒரு பிளவில் சிக்கிக் கொண்டிருக்கிறேன். அதை அகற்றினால்தான் வெளிவர முடியும். உடனே உன் உதவி தேவை. நீ மேலே வர வேண்டும்.''

''இரு, மற்றொரு எலிவேட்டர் எடுத்து வருகிறேன்.''

ராஜன் ஆயத்தமாக ஓடத் தொடங்க, ஆகர்ஷணக் குறைவால் பந்தாக எம்பினான்.

அப்போது கட்டடத்தின் கீழ்ப்பகுதியிலிருந்து மற்றொரு நீட்டல் மெதுவாகப் புறப்பட்டு ராஜனை அணுகி அவன் பாதையில் குறுக்கிட, அந்த நீட்டலின் முடிவில் இருந்த பிளவில் அவன் சிக்கிக்கொண்டான்.

''ராஜன்! ராஜன்!''

''ஆத்மா, நான் கீழே சிக்கிக்கொண்டுவிட்டேன்!''

''அமைதியாக இரு. அழுத்துகிறதா?''

''இல்லை, ஆனால், வெளியே வர முடியவில்லை... இப்போது என்ன ஆகும்?''

''பொறு! பொறு! லெட் மி திங்க்.''

சற்று நேரம் மௌனம்.

''ராஜன், எனக்கு ஒன்று தோன்றுகிறது!''

''என்ன?''

''அஸ்ட்ராவின் உயிர் வடிவம் இந்தக் கட்டடங்கள்தான்! அதன் விரல்களில் சிக்கியிருக்கிறோம்.''

* * *

பி.கு.:அஸ்ட்ரா பதினெட்டின் கோரல் மொழியில் அனுப்பப்பட்ட ஓர் அவசரச் செய்தியின் மொழிபெயர்ப்பு:

*தலைவர் அவர்களுக்கு,*

*சற்றுமுன் விண்வெளியில் இருந்து ஒரு மிகச் சிறிய கப்பல் வந்து இறங்கி உருபுவின் மடியில் இறங்கியது. அதிலிருந்து தானாக இயங்கும் இரண்டு சிறு வடிவங்கள் வெளிவந்து வேகமாக என்னை நோக்கிவந்தன. சிறிய பொருள்களில் ஒன்று மேலேறி என் வாயை நோக்கிப் பறந்துவர அதை மேற்கையால் பிடித்தேன்.*

*இரண்டு பொருள்களுக்கும் சலனம் இருக்கிறது. இரண்டையும் ஒன்று சேர்த்துக் கடினப் பெட்டிக்குள் வைத்திருக்கிறேன். வசீகரமாக இருக்கின்றன. தலைவர் அவர்களுக்குச் சமயம் இருக்கும்போது வந்து பார்க்கலாம்.*

*தங்கள் பொறுப்புள்ள,*
*நாற்பத்திரெண்டாம் குடிமகன்.*

*நன்றி :- சுஜாதா*

# மன்மோகன் அரசின் தலைக்கு மேல் கத்தி!

'காலைச் சுற்றிய பாம்பு கடிக்காமல் விடாது' - என்பார்கள்.

அதேபோல இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசைக் கூட்டுச் சேர்ந்து சுற்றிவளைத்த இடதுசாரிகள் அரசின் காலை வாரிவிடாமல் விட்டு வைக்கவில்லை. எதிர்பார்த்தபடியே கடைசியாக வாரிவிட்டார்கள்.

இனியும் தற்போதைய காங்கிரஸ் அரசு தப்பிப்பிழைத்து நின்று நீடிக்குமா என்பதே இன்றைய கேள்வி.

ஆட்சிப் பெரும்பான்மையைத் தக்க வைத்தல் என்ற தராசுத் தட்டு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமுமாக மாறிமாறி சாய்வதால் மன்மோகன் அரசின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது.

'மழை வந்தாலும் வரலாம். வராமலும் போகலாம்!' - என்ற காலநிலை அறிவிப்பு மாதிரி 'மன்மோகன் அரசு தப்பிப் பிழைத்தாலும் பிழைக்கலாம். இல்லையேல் தலை கவிழ்ந்தாலும் கவிழலாம்'- என்ற நிலையிலேயே இந்திய மத்திய அரசு பற்றிய ஆரூடம் காணப்படுகின்றது.

இந்திய - அமெரிக்கா அணுசக்தி ஒப்பந்த உடன்பாடு பற்றிய இணக்கத்துக்கு மன்மோகன் சிங் அரசு ஆரம்பத்தில் பச்சைக்கொடி காட்டியபோது இந்த அரசுக்கு 'சனி பிடித்து விட்டது.'

தீவிர அமெரிக்க எதிரிகளான இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியினர் இந்த ஒப்பந்தத்தை முழு மூச்சாக எதிர்த்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் குறித்து மேற்கொண்டு மன்மோகன் அரசு ஓரடி எடுத்து வைத்தாலும் தாம் அரசைக் கவிழ்க்கப் பின் நிற்கமாட்டார்கள் என இடதுசாரிகள் தெளிவாக அறிவித்திருந்தனர். இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த 59 எம்.பிக்களின் ஆதரவு இல்லையேல் நாடாளுமன்றில் மன்மோகன் அரசு பெரும்பான்மையை இழக்கும், கவிழும், அதனால் தேர்தல் வரும் என்ற எதிர்பார்ப்பும் நீடிக்கிறது.

ஆனால், பொதுத்தேர்தலுக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கும் நிலையில் இப்போதே ஆட்சியை இழக்க காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை.

அதனால், இடதுசாரிகள் அரசுக்கான ஆதரவை வாபஸ் பெற்றாலும் கூட, அரசைக் கவிழ விடாமல் எஞ்சிய காலத்துக்கும் கொண்டிழுத்து, ஆட்சியைத் தொடரவே காங்கிரஸ் துடியாய்த் துடிக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தல் ஒன்றைச் சந்திப்பது தனக்கு - பேரடி - பேரிடி - ஆக அமையும் என்பது காங்கிரஸ் கட்சிக்கு நன்குதெரியும்.

விலைவாசி வானத்தைத் தொட்டு நிற்கும் இச்சந்தர்ப்பதில் தேர்தலில், வெல்லவேமுடியாது என்ற உண்மை காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு நன்குதெரியும். இந்தியாவின் பணவீக்கம் கடந்த 13 வருடங்களில் இல்லாத உச்ச நிலையாக 11.5 வீதத்தைக் கடந்த வாரம் எட்டியது. உலக உணவு விலைவாசி உயர்வுச் சிக்கல் இந்தியாவையும் பீடித்து விட்டது.

எனவே, இப்போதைய கட்டத்தில் தேர்தலுக்கு முகம்கொடுப்பது, ஆளும் கட்சிக்கு வினையை விலைக்கு வேண்டுவதாகவே இருக்கும் என்பதும் அந்தத் தரப்புக்கு நன்கு புரிந்த அம்சம்தான்.

எனினும், அமெரிக்காவுடனான ஒப்பந்தம் இந்தியாவின் மின் உற்பத்தி போன்ற துறைகளுக்கு அத்தியாவசியம் என்பதைப் பிரதமர் மன்மோகன் நன்குணர்ந்துள்ளார். எனவே தமது அரசின் ஆட்சி கவிழ்ந்தாலும் கூட இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படவேண்டும் என்பது அவரது விடாப்பிடியான நிலை.

மன்மோகன் பிரதமரான போதே தீவிர வலதுசாரியான இவரும் இடதுசாரிகளும் எவ்வாறு ஆட்சியில் ஒத்துப்போவர் என்பது ஆச்சரியத்துடன் பலராலும் பார்க்கப்பட்ட ஒருவிடயமாக அமைந்தது. 1991இல் நரசிம்மராவ் அரசில் மன்மோகன் சிங் நிதியமைச்சராக விளங்கி, திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த தொடங்கியதிலிருந்தே மன்மோகன் சிங் - இடதுசாரிகள் பகை தொடங்கிவிட்டது. அன்றிலிருந்து கீரியும் பாம்புமாகவே இவ்விருதரப்பினரும் இருந்து வந்துள்ளனர்.

எனினும், அரசியல் நிர்ப்பந்தம் இருதரப்புகளையும் இணங்கிவர வைத்தது. குறிப்பாக காங்கிரஸ், இடதுசாரிகள் ஆகிய இருதரப்பினருக்கும் பொது எதிரியான பா.ஜ.கவை வீழ்த்தும்







ஒரே நோக்கில் காங்கிரஸை இடதுசாரிகள் தலைமேல் வைத்துக் கொண்டாடினர். இந்த நான்கு ஆண்டு காலமும் ஆட்சி இந்த அடிப்படையில்தான் தொடர்ந்தது.

கடந்த ஆண்டு நடுப்பகுதியிலேயே இந்த அணு ஒப்பந்த சர்ச்சை ஆரம்பமாகி விட்டது. எனினும், மன்மோகன் அரசு அமெரிக்காவிடம் கால அவகாசம் கோரி காலம்தாழ்த்திச் சமாளித்து வந்தது.

## தப்பிப் பிழைக்குமா காங்கிரஸ் ஆட்சி?

ஆனால், இப்போது தீர்க்கமான தருணம் வந்துவிட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி, ஓகஸ்ட் மாதத்தில் அமெரிக்க காங்கிரஸில் அதற்கான அனுமதியைப் பெற்றாக வேண்டும் .

அங்கும் தொடர்ந்து எட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்த புஷ் அரசின் பதவிக்காலம் முடிகிறது. இதனால், இனிமேலும் இந்திய அரசால் விடயத்தை ஒத்திப்போட முடியாதுள்ளது.

காங்கிரஸ் கட்சி அரசின் ஆட்சியின் ஆயுளைச் சுருக்கிவிடும் வல்லமை இந்த ஒப்பந்தத்துக்கு உள்ளது என்பதை பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா நன்குணர்ந்துள்ளது.எதிர்க்கட்சித் தலைவரும் அடுத்த பிரதமர் என கருதப்படுபவருமான எல்.கே. அத்வானி இந்த ஒப்பந்தத்தை ஆதரிக்கிறோம் என வாய்தவறிக் கூறியும் உள்ளார்.

உள்ளூற அமெரிக்க சார்புக் கட்சியான பா.ஜ.க. தற்போதைய அரசைக் கவிழ்க்கும் ஆவலில் உள்ளது.

இப்போது தேர்தல் வந்தால் பருத்த பெரும்பான்மையுடன் ஆட்சி தம்மடியில் வந்துவிழும் என்பது அக்கட்சியின் நம்பிக்கை. நப்பாசையும் கூட. எனவே, இடது சாரிகள் - காங்கிரஸ் மோதலில் அக்கட்சி நன்கு குளிர்காய்ந்து வந்தது.

டோக்கியோவில் நடைபெற்ற 'ஜி-8', நாடுகள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் பங்குபற்றக்கூடாது என இடதுசாரிகள் வற்புறுத்தின. அந்த மாநாட்டுக்குச் சென்றாலேயே ஆட்சியைக் கவிழ்க்கவே கவிழ்ப்போம் என்ற தீர்க்கமான எச்சரிக்கை இடதுசாரிகளால் விடுவிக்கப்பட்டது.

இதனால், ஆளும்கட்சியின் நிலையும் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையானது ஒருபுறம் ஒப்பந்தம் இன்றேல் தாம் பதவி விலகி விடுவார், என மன்மோகன் பயமுறுத்துகின்றார்: மறுபுறம் இடதுசாரிகளின் தொந்தரவு.

இத்தகைய பின்புலத்தில்தான் இடதுசாரிகளின் ஆதரவை இழந்தும் அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்தத்துக்குப் போகும் முடிவை காங்கிரஸ் அரசு எடுத்தது.

இச்சமயத்தில்தான் காங்கிரஸும் பிரதான எதிர்கட்சியான பாரதீய ஜனதாவும் எதிர்பாராத ஒருமுனையிலிருந்து அரசுக்கு ஆதரவுக் கரம் நீண்டிருக்கின்றது. இந்தியாவின் மிகப் பெரும்மாநிலமான உத்தரப்பிரதேசத்தின் பிரதான எதிர்கட்சியான முலாயம் சிங் யாதவின் சமாஜவாதி கட்சியிடமிருந்தே அந்த நேசக்கரம்.

சோனியா காந்தி அரசியலுக்கு வந்த நாள் முதல் கொண்டே கடுமையாக அவருடன் முட்டிமோதி வந்த முலாயம், பலரும் மூக்கில் விரல்வைக்கும் விதமாக இப்போது காங்கிரஸ் அரசுக்கு ஆபத்பாந்தவனாக மாறியுள்ளார். இவரின் கட்சிக்கு நாடாளுமன்றில் 39 எம்பிக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களுடன் இன்னும் சில உதிரிக்கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு இடதுசாரிகளின் இழப்பை ஈடுகட்டி ஆட்சியைத் தொடரலாம் என காங்கிரஸ் கருதியது.

ஆனாலும் அதுவும் சரிவரவில்லை. வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழி உடைவதுபோல, முலாயம் சிங் யாதவ் தமது கட்சியின் 39 எம்.பிக்களின் ஆதரவை அரசுக்கு வழங்க முன் வந்தபோதும், அவரது கட்சியின் எம்.பிக்களில் பன்னிருவர் அதை முறித்துக்கொண்டு வெளியே போய் நின்று, காங்கிரஸ் எதிர்ப்பில் பிடிவாதம் பிடிக்கின்றார்கள் .

முலாயம் சிங் யாதவ்வின் முடிவுக்குக் காரணம் என்ன?

காங்கிரஸ், பாரதீய ஜனதா ஆகிய இரண்டினதும் தலைமையிலான பிரதான கூட்டணிகளுக்கு மாற்றாக மூன்றாவது அணி ஒன்று இந்திய அரசியலில் தலை தூக்கியிருக்கும் காலம் இது. அந்த மூன்றாவது அணிக்குத் தலைமை வகித்த முலாயம்சிங் யாதவே திடீரென அதனை அம்போ என்று கைவிட்டுவிட்டு காங்கிரஸ் அரசுக்கு கூஜா தூக்கத் தயாராகி விட்டார்.

இந்த முடிவு மூன்றாம் அணியின் சந்திரபாபு நாயுடு போன்ற தலைவர்களுக்குக் கடும் சீற்றத்தைத் தந்திருகின்றது.

முலாயமின் இந்தத் திடீர் மனமாற்றத்துக்கு உத்தரப் பிரதேச அரசியல்தான் காரணம்.

அங்கு முதல்வர் மாயாவதி கடந்த தேர்தலில் வெல்லக் காங்கிரஸே அவருக்கு உதவியது. வரலாறு காணாத தனிப் பெரும்பான்மையை மாயாவதி பெற்றார். அவரது எழுச்சியை எதிர்கொண்டு முறியடிக்கத் தமக்கு மத்திய அரசின் ஆதரவு அவசியம் என முலாயம் கருதுகின்றார்.

உத்தரப் பிரதேசத்தில் முதல்வர் மாயாவதி, முலாயமின் கட்சியினர் மீது பல வழக்குகளைத் தொடுத்துள்ளார். அந்தச் சூட்டிலிருந்து தப்பவே காங்கிரஸுடன் முலாயமின் தேனிலவு ஆரம்பமாகியுள்ளது.

இதுகண்டு பா.ஜ.க. செய்வதறியாது திகைத்துப்போயுள்ளது.

தேர்தல்வரும், ஆட்சியைப்பிடிக்கலாம் என்ற அக்கட்சியின் கனவு இப்போது தடுமாறுகிறது.

இதேவேளை முலாயம் சிங் ஆதரவு என்பது காங்கிரஸுக்கு முழு வெற்றியல்ல. 1998இல் வாஜ்பாய் அரசைக் கவிழ்க்கும் வரை சோனியாவுடன் கூடிக்குலவியவர் முலாயம். வாஜ்பாய் பதவியிழந்ததும் தடம்மாறி சோனியா பிரதமராகுவதை எதிர்த்தவர்.

இதற்குப் பழிவாங்கும் விதமாக 2004 இல் காங்கிரஸ் அமோக வெற்றிபெற்று ஆட்சியிலமர்ந்தபோது கூட்டணிக் கட்சிக் கூட்டத்துக்கு வந்த முலாயம் கட்சியினரை காங்கிரஸினர் எடுத்தெறிந்தனர். இதற்குப் பழிதீர்ப்போம் என முலாயம் அப்போது சூளுரைத்திருந்தார்.

இன்று முலாயம் சோனியாவுடன் கைகோத்தாலும் அது நம்பகரமான உறவல்ல என்பதை சோனியாவும் அறிவார்.

ஆனால், அமெரிக்காவுடனான அணு ஆயுத ஒப்பந்தம் நிறைவேறவும், அரசு கவிழ்வதைத் தடுக்கவும் இந்தத் தற்காலிக உறவு தவிர்க்க முடியாதது என்று கருதி அதில் இறங்கியிருக்கிறது காங்கிரஸ்.

முலாயமின் 39 எம்.பிக்களில் 27 பேரே இப்போது காங்கிரஸுக்கு ஆதரவுதர முன்வந்துள்ளனர்.

காங்கிரஸ் கூட்டணியில் தற்போது எஞ்சியுள்ள 226 எம்.பிக்களோடு இந்த 27 பேரும் சேர மொத்தம் 253 எம்.பிக்களின் ஆதரவு காங்கிரஸ் தரப்புக்கு இப்போதைக்கு உறுதி.

ஆனால், அறுதிப்பெரும்பான்மையை எட்ட இன்னும் 19 எம்.பிக்களின் ஆதரவு காங்கிரஸுக்குத் தேவை. அதற்காக உதிரிக் கட்சிகளைத் தேடிஓடும்நிலை.

அதேசமயம் காங்கிரஸ் அரசை எதிர்ப்பதில் கங்கணம் கட்டிநிற்கும் பாரதீய ஜனதா (130 எம்.பிக்கள்), இடதுசாரிகள் (59 எம்.பிக்கள்), பகுஜன் சமாஜக் கட்சி (17 எம்.பிக்கள்), சிவசேனா (12 எம்.பிக்கள்), அகாலிதளம் (8எம்.பிக்கள்), பிஜூ ஜனதா தளம் (11 எம்.பிக்கள்), தெலுங்குதேசம் (5 எம்.பிக்கள்), ஜார்க்கண்ட் மோர்ச்சா (ஓர் எம்.பி) ஆகிய தரப்புகளிடம் 243 எம். பிக்கள் உள்ளனர்.

இந்த இரு தரப்புகளிலும் சேராமல் இருக்கும் எஞ்சிய 47 உதிரித் தரப்பினரின் ஆதரவு எந்தப் பக்கமோ அதுவே இந்த அரசு தொடருமா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கப்போகின்றது.

எது எப்படியென்றாலும், நாடாளுமன்றில் தனது அரசின் பெரும்பான்மையை நிரூபித்த பின்னரே அமெரிக்காவுடன் அணுசக்தி ஒப்பந்தம் செய்யப்படும் என்ற காங்கிரஸ் அரசின் அறிவிப்பு, பெரும்பான்மையை நிரூபிப்பதில் அந்த அரசுக்கு உள்ள உறுதியையே வெளிப்படுத்துகின்றது.

எஸ். சுரேந்திரஜித்

## தூண்டில்....

(13ஆம் பக்கத் தொடர்சி)

கதைத்தான். எனினும் குரங்கு பிடிக்கப் போய் பிள்ளையாரான கதைதான்.

''முகுந்தன் ... தேவையில்லாத புறோக்கா வேலையை விட்டுட்டு உங்களுக்கு என்னிலை விருப்பம் என்றால் சொல்லுங்கோ..'' அவளது நேரடியான பதிலில் அவன் ஒரு கணம் அதிர்ந்துப்போய் செயலற்று நின்றான். இது அவன் சற்றும் எதிர்பாராத பதில். எனினும், இனிப்பான பதில். கரும்பு தின்னக் கைக்கூலியா? ஆனாலும் நண்பனை நினைத்துத் தயங்கினான்.

'' யோசிச்சுச் சொல்லுங்கோ முகுந்தன்...'' கண்களை அசைத்துக் கூறிவிட்டு சிட்டெனப் பறந்தாள் ராணி. அவனுக்கோ பெருங்குழப்பம். நண்பனிடம் எப்படிச் சொல்வது...? நண்பனுக்கு விரோதமாக எப்படி இந்தக் காதலை ஏற்றுக்கொள்வது? இருதலைக்கொள்ளி எறும்பாகத் தவித்தான்.

அவனது பதிலுக்காக ஆவலோடு காத்திருந்த ரவியை எதிர்கொள்ள அந்தரமாக இருந்தது.

''காயா,பழமா மச்சான்?''

பொறுமையின்றிக் கேட்ட நண்பனுக்கு மௌனமே பதிலானான்.

''என்ன, மச்சான், என்ன சொன்னவள்?''

''.......'' முகுந்தனின் மௌனம் நிலைமையை புரிய வைத்தது. இருண்டு சுருங்கிய முகத்துடன் நண்பனை ஏமாற்றத்துடன் நோக்கினான்.

''தனக்கு விருப்பமில்லையாம்...''

''ஏனாம்...?''

நண்பனின் கேள்விக்கு முகுந்தனால் பதில் சொல்லமுடியவில்லை. அவள் தன்னை விரும்புவதை நண்பனிடம் எப்படிக் கூறுவது?

''வீட்டிலை காதலை விரும்ப மாட்டினமாம்..'' ஒருவாறு வாயில் வந்த பொய்யைக் கூறினான். ரவி அவனது பதிலில் நொடிந்து போனான். அதன் பின்னர் அவன் தேவதாஸ் கோலம் பூண்டான். முகுந்தனிடம் கூட அதிகம் வருவதில்லை. அவனைப் பார்க்க முகுந்தனுக்கு அந்தரமாக இருந்தது.

இன்னொருபுறம் நண்பனின் விலகல், ராணியுடன் பழகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக அவர்களது காதல் செழித்து வளர்ந்தது.
நண்பனுக்கும்,பிறருக்கும் தெரியாதவாறு இரகசியமாகவே அவர்கள் பழகினார்கள்.

இதற்கிடையில் திடீரென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பம் முகுந்தனுக்குக் கிடைத்தது. பிரிவின் துயர் காதலர் இருவரையும் வாட்டினாலும் வாழ்வில் முன்னேற வேண்டுமானால் எதையும் தாங்கிக் கொள்ளத்தானே வேண்டும் என எண்ணி மனம் தேறினார்கள்.

கண்ணீரிடையே விடையளித்தபோது ராணி கலங்கியபடி கூறிய வார்த்தைகள் இப்பொழுதும் அவன் மனதில் ஆழமாய்ப் பதிந்திருந்தன.
''முகுந்தன்... ஒவ்வொரு நாளாக எண்ணியபடி உங்களின் வரவுக்காக காத்திருப்பேன்... என்னை ஏமாற்றிவிடாதீர்கள்...'' என்று அன்று கூறி விடைகொடுத்தவள் இன்று அவனையே ஏமாற்றிவிட்டு இன்னொருவன் மனைவியாக நிற்கிறாள். அதுவும் அவனது நண்பனின் மனைவியாக!

கலங்கிய நெஞ்சோடு குளக்கரையில் அமர்ந்திருந்தபோது ''முகுந்தன்'' என்ற குதூகலமான அழைப்புக் கேட்டுத் திரும்பினான். மலர்ந்த முகமும் புன்னகையுமாக ரவி! முகுந்தன் வந்தபோது ஊரில் நிற்காத ரவி இப்போது வந்ததும் நண்பனைத் தேடி ஓடி வந்திருக்கிறான். முகுந்தனால் ரவியை நேருக்கு நேர் நோக்க முடியாமலிருந்தது.

ரவி அவனை ஏமாற்றினான் என்றும் சொல்லமுடியாது. அவனுக்கு முகுந்தன் - ராணி காதல் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், ராணிதான் தனக்கு பெரும் துரோகம் இழைத்து விட்டாள் எனக் கருதினான் முகுந்தன்.

''முகுந்தன்,என்ன யோசிக்கிறாய்? எனக்குத் திருமணம் முடிந்ததை அறிந்திருப்பாய் தானே?... நான் விரும்பியபடியே ராணிதான் மனைவியானாள்... எல்லாம் இறைவன் செயல்..'' ரவி குதூகலமாகக் கூறினான்.

ராணி எப்படி சம்மதித்தாள் என்று ரவியிடம் கேட்க வேண்டும் போலிருந்தது. எனினும், அவன் கேட்கவில்லை. மனதிலே தயக்கம். இதற்கிடையில் ரவியே கூறினான். ''எனக்கிருந்த மனநிலையில் உன்னோட தொடர்புகளும் விட்டுப் போய் விட்டது. நடைப்பிணமாக திரிந்து கொண்டிருந்த வேளைதான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது.'' கூறிவிட்டு நிறுத்தினான் ரவி. முகுந்தனுக்கு நடந்ததை அறியும் ஆவல்.

''ஒரு நாள் மதிய வேளை குளத்தடியில் சனநடமாட்டம் இருக்கவில்லை. பித்துப்பிடித்த மனநிலையில் நான் தூண்டில் போட்டபடி இருந்தபோது, குளத்தில் ஆழமான பகுதியில் யாரோ தற்கொலை செய்யும் நோக்கத்துடன் குதித்த சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு இவ்வுலகுக்கு வந்தேன். அடுத்த கணமே என்னைச் சுதாகரித்துக் கொண்டு குளத்தில் குதித்து நீந்திச் சென்று காப்பாற்றிக் கரைக்கு இழுத்து வந்தேன். பார்த்தால் அது ராணி! சுயநினைவின்றிக் கிடந்த அவளது உடலுள் இருந்த நீரை வெளியேற்ற அமுக்கினேன். அப்பொழுது சுவாசம் தெரியவில்லை. உடனே முதலுதவியாக வாய் மூலம் செயற்கைச் சுவாசம் கொடுத்து, மார்பை அமுத்தி இதய ஓட்டத்தை சீர்செய்தேன். கடவுளை வேண்டியபடி, கலங்கிய மனதுடன் நான் செய்த முதலுதவியில் ராணி சுய நினைவுக்கு வந்தாள். மனம் பூரித்தது.''

ரவி கூறிவிட்டு நிறுத்தினான். அவனுக்கு அவள் ஏன் தற்கொலை முயற்சியில் இறங்கினாள் என்று புரியவில்லை. தொடர்ந்து ரவியே கூறினான்.

''ஒருவருக்கும் சொல்லாத ஒரு ரகசியத்தை உனக்கு சொல்கிறேன். ஊரறியாத விசயம், உனக்குள் மட்டுமே வைத்துக்கொள். முதல் நாள் நடந்த சுற்றிவளைப்புத் தேடுதலின்போது,ராணி வீட்டில் தனியே இருந்திருக்கிறாள். காமப் பசியில் அலையும் கொடியவர்கள் அவளை வல்லுறவுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். அதனால் மனமுடைந்துதான் ராணி தற்கொலை முயற்சியில் இறங்கினாள். 'என்னை ஏன் காப்பாற்றினீர்கள்? சாக விட்டிருக்கலாமே!' என்று கதறி அழுதாள் ராணி. நான் எவ்வளவோ ஆறுதல் கூறி அவள் வாழவேண்டியவள் என்பதை எடுத்துச் சொன்னேன். கூடவே அவள் கெட்டுப் போகவில்லை. வல்லுறவுக்கு உள்ளாகினாளே அன்றி மனதாரத் தப்பேதும் செய்யவில்லை என்பதை எடுத்துச் சொன்னேன். அப்புறம் அவளை நான் உயிருக்கு உயிராக நேசிப்பதையும், எனது காதலை ஏற்றுக்கொள்ளும்படியும் கூறினேன். முதலில் மறுத்தவள், பின்னர் படிப்படியாக மனம் மாறி சம்மதித்தாள்.''

ரவி எல்லாவற்றையும் கூறிய பின்னர் முகுந்தன் மனதில் ஒரு தெளிவு ஏற்பட்டது.


எது எப்படியோ முகுந்தன் பிடித்த விரால் மீன் நண்பன் ரவிக்குக் கிடைத்து விட்டது. தூண்டில் மீனான ஒரு நிலையில் தான் ராணியும் சம்மதித்திருக்கிறாள் என எண்ணித் தனது மனதை சமாதானப்படுத்திக் கொண்டான் முகுந்தன். *

# ராசி பலன்

**14-07-2008 முதல் 20-07-2008 வரை**

பொ. சந்திரலிங்கம்


### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை1.

காரியத்தடை விலகும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு,வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### இடபம்



கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர்.தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.


### மிதுனம்



மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம்1,2,3

காரிய தடை இருக்கும். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம்.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### கடகம்



புனர்பூசம் 4 , பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைக் கொள்ளக்கூடும். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புக் காலதாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரிய தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர்.பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம்.தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.


### கன்னி



உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர்கள், அயலவர்கள் விலகி இருப்பர். தாய் நலமில்லை,தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புத் தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### துலாம்



சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும்.பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலமில்லை.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம் . எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.


### மகரம்



உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2

காரியத்தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.


### கும்பம்



அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3

காரியத் தடை இருக்கும். பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்லவீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.



# உலகெங்கும் பொங்கும் தமிழ்!

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை, எந்தச் சக்தியாலும் ஒடுக்கி - அடக்கிவிடமுடியாது என்பதைப் பறைசாற்றும் வகையில புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் ஒன்றுதிரண்டு 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுகள் மூலம் தமது உணர்வுகளை உலகநாடுகளுக்கு எடுத்துக்காட்டி வருகின்றனர்.

தமிழர்களின தன்னாட்சிக் கோரிக்கையை முன்வைத்தும் தமிழீழ விடுதலைப புலிகள்தான் தமிழ்மக்களின் காவலர்கள், புலிகள் அமைப்பு ஒரு விடுதலை இயக்கம் என்பவற்றை வலியுறுத்தியுமே இந்த எழுச்சி நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

நியூசிலாந்து, டென்மார்க், நோர்வே, இத்தாலி, பின்லாந்து, பிரான்ஸ், தென்னாபிரிக்கா நெதர்லாந்து, பெல்ஜியம், சுவீடன், ஜேர்மனி, சுவிஸ், ஆஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நடைபெற்று முடிந்துள்ளன.

தமிழகத்தில் இருந்து சென்ற தமிழின, தமிழக உணர்வாளர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அந்தந்த நாடுகளின வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தினார்கள்.

முதலில் 'பொங்கு தமிழ்' இடம்பெற்ற நாடுகளை விட கனடா, சுவிஸ் மற்றும் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வுகளில் வரலாறு காணாத அளவுக்கு மக்கள் திரண்டிருந்தனர்.






## கனடாவில்

கரும்புலிகள் தினமான ஜூலை 5 ஆம் திகதி கடந்த சனிக்கிழமை கனடாவின் ரொறன்ரோவில் உள்ள டவுன் வியூ பூங்காத் திடல் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததோடு திடலின் நடுவில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பெரிய அளவிலான உருவப்படமும் வைக்கப்பட்டிருந்தது. கனடாவின் பல பாகங்களில் இருந்தும் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை வயது வேறுபாடு இன்றி தலைவர் பிரபாவின் உருவப் படங்களை கையில் ஏந்தியவாறு நிகழவு நடைபெற்ற திடலில் ஒன்று திரண்டனர்.

பிற்பகல் 3 மணியளவில் புலிக்கொடி ஏற்றப்பட்டமையை தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. கனடாப் பிரதிநிதிகள், வெளிநாட்டுப் பிரமுகர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் உரைகள் அங்கு இடம்பெற்றன.

தாயகத்தில் இருந்து விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களின் உரைகளும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வை வெளிநாடுகளில் இருந்து ஒளி - ஒலிபரப்பாகும் தமிழ் ஊடகங்களும் கிளிநொச்சியில் இருந்து 'புலிகளின் குரல்' வானொலியும் நேரடியாக அஞ்சல் செய்தன.

நிகழ்வின் இறுதியில் 'பொங்கு தமிழ்' பிரகடனம் மேற்கொள்ளப்பட்டது.

அண்மைக்காலத்தில் ஈழத்தமிழர்கள் தொடர்பில் கனேடிய அரசு எடுத்த முடிவுக்கு தமது கடும் எதிர்ப்பைக் கனடா வாழ் தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு அமைதி வழியில் இதன்மூலம் வெளிக்காட்டியிருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை.

'பொங்கு தமிழ்' நிகழ்வையொட்டி கனடாவாழ் தமிழர்களின் அனைத்து நிறுவனங்களும் அன்றையதினம் மூடப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வில் சுமார் ஒருலட்சம் ஈழத்தமிழர்கள் கலந்துகொண்டனர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## ஆஸ்திரேலியாவில்

இதேபோன்றுதான் அன்றையதினம் ஆஸ்திரேலியா நாட்டின் விக்டோரியா மாநிலத்தில் மெல்பேர்ண் நகரிலும் சுவிஸ் நகரின் தலைநகர் பேர்ணிலும், 'பொங்குதமிழ்' நிகழ்வு பேரெழுச்சியுடன் நடைபெற்றுள்ளது.

மெல்பேர்ண் நகரின் மையத்தில் 'பெடரேஷன்' சதுக்கத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஆயிரக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் பங்குபற்றியிருந்தனர்.

இவ்வாறான 'பொங்கு தமிழ்' நிகழ்வு மூலம் ஈழத்தமிழர்கள் தொடர்ந்து குரல்கொடுக்கும் போதே ஈழத்தமிழர்களின அபிலாஷை உலகின் காதில் ஆழமாகப் பதியும் என எதிர்பார்க்கலாம்.





